இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 165 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 27 புதன்கிழமை 10.05.2017

## முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை லொஸ் ஏஞ்சல்ஸில்

கொழும்பு, மே 10
தமிழீழத் தேசியத் துக்க நாளாகிய மே 18 ஆம் திகதியன்று முள்ளிவாய்க்கால் மூன்றாவது நினைவுப் பேருரை அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ளது. >> 26

## வடமாகாண சபை நேற்று பட்டதாரிகளால் முற்றுகை

அமர்வில் பங்கேற்காது திரும்பினார் முதலமைச்சர்



யாழ்ப்பாணம், மே 10
வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் இணைந்து வடக்கு மாகாண சபையை நேற்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். சபை அமர்வுக்கு வருகை தந்த முதலமைச்சரை தமக்கான வாக்குறுதிகளை வழங்காது உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை. இதனால் >> 27

## வேலை வழங்கும் அதிகாரம் மாகாண சபையிடம் இல்லை

கொழும்பு அரசிடம் கேளுங்கள் என பட்டதாரிகளுக்கு விக்கி புத்திமதி

யாழ்ப்பாணம், மே 10
வேலை கோரும் பட்டதாரிகள், கொழும்பில் அரச தலைவர் அலுவலகத்தின் முன்பாகவும், தலைமை அமைச்சர் அலுவலகத்தின் முன்பாகவும்தான் போராட்டம் நடத்த வேண்டும். வெறும் >> 28

# வித்தியா படுகொலை வழக்கை விசாரிக்க ‘ட்ரயல் அட் பார்’

சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை
கொழும்பில் நடத்தவும் யோசனை முன்வைப்பு

கொழும்பு, மே 10
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் முன்னிலையில் ‘ட்ரயல் அட் பார்’ முறையில் நடத்த சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்று அறிய முடிகின்றது. கொழும்பில் இந்த விசாரணையை முன்னெடுக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்குச் சென்ற வேளை கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்பு படுகொலை செய்யப்பட்டார். மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 10ஆம் மற்றும் 12ஆம் சந்தேகநபர்கள் வழக்கிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

கொலைக் குற்றச்சாட்டு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நிறைவடைந்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் மேலதிக நடவடிக்கைக்காகப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. படுகொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 10 பேரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்புக்காக இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது. >> 28




மக்களே எல்லாத்தையும் கேட்டு பெற வேண்டும் என்றால் இவையள்???

## போர்க்குற்ற விசாரணையில் கலப்பு நீதிமன்ற பொறிமுறைக்கு சந்திரிகா யோசனை

நம்பகத்தன்மைக்கு அதுவே சிறந்ததெனவும் எடுத்துரைப்பு



கொழும்பு, மே 10
போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். அதற்காக நடத்தப்படும் போர்க்குற்ற விசாரணையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பகத்தன்மை ஏற்பட வேண்டும். அதற்கு வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றப் பொறிமுறையே அவசியம்" >> 28

## இந்தியக் ஹெலிகள் இலங்கைக்கு வந்தன

மோடிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக

கொழும்பு, மே 10
இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து நான்கு சிறப்பு உலங்கு வானூர்திகள் இலங்கைக்கு நேற்று முன்தினம் >> 26

## கிளிநொச்சி இளைஞன் எலிக் காய்ச்சலால் சாவு

யாழ். மே 10
கிளிநொச்சியில் எலிக் காய்ச்சலால் இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சி பாரதிபுரம் விஸ்வமடுவைச் சேர்ந்த எம். சதீஸ்குமார் (வயது -19) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காய்ச்சல் காரணமாகக் கிளிநொச்சி மாவட்ட >> 26

## இந்திய மருத்துவர்களை அழைக்க அரசு தீர்மானம்


அடிக்கடி நடக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க

கொழும்பு, மே 10
அரச மருத்துவர்கள் அடிக்கடி மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க இந்திய >> 27

## பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு

ஒருவர் உயிரிழப்பு
கொழும்பில் பயங்கரம்

கொழும்பு, மே 10
கொழும்பு, பிலியந்தல நகரில் பொலிஸ் அதிகாரிகளை இலக்கு வைத்து நேற்றிரவு >> 27



‘யாழ் குடாவிலும் புத்தர் துணை” என்னும் தொனிப்பொருளில் வெசாக் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் பண்ணையை அண்டிய பகுதிகளை இராணுவத்தினர் வெசாக் வெளிச்சக் கூடுகளால் அலங்கரித்துள்ளனர்.

## அச்சுறுத்துகிறார் ராஜித

தொழிலாளர் அமைப்புக்கு மருத்துவர் சங்கம் முறைப்பாடு

கொழும்பு, மே 10
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மருத்துவர் சங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் >> 27

சுன்னாகம் ஒயில் வழக்கு:

## குடிதண்ணீர் விநியோகத்தை மட்டுப்படுத்தக் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மே 10
நிலநீர் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் தண்ணீரைச் சுன்னாகம் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தைச் சுற்றியுள்ள 1.5 கிலோமீற்றர் சுற்றுவட்டாரப் பகுதிக்கு மாத்திரம் வழங்குவதற்கு விடுத்த >> 28

## பலாலி வானூர்தித் தள விரிவாக்கப் பணிக்காக காணி சுவீகரிக்கக்கூடாது

வடக்கு மாகாண சபையில் நிறைவேறியது பிரேரணை

யாழ்ப்பாணம், மே 10
பலாலி வானூர்தித் தளத்தை விரிவாக்கும் போது காணி சுவீகரிப்பு மேற்கொள்ளக்கூடாது என வடக்கு மாகாண சபையில் நேற்றுப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. >> 28

## ஐ.தே.க. அமைச்சர்கள் மைத்திரியிடம் கெஞ்சல்

தங்கள் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் வேண்டாம் எனக் கோரி

கொழும்பு, மே 10
தங்களது அமைச்சுப் பதவியில் மாற்றம் செய்யவேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள், அரச தலைவர் மைத்திரி >> 26

## அமைச்சரவையை மாற்ற மைத்திரி–ரணில் இணக்கம்

சுதந்திரக் கட்சி நேற்று அறிவிப்பு

கொழும்பு, மே 10
அமைச்சரவை மாற்றத்துக்கும், அமைச்சரவை இணைப் பேச்சாளர்களுள் ஒருவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நியமிப்பதற்கும், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இணங்கியுள்ளனர்.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி >> 28

## இந்திய, நேபாள தலைவர்களை வரவேற்பார் ரணில்

கொழும்பு, மே 10
இலங்கை வரவுள்ள இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, நேபாள அரச தலைவர் பித்யாதேவி பண்டாரி ஆகியோரை இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் வரவேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
இலங்கையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் >> 27



# மயிலிட்டிப் பிரதேசத்தில் வெடிபொருள் கிணறுகள்

### மீள்குடியேறிய மக்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், மே 10

மயிலிட்டியில் அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில், மற்றுமொரு கிணற்றிலிருந்து நேற்றுப் பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. எஞ்சிய கிணறுகளிலும் வெடிபொருள்கள் காணப்படக் கூடும் என்று மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மயிலிட்டி வடக்குத்துறையில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்றுக் காலை ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. ஆயிரத்து 500 துப்பாக்கி ரவைகள், 7 வெளிச்சக் குண்டுகள், 10 இனந்தெரியாத குண்டுகள் என்பன இதன்போது மீட்கப்பட்டன. இன்னும் 2 உரப்பைகளில் கட்டப்பட்டவாறு அங்கு வெடிபொருள்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் வெடிபொருள்கள் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் உள்ள கிணற்றை நேற்றுத் துப்புரவு செய்தபோதே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

காணி உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. வெசாக் தினமாகையால் சிறப்பு அதிரடிப் படையினர் வரமுடியாத நிலை உள்ளதால் துப்பரவுப் பணியை இடைநிறுத்துமாறும், வெசாக் தினம் முடிவடைந்ததும் சிறப்பு அதிரடிப் படையினரின் துணையுடன் வெடிபொருள்கள் அகற்றப்படும் என்றும் பொலிஸார் கூறினர்.

கடந்த வாரம் தமது காணிகளுக்குள் இருக்கும் கிணறுகளைத் துப்புரவு செய்யும் பணியில் மயிலிட்டி மக்கள் ஈடுபட்டனர். அப்போது அங்குள்ள கிணறு ஒன்றில் வெடிபொருள்கள் காணப்பட்டன. அதன் பின் அதிரடிப் படையினரின் உதவியுடன் அவை மீட்கப்பட்டன. இந்த நிலையில் நேற்றும் மற்றொரு கிணற்றில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-10-26)

# புலிகள் வீழ்த்திய வானூர்தியின் பாகங்கள் மீட்பு



### 25 வருடங்களின் பின் இயக்கச்சியில் கிடைத்தன

யாழ்ப்பாணம், மே 10

விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் விமானப் படையினரின் வை 08 என்ற விமானத்தின் பாகங்கள் நேற்று மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானம் 1992 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கி வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. விமானப் படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் ஆனையிறவு இயக்கச்சியில் நேற்று இந்த விமானப் பாகங்கள் மீட்கப்பட்டன.

நேற்று அங்கு சென்ற விமானப்படை உயர் அதிகாரிகள் இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் விமானத்தின் பாகங்களையும் மீட்டனர். சுமார் 25 வருடங்களின் பின்னர் குறித்த விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

(கு-4-106)

# 761 கடற்சங்குகள் வைத்திருந்தவருக்கு ரூபா 5000 தண்டம்

தென்மராட்சி மே.10

அனுமதிப் பத்திரமின்றி 761 கடற்சங்குகள் உடைமையில் வைத்திருந்த மன்னார் சிலாவத்துறை வாசிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் ரோந்து சென்ற வேளை சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபரை விசாரித்துச் சோதனையிட்டபோது அவரிடம் 761 கடற்சங்குகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றப் பத்திரம் வாசிக்கப்பட்டபோது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத ஒருவரிடம் வாகன வரிப் பத்திரம் இல்லாத வாகனத்தைக் கொடுத்த மீசாலை வாசிக்கு இரு குற்றங் களுக்குமாக நீதிவான் 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

(கு-9)

# இந்திய மீனவர் பிரச்சினைக்கு கொழும்பு அரசிடமிருந்து தீர்வு

### மோடியிடம் புதுச்சேரி முதல்வர் வலியுறுத்து

புதுடில்லி, மே 10

"இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைகொழும்புஅரசிடம்தலைமை அமைச்சர் நரேந்திர மோடி பெற்றுக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு புதுச்சேரி முதலமைச்சர் நாராயணசுவாமி வலியுறுத்தினார்.

கொழும்பில் இடம் பெறும் உலக வெசாக் நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு நாளை வருகை தருகிறார். அவரின் கொழும்புப் பயணத்துக்கு முன்னதாக நேற்று புதுடில்லியில் சிறப்பு மாநாடு இடம்பெற்றது. இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போதே புதுச்சேரி முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை செல்லும் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, இலங்கைக் கடல் எல்லையில் இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் கொழும்பு அரசிடம் அழுத்தம் திருத்தமாகப் பேச்சு நடத்த வேண்டும் என்றும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. (வ)

# எனது தாயும் கணவருமே தந்தையைக் கொன்றனர்

### வத்தளையில் கொல்லப்பட்டவரின் மகள் வாக்குமூலம்

கொழும்பு, மே 10

தந்தையாரின் தொந்தரவு காரணமாகத் தனது கணவரும், தாயும் இணைந்து தந்தையைக் கொலை செய்து புதைத்தனர். சந்தேகத்தை மறைக்க அவர் வெளிநாடு சென்றுவிட்டார் என்று கதை வேறு கூறியுள்ளனர்.

இவ்வாறுசடலமாகமீட்கப்பட்டவரின் மகள்வாக்குமூலம்வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


வத்தளை - கெரவலபிட்டிய பிரதேசத்தில் காணாமற்போனதாக கூறப்பட்ட 65 வயதுடைய குடும்பத் தலைவரின் உடலம் நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது. அதன்போதே அவரது மகள் மேற்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தினந்தோறும் குடிபோதையில் வரும் தந்தை எம்மைத் தொந்தரவு செய்ய முற்படுகிறார். இதனால் எனது கணவரும், தாயும் இணைந்து தந்தையைக் கத்தியால் குத்திக் கொலை செய்து வீட்டின் பின்புறத்தில் புதைத்தனர் என்று மகள் தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

குறித்த குடும்பத் தலைவரைக் காணவில்லை என்று அயலவர்கள் கண்டறிந்தனர். குறித்த வீட்டுக்காரரிடம் கேட்டபோது அவர் வெளிநாடு சென்றுவிட்டார் என்று கூறியுள்ளனர். இதனால் சந்தேகமடைந்த அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தனர். அது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையின்போது உடலம் மீட்கப்பட்டது.

கொலை தொடர்பில் மனைவி, மகள் மற்றும் மருமகன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர். (கு-4)

# சீனாவில் நடக்கும் கல்விச் செயலமர்வில் வடமாகாண அதிபர்கள் மூவர் பங்கேற்பு



கொழும்பு, மே 10

சிறப்புப் பயிற்சிக்காக சீன சென்ற பாடசாலை அதிபர்களில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூவரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர்களுக்கான கல்வி நிர்வாக அபிவிருத்திச் செயலமர்வு சீனாவின் சங்காய் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான 20 நாடகள் இடம்பெறுகிறது.

இந்தச் செயலமர்வில் இலங்கையிலிருந்து 16 அதிபர்கள் பங்கேற்கின்றனர். அதில் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் 3 அதிபர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தரம் 3 அதிபர்கள் 4 பேருக்கு இந்தச் செயலமர்வில் பங்கேற்பதற்காக கொழும்பு கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டனர். எனினும் 3 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு தெரிவாகிய ஒருவரை விடுவிப்பதற்கு எம்மால் அனுமதி வழங்கப்படவில்லை" என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

(வ-101)

# சீருடையணிந்த இருவரால் சங்குப்பிட்டியில் தொல்லை

### மக்கள் விசனம்

கேரதீவு சங்குப்பிட்டிப் பாலப் பகுதியில் பொலிஸ் சீருடையணிந்த இருவர் வீதியால் சென்றவர்களை மறித்து பணம் வழங்குமாறு வற்புறுத்தினர் என்று பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

"கேரதீவு சங்குப்பிட்டி பாலத்தில் நேற்றுமாலை பொலிஸ் சீருடை அணிந்த இருவர் மோட்டார் சைக்கிளுடன் நின்றனர். அவர்கள் வீதியால் பயணித்தவர்களை மறித்து விசாரித்தனர். 2 தினங்களுக்கு மதுபானசாலைகள் மூடப்படுவதால் தமக்கு சாராயம் வாங்குவதற்கு பணம் தருமாறு அவர்கள் வற்புறுத்தினர். பணம் தராவிடின் பொய்யான குற்றச்சாட்டுக்களுடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் மிரட்டினர்" என்று மக்கள் தெரிவித்தனர். (வ26)

# மோடியின் வருகையில் அரசியல் எதுவுமில்லை

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 10
இந்தியத் தலைமை அமைச்சரின் இலங்கைப் பயணம் எந்தப் பொருளாதார. அரசியல் நோக்கங்களையும் கொண்டதாக இருக்காது. இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.
ஐ.நா. வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக, இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, நாளை இலங்கைக்கு வரவுள்ளார்.
இது குறித்து தகவல் வெளியிட்ட இந்தியத் தூதுவர், நாளை மாலை கங்காராமய வெசாக் வலயத்தைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து. மோடி திறந்து வைப்பார். இந்தியத் தலைமை அமைச்சரின் இந்தப் பயணம் ஒரு யாத்திரை போலவே இருக்கும்.
இந்தியத் தலைமை அமைச்சருக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாளை மறுநாள் தனிப்பட்ட முறையில் இராப்போசன விருந்து அளிப்பார். அதன் பின்னர், வெள்ளிக்கிழமை வெசாக் நிகழ்வுகளில் அவர் பங்கேற்றுவிட்டு டிக்கோயாவில் மருத்துவமனையைத் திறந்து வைக்கச் செல்வார். அங்கு மலையகத் தமிழர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.
அங்கிருந்து கண்டிக்குச் செல்லும் இந்தியப் பிரதமர், அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெறுவார். அதையடுத்து, புதுடில்லி திரும்புவார் என்று தெரிவித்துள்ளார். (த-5)

# தாயும் குழந்தையும் தாக்கப்பட்டு கொலை

கொழும்பு, மே 10
கொஸ்கொட தெற்கு பொரலுகெடிய பிரதேசத்தில் தாயும் குழந்தையும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
38 வயதுடைய தாயும் அவரது 6 மாதங்களான குழந்தையுமே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். குறித்த பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்த ஒருவரே இந்தக் கொலையை மேற்கொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.
அவரது கணவர் மருத்துவமனையில் உளநலச் சிகிச்சை பெற்று வருகிறார்.
இதேவேளை,
மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் 27 வயதுடைய மாணவியொருவர், அவர் தங்கியிருந்த அறையின் குளியலறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரது உயிரிழப்பு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது. சடலம் நேற்றுக் காலை அவரது கணவரால் கண்டுபிடிக்கப்பட்டது. உயிரிழந்த பெண், தனது கணவருடன் பிலியந்தலை மடபான திம்பிரிகஸ்வத்த பிரதேசத்தில் தற்காலிகக் குடியிருப்பொன்றில் வசித்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த சில நாள்களில் மட்டும் 3 பேர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (4)

# மலையகத்தில் கற்பிக்க விரும்பும் பட்டதாரிகள் உடனடியாக வாருங்கள்

## நியமனத்தை இப்போதே வழங்குவதற்கு தயார் என்கிறார் அமைச்சர் இராதாகிருஷ்ணன்



யாழ்ப்பாணம், மே 10
கணித, விஞ்ஞான உயர்தர மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடிய பட்டதாரிகள் நாட்டில் எங்கிருந்தாலும் பரவாயில்லை. மலையகத்தில் உங்களுக்கு ஆசிரியர் தொழில் செய்ய விருப்பம் என்றால் உடனடியாக என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கான நியமனத்தை நான் பெற்றுத் தருகின்றேன். இந்தியாவிலிருந்து பட்டதாரிகளைக் கொண்டு வருவதை விமர்சிப்பவர்களுக்கு நான் சவால் விடுகின்றேன். முடிந்தால் அறிக்கை விடாமல் உயர்தரக் கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கக் கூடிய பட்டதாரிகளைக் கொண்டு வந்து தாருங்கள். இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவரது அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
மலையகத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள 25 கணித, விஞ்ஞான பாடசாலைகளுக்கும் ஏனைய உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கப்படும் பாடசாலைகளுக்கும், விஞ்ஞான, கணித பாட ஆசிரியர்களை இந்தியாவில் இருந்து வரவழைக்கப்படுவதை பலர் பல விதமாக விமர்சிக்கின்றனர்.
அவர்களின் பிரதான கேள்வி இலங்கையில் பட்டதாரிகள் இல்லையா? தற்போது தொழிலுக்காகப் போராட்டம் நடத்தும் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளலாம் தானே?. இவர்களில் எத்தனை பேர் உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கக் கூடிய பட்டதாரிகளாக இருக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலோனோர் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுப் பட்டதாரிகள். இவர்களை வைத்துக் கொண்டு உயர்தரத்தில் எப்படி கணித விஞ்ஞானப் பிரிவை அபிவிருத்தி செய்ய முடியும்.
இலங்கையில் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதும் அதற்காக போராட்டங்கள் நடத்துவதும் எனக்குத் தெரியும். இவர்களில் பெரும்பாலோனோர் கலை வர்த்தகத் துறைகளைச் சார்ந்தவர்கள். இவ்வாறு மலையகத்திலும் உள்ளார்கள். போதிய அளவு கணித, விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் முதல் அமைச்சர்கள், கல்வி அமைச்சர்களையும் தொடர்பு கொண்டு கேட்டோம். அங்கு இருந்தாலாவது பட்டதாரிகளைத் தாருங்கள். இங்கும் போதிய அளவு கணித, விஞ்ஞானப் பட்டதாரிகள் இல்லை என்று அவர்களும் கூறுகின்றார்கள். இதனை நிவர்த்தி செய்ய ஓய்வு பெற்ற கணித, விஞ்ஞான ஆசிரியர்களைக் குறிப்பிட்ட காலத்துக்கு மீண்டும் இணைக்கலாம் என்று எண்ணி நாடாளுமன்ற அனுமதியையும் பெற்றோம். அதற்கும் இதுவரை யாரும் விண்ணப்பிக்கவில்லை. தற்போதும் அவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தளபாடங்கள் உட்பட எல்லாம் வழங்கியபோதும் போதிய அளவு ஆசிரியர்களை வழங்க முடியாமல் உள்ளது. கணித, விஞ்ஞானப் பட்டதாரிகள் இலங்கையில் உருவாகும் வரை பொறுத்திருக்க முடியாது.
அதனாலேயே, இந்தியத் தூதுவருடன் பேசி இந்தியாவில் இருந்தாவது கணித, விஞ்ஞானப் பட்டதாரிகளைக் குத்தகை அடிப்படையிலோ அல்லது போர் காரணமாக வடக்கில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று அங்கு படித்து முகாம்களில் இருக்கும் கணித, விஞ்ஞானப் பட்டதாரிகளை இலங்கைக்கு அழைத்து நியமனம் வழங்கலாம் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தேன். இவர்களை இங்கு அழைப்பதன் ஊடாக அவர்களின் மீள் குடியேற்றமும் உறுதி செய்யப்படுகின்றது. இவர்களும் இலங்கையர்கள் தானே. அவர்களுக்கு நியமனம் வழங்குவதில் தவறில்லை.
தற்போது வடக்கு மற்றும் கிழக்கில் போராட்டம் நடத்தி வரும் பட்டதாரிகளிடம் கதைத்தோம். உங்களுக்கு மலையகத்தில் சேவை செய்ய முடியும் என்றால் வாருங்கள் என்று அவர்கள் என்னை வந்துச் சந்திப்பதாகவும் கூறி யுள்ளார்கள் என்றார். (த-5)

# மே 15 ஆம் திகதி இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ்

## அயலுறவு அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, மே 10
எதிர்வரும் 15 ஆம் திகதி பிரஸ்சல்சில் வெளியிடப்படும் சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இலங்கைக்கு மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்படும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
மாத்தறையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் பறிக்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவதற்கு தற்போதைய அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



இந்தச் சலுகையை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான பல தடைகள் நீங்கியுள்ள நிலையில், இந்த மாத நடுப் பகுதியில் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
எனினும், 3 ஆண்டுகளுக்கு மாத்திரமே இந்தச் சலுகை கிடைக்கும் என்றும், அதற்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு செய்துகொள்ள வேண்டியிருக்கும் என்று அயலுறவுத்துறை பிரதி அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார். (த-5)

# ஒவ்வொரு 100 பேருக்கு 135 தொலைபேசிகள்

## மத்திய வங்கியின் ஆண்டறிக்கை கூறுகிறது

கொழும்பு, மே 10
இலங்கையில் ஒவ்வொரு 100 பேருக்கும் 135.7 தொலைபேசிகள் பயன்பாட்டில் இருப்பதாக, மத்திய வங்கியின் 67 ஆவது ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
ஒவ்வொரு 100 பேருக்கும் 12 தரைவழித் தொலைபேசிகள் பயன்பாட்டில் இருக்கின்றன. அலைபேசிகளையும் சேர்த்துக் கொள்ளும்போது, ஒவ்வொரு 100 பேருக்கு 135.7 தொலைபேசிகள் இருக்கின்றன.
இலங்கையின் சனத்தொகையில் 23.2 வீதமானோர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.
வங்கிகள் தொடர்பான தகவல்களும் மத்திய வங்கி ஆண்டு அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.
இலங்கையில் ஒரு இலட்சம் பேருக்கு 18 என்ற அடிப்படையில், தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன.
2 ஆயிரத்து 984 அங்கீகாரம் பெற்ற வணிக வங்கிக் கிளைகளும், 630 அனுமதி பெற்ற சிறப்பு வங்கிக் கிளைகளும் இலங்கையில் இருக்கின்றன.
ஒரு இலட்சம் பேரில், 6 ஆயிரத்து 206 பேர் என்ற அடிப்படையில், கடனட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒரு இலட்சம் பேருக்கு 17 என்ற அடிப்படையில், வங்கிக் கிளைகள் இருக்கின்றன, என்றும் மத்திய வங்கி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த5)

# நியாயங்களை முன்வைக்க கீதாவுக்கு அவகாசம் வழங்க வேண்டுமென்கிறார் தினேஸ் குணவர்தன

கொழும்பு, மே 10
கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை உடனடியாக நீக்க முடியாது. அவர் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேல் முறையீடு செய்துள்ளார். அவர் தனது நியாயங்களை முன்வைப்பதற்குள்ள சட்டரீதியான அவகாசம் இறுதி மணி நேரம் வரை உறுதி செய்யப்படவேண்டும்.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.
பொரளையில் அமைந்துள்ள வஜிர சர்மா பௌத்த மைய நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் இலங்கையின் குடிமகன் அல்ல. சிங்கப்பூர் அரசமைப்பின் பிரகாரம் சிங்கப்பூர் குடிமகன் மற்றுமொரு நாட்டின் குடிமகனாக இருக்க முடியாது. பிணைமுறி விவகாரத்தில் கோப் குழுவுக்கு அவர் வழங்கிய வாக்குமூலத்தில் தான் ஒரு இலங்கை குடிமகன் அல்ல என்பதை தெரிவித்துள்ளார்.
இலங்கை அரசமைப்பின் 105 ஆவது உறுப்புரையின் பிரகாரம் மத்திய வங்கியின் ஆளுநராக தெரிவு செய்யப்படும் நபர் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும். ஆனால், அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளப்படாமலேயே மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்.
இலங்கைக் குடிமகன் அல்லாத அர்ஜுன மகேந்திரன் எவ்வாறு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநராக நியமிக்கப்பட்டார்?. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப் பட்ட அர்ஜுன மகேந்திரன் இலங்கைக் குடிமகன் இல்லாத நிலையில், மத்திய வங்கியின் ஆளுநராக சத்தியப் பிரமாணம் செய்யாத நிலையில் எவ்வாறு இலங்கையின் நாணயத்தில் அவரது கையொப்பம் இடம்பெற்றது.
வெசாக் விடுமுறையை தொடர்ந்து இலங்கையின் நாணயத்தில் வெளிநாட்டுக் குடிமகனாகிய அர்ஜுன மகேந்திரனுக்கு கையெழுத்திட்டமை சட்டத்துக்குட்பட்ட செயலா? வெளிநாட்டுக் குடிமகனாகிய அர்ஜுன மகேந்திரன் கையெழுத்திட்ட நாணயம் சட்ட ரீதியாகச் செல்லுபடியாகுமா? என்ற கேள்விகளுக்குப் பதில் தேடும் நோக்குடன் வழக்கொன்றை தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளோம் என்றார். (த-5)

# சட்டம் ஒழுங்கு குறித்த கூட்டத்தை வடக்கு முதலமைச்சர் நடத்தாதது ஏன்?

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம் மே 10

மாவட்டச் செயலரால் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாகவும் சட்ட ஒழுங்கு தொடர்பாகவும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடிகிறது. அதேபோன்று மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் சட்ட ஒழுங்கு தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏன் கலந்துரையாட முடியவில்லை?

இவ்வாறு வடக்கு மாகாண சபையில் கேள்வியெழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் உறுப்பினர் லிங்கநாதனால், வடக்கிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு பசு மாடுகள் கடத்தப்படுவதைத் தடுக்க அவற்றைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இந்தப் பிரேரணை மீதான் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில்பெரும்பங்களிப்பைவழங்கும் பசு மாடுகள் வெளி மாவட்டங்களுக்குக் கடத்திச் செல்லும் நிகழ்வுகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. வடக்கு மாகாணத்தின் தேவைகளுக்கு ஏற்ப அதனை பயன்படுத்துவதை விடுத்து மாகாணத்துக்கு வெளியே அவற்றைக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் ஆகியோரின் அனுமதியுடன் கால்நடைகள் வெளிமாவட்டங்களுக்கு கொண்டுசெல்லப்படுகின்றன. அவற்றை வடக்குக்கு வெளியே கொண்டு செல்வதற்கு வழங்கப்படும் அனுமதியை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

"குறைவான அதிகாரங்களைக் கொண்ட அரச அதிகாரியான மாவட்டச் செயலர், மாவட்டத்தின் சட்ட ஒழுங்கு தொடர்பிலும் பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றார். அதிகாரங்களைக் கொண்டுள்ள மாகாண முதலமைச்சரால் இதனை ஏன் செய்ய முடியாதுள்ளது?

மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரம்என்பதுவேறு, சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்துவது என்பது வேறு. எனவே இதனை நடைமுறைப்படுத்த முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றது. முதலமைச்சர் இன்றுவரை அவ்வாறான கூட்டங்களை கூடியதாக இல்லை. ஆகவே சபையில் முன்வைத்துள்ள விடயங்கள் சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்ட விடயமாகும். இதனை பிரேரணையாக ஏற்கமுடியாது" என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

உறுப்பினர் லிங்கநாதனால் முன்வைக்கப்பட்ட பிரேரணையில் மாற்றங்களைச் செய்து அடுத்த அமர்வில் முன்மொழியுமாறு அவைத் தலைவர் அறிவித்தார். (வ-8)

# புலி உறுப்பினர்கள் வழங்கிய வாக்குமூலம் சட்டரீதியானது

## அநுராதபுரம் வானூர்தித் தளம் மீதான தாக்குதல் வழக்கில் நீதிமன்று அறிவிப்பு

கொழும்பு, மே 10

அனுராதபுரம் விமானப்படை முகாம் மீது வான் மற்றும் தரை வழியாகத் தாக்குதல் நடத்தினார்கள் என்று குற்றச்சாட்டப்பட்டுள்ள, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் இருவர் வழங்கிய வாக்குமூலம் சட்டப்படியானது என்று அனுராதபுரம் மேல் நீதிமன்று நேற்று அறிவித்தது.

இது தொடர்பான வழக்கு அநுராதபுர மேல் நீதிமன்றில் நீதிபதி மகேஸ் வீரமன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அனுராதபுரம் விமானப்படை முகாம் மீதான தாக்குதல் காரணமாக சுமார் 400 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மேல் நீதிமன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி அதிகாலை விடுதலைப் புலி உறுப்பினர்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அரசு அறிவித்தது. இந்தத் தாக்குதலில் 16 விமானங்கள் சேதமடைந்தன. 14 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்திருந்தனர்.

இதுபோன்ற குற்றச்சாட்டுக்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானோரின் வாக்குமூலங்கள் முன்னர் மேல் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் அவற்றில் உண்மைத் தன்மை நிரூபிக்கப்படாத தன்மை காணப்பட்டு வந்தது. இந்த நிலையில், குறித்த வழக்கில் இரண்டு பேரினதும் வாக்குமூலங்கள் சட்டரீதியானவை என்று மேல்நீதிமன்று தெரிவித்துள்ளது. (த-4)



# பிரிட்டனின் அழுத்தம் இலங்கை மீது அவசியம்

## நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் அந்நாட்டு எம்.பிக்களிடம் வலியுறுத்தல்

இலங்கையின் பொறுப்புக் கூறல் குறித்து அவதானம் செலுத்தி அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் பிரிட்டன் அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசின் பிரிட்டன் செயற்பாட்டாளர்களான மயூரன், வாகீசன், ரமேஸ் ஆகியோரின் ஏற்பாட்டில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை, நாடுகடந்த அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆறுமுகம் மற்றும் யோகலிங்கம் ஆகியோர் சந்தித்து உரையாடினர். இந்தச் சந்திப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

இலங்கை அரசு பொறுப்புக் கூறுவதற்கு மேலதிகமாக இரண்டுவருட கால அவகாசம் ஐ.நாவினால் வழங்கப்பட்டமை தொடர்பாக இதன்போது ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இலங்கை அரசின் இனவழிப்பு தொடர்பான ஆவணக் கையேடும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது. இரண்டு வருட காலத்தில் பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கை அரசை கண்காணித்துப் பிரிட்டன் அரசின் ஊடாக அழுத்தங்கள் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதி நிதிகளால் முன்வைக்கப்பட்டது.

லண்டனில் நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர். (த-10)

# பிரதேச செயலர் பிரிவுகளை 360ஆக அதிகரிக்கத் தீர்மானம்

## உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு

காலி, மே 10

நாட்டிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 360ஆக அதிகரிக்கப்படும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.



காலி பத்தேகம பிரதேசத் தில் இடம்பெற்ற முதலாவது உபபிரதேச செயலகம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பிரதேச செயலாளர் பிரிவுகளை அதிகரிப்பதன் ஊடாக அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்த முடியும்.

தற்போது 323 பிரதேசசெயலாளர் பிரிவுகள் உள்ளன. அதனை 360ஆக அதிகரிப்பது இலக்காகும்" என்றும் அவர் தெரிவித்தார். (வ)

# தாவடி பத்திரகாளியை தரிசித்த பொலிஸார்

தாவடி வடபத்திரகாளி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்தத் தேர்த்திருவிழாவின்போது பொலிஸ் அதிகாரிகள் வடம் பிடித்து தேர் இழுத்தலைக் காணமுடிந்தது. ஆலய வளாகத்தில் பொலிஸ் அதிகாரிகளுக்கு மலர்மாலை அணிந்து பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டனர். தேர் இழுக்கப்படும்போது உலங்கு வானூர்தியிலிருந்து மலர்கள் தூவப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-115)

# விளையாட்டு விழா

நெல்லியடி மகாத்மா விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவும் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஐயனார் ஆலய முன்றிலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கழகத் தலைவர் வி.சத்தியப்பிரியன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனும், சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலகர் ஜி.சசிக்குமார், நெல்லியடி பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி அஜித் பிறேமந்த, கௌரவ விருந்தினர்களாக கே.நல்லைநாதன், எம். இளங்கோ ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ422)

# புற்றுநோய்க்கான 3ஆவது மருந்து இலங்கையில் விரைவில் கிடைக்கும்

புற்றுநோய்க்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 3ஆவது மருந்தை இலங்கைக்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்தார்.

அனுராதபுரம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் 2014 பி குழுவைச் சேர்ந்தவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளணி வள அபிவிருத்தி மீது அரசு சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது. ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் தாதியர் பீடம் ஆரம்பிக்கப்படும்.

மருந்து பரிசோதனைக்காக சீன அரசின் உதவியோடு தர ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. மருந்து வகைகளை வர்த்தக நாமங்களைக் கொண்டு விற்பனை செய்வதற்கு பதிலாக மருந்தின் மூலப்பெயருடன் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

விரைவில் மூன்றாவது புற்றுநோய் மருந்தை தருவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது நாட்டில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட மருந்து வகை களைவிட விலை குறைந்ததாகும். இதற்கு தேவையான ஆலோசனைகள் தேசிய ஔடத அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகள் தனியார் மயப்படுத்தப்படும்என்று சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். ஆனால் இந்த 2 துறைகளுக்கும் அரசு அதிகூடியளவு நிதியை ஒதுக்கியுள்ளது - என்றார். (வ)

# ஆசிரிய வெற்றிடத்தை நிரப்ப நேர்முகத் தேர்வு

## குறைவானோர் விண்ணப்பித்ததால் போட்டிப் பரீட்சை கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 10

வட மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் உள்ள கணித, விஞ்ஞானப் பாடங்களின் ஆசிரிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கு எதிர் வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணப் பாடசாலை களில் நிலவும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடம் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டன. 418 வெற்றிடங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

அவற்றை நிரப்புவதற்கான அனுமதி மத்திய அரசிடம் கோரப்பட்டது. மத்திய அரசு அனுமதி வழங்கியது. கடந்த பெப்ரவரி மாதம் ஒரு மாத கால அவகாசத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 284 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்தன. வெற்றிடம் அதிகமாகக் காணப்பட்டதால் பட்டதாரிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் விண்ணப்பிக்கும் காலத்தை நீடித்தோம்.

விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் அளிக் கப்பட்டு மீண்டும் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. இந்தக் காலத்தில் மேலும் 68 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. மொத்தமாக தற்போது 352 பட்டத்தாரிகள் விண்ணப்பித்துள்ளனர். எமது மாகாணத்துக்குத் தேவையான எண்ணிக்கையை அடைய 66 விண்ணப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

குறைந்தளவானோர் விண்ணப் பித்தமையால் போட்டிப் பரீட்சையின்றி நேரடியாகவே நேர்முகத் தேர்வு நடத்துவதற்கு எண்ணியுள்ளோம். நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும் - என்றார்.

(ற-101)




# சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

## சீரணி, சண்டிலிப்பாய்

# இரதோற்சவ சிறப்பிதழ் – 2017

### மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணத்தின் திவ்விய தேசமாய் விளங்கும் சண்டிலிப்பாய் சீரணி என்னும் அருட்பதியில் ஆனந்த அருள் ஆட்சி புரியும் தாய்க்கு இன்று தேர்த் திருவிழா பல ஊர் பக்தர்கள் பக்தியோடு நேர்த்தி செய்யும் புண்ணிய தலமாகிய இத்தலத்தில் சிறப்பு தனித்துவமானது அன்னை இன்று சித்திரா பௌர்ணமி நன்நாளில் தன் சிங்கரதத்தில் தேர் ஏறி அடியார்களுக்கு அருள் புரியும் பெரு நோக்கோடு இன்று தேர் வலம் வருகின்றாள். தேர்த்திருவிழா இனிதே சிறக்க மன நிறைவுடன் ஆசி கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ கு. சோமாஸ்கந்தக்குருக்கள்**
**(தேவஸ்தான குரு)**

### அம்பிகையின் அருள் பெருகட்டும்

சீரணி அம்பாள் அருள் புரிய உன் பாதத்தில் என் மனதை கொடுந்தேன் அம்மா. இசை மழை பொழிய இன்புற்ற மக்கள் எல்லாம் துன்பத்தை மறந்து இன்பத்தில் அலை மோதுகிறார்கள். கண்கொள்ளாக் காட்சியெல்லாம் அடியார் சந்நிதியில் ஆரணி பூரணி அபிராமித் தாயே உன் கடைக்கண் பாராயோ நீதான் சரணம் என்று வந்தவர்க்கு அருள் கொடுக்கும் தாயே எங்களது இதயக் கதவை துறந்து விட்டாய் அம்மா உன் பற்றை மறந்து தவிக்கும் புழுக்கள் போல் துடிதுடித்து இறப்பதைக் கண்ணால் காண்பதற்கு கருணை உள்ளம் பிறக்குதம்மா எங்கள் கனவுகளை நினைவாக்கிக் கொள்பவளே உன் நாமத்தை சொல்ல சொல்ல என் மேனி சிலிர்க்குதம்மா உன் பற்றை அறியாத மானிடர்க்கு உன் பற்றை புகட்டுகிறாய் அம்மா உன் காலடியில் வந்தாலே என் கவலை தீர்ந்துவிடும் அம்மா. தேன் அருவியில் உன் இன்பத்தை காண்பதற்கு வீழ்ந்தேன் அம்மா. இது போல் உலக மக்களுக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும் அம்மா என்றும் உன் காலடியில் சரணம் அடைந்தேன் அம்மா .இறைவனின் இதயத்தை தொடுவதற்கு நாங்கள் செய்யும் தொண்டினால் தான் இறைவனின் இதயத்தைத் தொட முடியும். இத்தொண்டு செய்பவர்களுக்கு ஒரு கையால் கொடுத்தால் மறு கைக்கு தெரியாமல் இருக்க வேண்டும்.

**தம்பையா பரஞ்சோதி - ஆதீன கர்த்தா**
**சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்.**

### ஆலய வரலாறு

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப்பிள்ளை. அன்னப்பிள்ளை. நன்னிப்பிள்ளை. மயில்வாகனம். பெரிய பிள்ளை. சின்னப்பிள்ளை. வேலர் ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இம்முறைப்படி இனசன மக்கள் எல்லோரும் சேர்ந்து வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.



**தங்கரத தேரேறி........**
சித்தர்கள் கூடி வாழும்
சீரணியாம் பதியினிலே
பக்தர்கள் புடை சூழ
பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரதத் தேரேறி
சொர்ப்பணமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாகபூசணியே......

**இ.சிறிதரன் - தலைவர்**
**இந்து இளைஞர் மன்றம்.**

### வாழ்த்துச் செய்தி



இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத்தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண குடாநாட்டின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்திபெற்ற இந்து ஆலயங்களுள் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். இங்கு வீற்றிருக்கும் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றார். இவ் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இவ் வருட வருடாந்த மகோற்சவம் ஆனது ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 11 ஆம் நாள் (24.04.2017) ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அவ்வகையில் சித்திரை மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று (10.05.2017) மகோற்சவத்தின் தேர்த்திருவிழா ஆனது மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வகையில் இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவில் தேர்த்திருவிழா சிறப்பு மலர் வெளியிடப் படுகின்றமை சிறப்பம்சம் ஆகும். இத் தேர்த்திருவிழா சிறப்பு மலரிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைவதுடன் அம்பாளின் அருள் ஆசி அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றேன்.

**உ.யசோதா பிரதேசசெயலாளர்,**
**பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்; சண்டிலிப்பாய் திருவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சீரணி நாகபூஷணி அம்பாள் தேர் ஏறிவரும் திரு நாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். அருள் வளம் நிறைந்த அம்பாளின் திருத்தேர் விழாக் காண்பதற்கு பலவூர் மக்களும் பக்தியோடு ஒன்று கூடும் நன் நாள் இன்று ஆடுவோர்கள் அடியளித்துக் கும்பிடுவார்கள் பாடிப் பரவசமாக பக்தர் கூட்டம் வீதியெல்லாம் மெய்யுருகி நிற்கும் காட்சியை இவ்வாலயத்தில் இந் நாளில் காணலாம். சீரணி அம்பாளுக்கு நேர்த்தி வைத்து காவடி எடுப்பவர் தொகை எல்லையில்லை. தனித்துவச் சிறப்பு மிக்க இத்திருநாள் சிறக்க வேண்டி எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

### இரத பவனி வரும் அன்னையின் திருவருள் கடாட்சங்கள் கிடைக்க பிரார்த்திப்போம்



எழில் கொஞ்சும் இலங்கைத்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நன் நகரில் இயற்கை எழில் மிகு பிரதேசமாம் வலி.தென்மேற்கு பிரதேசம். இங்கு உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகையானவள் சீரணி எனும் சிறப்பு மிகு திருப்பதியிலே நாகபூஷணி அம்பிகையாக வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள். இன்று அன்னையாளவள் அழகிய ரதத்திலே ஆரோகணித்து அருள்பாலித்து அடியவருக்கெல்லாம் காட்சி தரும் நன்நாளாகும். பவனிவரும் அன்னையின் அருட்கடாட்சம் எல்லோரும் பெறவேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கின்றோம். தேர்த்திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு அடியேனுக்கும் வாய்ப்பு கிடைத்தமையால் மகிழ்வடைகின்றேன்.

**குணசிங்கம் சற்குணராசா செயலாளர்,**
**வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

MANIYAM IMPEX
இல.121A
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222819,
077 3632963

ஐங்கரன் மோட்டோர்ஸ்
சியாட் ரயர், Fevicol
தயாரிப்புக்களின் ஏக
விநியோகஸ்தர்கள். ஆட்டோ.
மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர
வண்டி, வாட்டர்பம் உதிரிப்
பாகங்கள் விற்பனையாளர்.
சந்தை முன்பாக, மானிப்பாய்.

லீலா
வெதுப்பகம்
சைவ உணவகம்
சீரணி, சண்டிலிப்பாய்.

சுந்தர்சன்
பிரதான வீதி,
மானிப்பாய்.
தொ.பே: 021 22 55136

துர்க்கா
மரத்தொழிற்சாலை
மில் ஒழுங்கை.
சண்டிலிப்பாய்.
தொ.பே: 0777 114852

பாக்கியரட்ணம் ஹாட்வெயர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே: 0212250105
தரன் ரேடர்ஸ்
130, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222664

அம்பாள்
அர்ச்சனைக்கடை
சீரணி கோயிலடி,
சண்டிலிப்பாய்.

சக்தி எலக்ரிக்கல்ஸ்
மின்சார உபகரணங்கள்,
இலத்திரனியல் பொருள்கள்,
வீட்டு மின் இணைப்பு பொருள்கள்,
PVC குழாய்கள் என்பவற்றை
மலிவான விலையில் பெற்றுக்
கொள்ளலாம்.
ஓடைக்கரை வீதி, சங்கானை.

YASO TEX
பிரதான வீதி,
நெல்லியடி

நாகபூசணி
அரிசி ஆலை
சீரணிச்சந்தி,
சண்டிலிப்பாய்.

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி,சண்டிலிப்பாய்.
681/13, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தரம் 6 முதல் O/L,A/L வரை

மொடேன் மற்ஸ் அக்கடமி
MODERN MATHS ACADEMY
சண்டிலிப்பாய்.
தரம் 3 முதல் O/L A/L வரை
ஆங்கில மொழிமூல வகுப்புகளும்
நடைபெறுகின்றன.
நிர்வாகி: B.குகா

# தீர்வு கிட்டும்போது தமிழ் மக்களுக்கு காணிகள் இருக்காது

## வியாழேந்திரன் எம்.பி.தெரிவிப்பு

செங்கலடி மே 10
தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும் போது, தமிழ் மக்கள் தங்களது பிரதேசத்தில் வாழ்வதற்கான காணிகள் இருக்குமா என்ற சந்தேக நிலை தோன்றியுள்ளது. மட்டக்களப்பின் எல்லைப் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் காணிகள் பறிபோகின்றன.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.
கல்குடா கல்வி வலயத்துக்குப்பட்ட தேவாபுரம் கஜமுகன் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலைத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.



அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதை விடுத்து, அவர் இலங்கைக்கு வர யார் காரணமென தமிழ் அரசியல் தலைமைகள் சண்டையிடுகின்றனர்.
எங்களுடைய மக்களுக்கும் மாவட்டத்துக்கும், இயற்கைச்சூழலுக்கும் மாவட்டத்தின் மக்களின் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத நல்ல தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தால் அதற்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம். மட்டக்களப்பில் அபிவிருத்தி என்ற போர்வையில்தமிழ்மக்களின்காணி கள் பறிபோகின்றன.
இதற்கு இங்குள்ள சில அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் உடந்தையாக உள்ளனர். வெளி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும், வெளி நாடுகளில் உள்ளவர்களுக்கும் காணி வழங்கப்பட்டுள்ளது -என்றார். (ஐ-ய-47)

## பண்டியவத்தை வீரகாளிக்கு சங்கு முழுக்கு

புலோலி, மே 10
புலோலி மேற்கு வாணர் குடியிருப்பு பண்டியவத்தை வீரகாளியம்மன் ஆலய சங்கு முழுக்கு இன்று புதன்கிழமை மு.ப. 11.30மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
திருவிழா தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலய முதன்மைக் குரு ஆகம கிரியாஜோதி சிவஸ்ரீசிதம்பர மகேந்திரநாதக் குருக்கள் தலைமையில்நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## தீர்த்தத் திருவிழா

பருத்தித்துறை, மே 10
பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்தத் தீர்த்தத் திருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 1ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
இந்தத் திருவிழாவை இணுவில் தர்மசாஸ்தா குருகுலதிபர் தானு மகாதேவக்குருக்களின் நல்லாசியுடன் ஆலய முதன்மைக் குரு ரஞ்சித செல்வானந்தக் குருக்கள் நடத்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## வீதிகளில் போடப்படும் இறைச்சிக் கழிவுகளால் மக்களுக்கு அசௌகரியம்

*அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் இறைச்சிக் கடைகளால் விற்பனை நிறைவடைந்ததும் வீதிகளில் போடப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தாமையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவித்தனர்.



இவற்றைத் தடுக்கவும் கழிவுகளை அகற்றுவதற்கும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
"யாழ்ப்பாண மாநகரில் இயங்கும் இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் சிலர் தமது வியாபாரம் நிறைவடைந்ததும் இறைச்சிக் கழிவுகளைப் பொதி செய்து இரவு வேளைகளில் பிரதேசத்தின் வீதியோரத்தில் வீசிவிட்டுச் செல்கின்றனர். இந்தக் கழிவுப் பொதிகளை வீதிக்கு இழுத்துவரும் நாய்கள், அவற்றுக்குள்ளிருக்கும் கழிவுகளை மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும், பொது இடங்களிலும் போடுகின்றன.
இதனால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றது. அத்துடன், இறைச்சிக் கழிவுகளால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். யாழ்ப்பாண நகர கரையோரப் பகுதிகளில் இறைச்சிக் கழிவுகள் வீதிகளில் போடப்படுவதனால் அந்தப் பகுதி ஊடாகப் பயணிப்பவர்கள் பாதிக்கப்படுகின்றனர்" என்று தெரிவிக்கப்பட்டது.
"அதிகாலை எழும்பி பார்த்தால் வீட்டு வளவினுள் எலும்புகள்,தோல்கள் என்பன காணப்படும். அதனைச் சுற்றி நாய்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும். அத்தோடு நீர் நிலைகளின் அருகிலும் இந்தக் கழிவுகள் வீசப்படுகின்றன" என்று பொதுமகன் ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.
இந்த இறைச்சிக் கழிவுகளை உரிய முறையில் அப்புறப்படுத்தவும், இரவு வேளைகளில் இவ்வாறு கழிவுகளை வீதிகளில் வீசுவோருக்கும் எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (வ-ரி)

## ஞானச்சுடர் வெளியீடு

வல்வெட்டித்துறை, மே 10
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலைப் பண்பாட்டுப் பேரவையால் பிரதி மாதந்தோறும் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 232ஆவது இதழான இந்த மாத இதழ் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வுநிலை கிராம அலுவலர் க. ஸ்ரீஸ்கந்தராசா வும், மதிப்பீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதனும் நிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## வடமாகாண அதிகாரிகள் நியமனத்தில் முதலமைச்சர் தேவையற்ற தலையீடு

எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் மே 10
"வடக்கு மாகாணத்துக்குத் தேவையான அதிகாரிகளைநியமிப்பதில்வடக்கு மாகாண முதலமைச்சரும் மாகாண விவசாய அமைச்சரும் தடையாகவுள்ளனர். அவர்கள் இருவரும் இரவோடு இரவாக மாகாண ஆளுநரைச் சந்தித்து வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரின் நியமனத்தை நிறுத்திவிட்டனர்" இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா குற்றஞ்சாட்டினார்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் உறுப்பினர் அ.பரஞ்சோதியால், மாகாணத்தின் நிர்வாக சேவைகளுக்கு பொருத்தமான அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கவனவீர்ப்பு பிரேரணையை முன்மொழிந்தார்.
"கடந்த மாதம் 21ஆம் திகதி வடக்கு மாகாணத்தின் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மட்டத்தில் நியமனங்கள் வழங்கப்பட்டன. அதில் கொழும்பு அரசிலிருந்து வடக்கு மாகாணத்தின் சம்மதத்துடன் மாற்றலாகிய உயர் அதிகாரிகளுக்கு உரிய பதவிகள் வழங்கப்படவில்லை. 4 மாதங்களுக்கு மேலாக அவர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர்.
இலங்கை நிர்வாக சேவை தரம் 1 ஐ சேர்ந்த மோகன்ராஸுக்கு வழங்கப்பட்ட பதவியை ஏற்கவிடாது அவரைத் தடுத்ததுடன் வேறு பொருத்தமான பதவி வழங்குவதிலும் மாகாண நிர்வாகம் கரிசனை எதுவும் காட்டவில்லை. அத்துடன் இதே காலப்பகுதியில் மாகாணத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட திருமதி அ.சாந்த சீலனையும் நீண்ட இழுபறியின் பின்பு கூட்டுறவு ஆணையாளர் பதவி வழங்கப்பட்டது. எனினும் அவரையும் அந்தப் பதவியை ஏற்க விடாமல் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்தச் செயற்பாடுகள் ஊடாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் பொருத்தமான பதவிகளை வழங்க அமைச்சரவை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தனது பிரேரணையில் உறுப்பினர் அ.பரஞ்சோதி முன்மொழிந்தார்.
மாகாணத்தின் உயர் பதவிகளுக்கு பொருத்தமான அதிகாரிகளை நியமிப்பதில் முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும் இழுபறிப்படுகின்றனர். மாகாணத்தில் நியமிக்கப்படும் தகுதியான உயர் அதிகாரிகளை நியமிக்க விடாது ஆளுநர் ஊடாக அவர்கள் தடுக்கின்றனர்.அத்துடன் தங்களுக்கு தேவையான ஆள்களை மட்டும் அவர்கள் நியமித்து வருகின்றனர்" என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார். (வ-8)

## தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கோரல்

காரைநகர், மே 10
காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தால்அடிப்படைக் கணினி பிரயோகம், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர் ஆகிய தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
தொழிற்பயிற்சிகளைக் கற்க விரும்புவோர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யுமாறு நிலைய முகாமையாளர் வே.ஸ்ரீகுகன் அறிவித்தார். (வ)

++++++++++

கைதடி, மே 10
கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தால் பகுதிநேர தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மின்னிணைப்பாளர், டீசல் வாகன இயந்திர திருத்துனர், குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துனர் ஆகிய கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம் (0212227949) அல்லது கைதடி ஏ9 வீதியில் உள்ள கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார். (வ)

## கொக்குவில் இந்து அதிபரின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10
கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடாக ஜி.சீ.ஈ.சாதாரணதரப்பரீட்சைக்கு இரண்டாம் தடவையாகத் தோற்றும் மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர் அறிவித்தார். (வ)

## மணல் கடத்தியோர் பொலிஸைக் கண்டதும் ட்ராக்டரைக் கைவிட்டுத் தப்பியோட்டம்

*குடத்தனைச் சந்தியில் நேற்றிரவு சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 10
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றவர்கள் பொலிஸாரைக் கண்டதும் உழவு இயந்திரத்தைக் கைவிட்டுத் தப்பித்தனர்.
இந்தச் சம்பவம் பருத்தித்துறை குடத்தனைச் சந்தியில் நேற்றிரவு இடம்பெற்றது.
"உழவு இயந்திரத்தில் அளவுக்கதிகமாக மணல் ஏற்றியவாறு 4 பேர் பயணித்தனர். வீதிச் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களை மறித்துச் சோதனையிட முயற்சித்தனர். பொலிஸாரைக் கண்டதும் அவர்கள் உழவு இயந்திரத்தை வேகமாகச் செலுத்தித் தப்பிக்க முற்பட்டனர். அதனால் பொலிஸார் அவர்களைத் துரத்தியபோது உழவு இயந்திரத்தையும் கைவிட்டு அவர்கள் 4 பேரும் தப்பியோடிவிட்டனர்.
அதனால் அனுமதிப் பத்திரமின்றி ஏற்றப்பட்ட மணலுடன் குறித்த உழவு இயந்திரம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இன்று விசாரணை இடம்பெறும்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-26)

# இணுவில் மத்திய கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த
பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் - 2017


தலைமை: திரு.இ.துரைசிங்கம் (கல்லூரி அதிபர்)
இடம் : மேற்பிரிவு பிரதான மண்டபம்
காலம் : 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 3.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா மார்க்கண்டு



காரைநகர் களபூமி கல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், இல. 83/9, தஞ்சி ஒழுங்கை அரசடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா மார்க்கண்டு (09.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு (வையாபுரி) - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் மார்க்கண்டு அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்ற பரமு - பார்வதி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், கனகரட்ணம், விஜயரட்ணம் மற்றும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, பூபாலசிங்கம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் சகோதரியும் மங்கையற்கரசி, சிறீநாதன், மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, சிறீதரன், விஜயகலா ஆகியோரின் அன்புத்தாயும் தில்லைநாதன் காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன் காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் மாமியும் சுதன், ஷர்மினா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சேஷ்தரெனின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருமதி மங்கையற்கரசி, திருமதி சரஸ்வதிஅம்மா, பரமசாமி, தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை மற்றும் திருமதி சிவஞானம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதுவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ப. மார்க்கண்டு (கணவர்)
தொ.பே - 021 222 1983

# 60 ஆவது பிறந்த தின வாழ்த்து



## திரு. செபமாலை பிறின்ஸ் செல்வகுமார்

(பொது முகாமையாளர் - கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம், தலைவர், நீர்வேலி தெற்கு சென்மேரிஸ்ஸ சனசமூக நிலையம், அங்கத்தவர் - யாழ்ப்பாண மாவட்ட தேசோதய சபை கோப்பாய்க்கிளை, அங்கத்தவர் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் கோப்பாய்க்கிளை, அங்கத்தவர் இலங்கை கலாசாரப் பேரவை கோப்பாய் பிரதேச செயலகம், பழைய மாணவர் - கொ/கொட்டகேனா சென்பெனடிக் கல்லூரி)

இத்தரணியில் எம்மை செம்மையாக வாழ்ந்திடவென அனுதினமும் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் எம் குடும்பத்தலைவருக்கு இன்று (10.05.2017) அகவை 60 இந் நன்னாளில் அவர் ஆண்டவன் கிருபையில் மேன்மேலும் சகல சௌபாக்கியத்துடன் சீரும் சிறப்பும்பெற்று வாழ வேண்டுமென ஆண்டவனை மன்றாடி வாழ்த்துகின்றோம்.

ராஜ்பவன்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.


Birthday Wishes குடும்பத்தினர்.

# காணி பயன்பாட்டு திட்டமிடல் கூட்டம்

தென்மராட்சி, மே 10
தென்மராட்சி பிரதேச காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக்களுக்கான கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்தார்.

(வ -9)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 05 . 1976
மறைவு 03 . 05 . 2015

அமரர்

## தியாகராஜா சசிக்குமார்

ஈராண்டு சென்றாலும் நாளாக நாளாக தீராது
உங்கள் பிரிவின் வலி கால்நூற்றாண்டு கடந்தாலும் உங்கள்
கருணைமுகம் காணாது அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும்தெய்வ சந்நிதியில் ஆன்ம ஈடேற்றம் பெற

உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்
பெற்றோர்கள், சகோதரர்கள்
அப்பா- தியாகராஜா அம்மா-புஸ்பராணி
தம்பி: மதனமோகன், பிரதீபன், ஜெயரூபன்
தங்கை: சுஜாத்தா, சியாமளா

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# சமையலுக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு சமையல் ஆள் தேவை. ஆண் /பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். தங்குமிட வசதி உண்டு. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு -076 609 9339**

# பெண் உதவியாளர் தேவை

மருத்துவ தேவைக்காக இந்தியா செல்லும் பெண்ணிற்கு தங்கி இருந்து உதவி செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு -077 054 0098**

# பேக்கறி வேலை

நன்கு அனுபவமுள்ள பேக்கறி வேலை ஆள்கள் தேவை.

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979 ரேவதி 3 இல் சூரி, செவ், புதன் குற்றமில்லை. அரச தொழில் புரியும் மகனுக்கு அழகிய வேலை செய்யும் மணமகள் தேவை. சகல விவரங்களையும் குறிப்பு படத்துடன் Viber க்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்பு - 076 707 4576
Viber - 076 702 1622

# வீட்டுப்பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் உள்ள பொறியியலாளர் குடும்பத்திற்கு வீட்டில் தங்கிநின்று வேலைபார்க்கக் கூடிய பணிப்பெண் தேவை.

**077 232 0354** (CS 003830) (14)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# மரணஅறிவித்தல்

## திருமதி அன்னலட்சுமி கிருஸ்ணசாமி



சொர்ணவடலி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கரம் பொன் கிழக்கு பாலைக்காடு சந்தியை வசிப்பிடமாகவும் இணுவில் மேற்கு இணுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கிருஸ்ணசாமி 08.05.2017 திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை கனகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கிருஸ்ண சாமி(பத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் பால சரஸ்வதி, சிவாம்பிகை, நிர்மலாதேவி, நவரத்தினராசா, பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உலகாம்பிகை, ஆத்மநாதன் (சிற்பாச்சாரி), சின்னத்துரை, கோபாலகிருஸ்ணன், சுசீலாதேவி, ரஜனி ஆகியோ ரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், செகராசா மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் பொன்னுத்துரை, யோகேஸ்வரி(கிளி) ஆகியோரின் சகோதரியும் நந்தினி, நந்தகோபால், நற்குண்ராசா காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் சுதர்சன், தயாளன், கஜேந்தினி, கிருஸ்ணராசா, இரத்தினேஸ்வரி, ரஞ்சினி, வசந்தா, வசந்தகுமார், ஜனனி, துசாந்தி, பவதுர்சன், தர்சிகா, பவதர்சன், கபில்ராஜ், சங்கவி, நிலக்ஷினி, கஜாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

132/107 இணுவில் மேற்கு,
இணுவில்.
(இணுவில் கந்தசாமி கோயில் முன்பக்க வடக்கு வீதி)

தகவல்:
குடும்பத்தினர்.

**0778543830**

# மரண அறிவித்தல்

## திருமதி மீனாம்பிகை இரத்தினப்பிள்ளை



தோற்றம் 04.12.1929
மறைவு 06.05.2017

யாழ். ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாம்பிகை இரத்தினப்பிள்ளை 06.05.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீ பால சரஸ்வதி, கமலேஸ்வரன், தங்கேஸ்வரன், லோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், புவனேஸ்வரன், விஜயகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குமாரதாசன், அற்புத ஜெகசோதிஅம்மா, காலஞ்சென்ற இரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆலால சுந்தரம், மங்கையற்கரசி, சுதர்சினி, வதனலோகினி, விஜயறஞ்சினி, கீதா, றஜனி, றமணி ஆகியோரின் அன்பு மாமியும், சுகன்யா மங்கேஸ்கர், கிரிசன், மைத்ரேயி நிவேதிதா, பிரசன்னா, பிரசாந், சுவேதா, மாதங்கி, கர்சன், மிர்னா, எடிசன், றொனியா, றொம், பார்கவி, சின்மயன், ஆதர்சன், நமிதா, மித்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Ogden Funeral Homes, 4164 sheppard Ave E, Scorborough, ON MIS IT3, Canada வில் பார்வைக்கு வைக்கப்பட்டு கிரியைகளைத் தொடர்ந்து Forest Lawn Mausolem Cremation Centre, 4570 Yongest, North York, ON M2N 5L6, Canda வில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

(cs/3849)(11)

கமலேஸ்வரன் (கனடா - +164 756 73934), ஜெயம் (கனடா - +1613 2629 982), லோகேஸ்வரன் (கனடா -+1416 2835 787), பாலா (கனடா- +161361 72010), சுகன்யா மங்கேஸ்கர் (கனடா -+1416 729 7655), விஜயகுமார் (+164747 20358)


# பட்டப்பகலில் கூரை பிரித்து பணம் திருட்டு

பட்டப் பகலில் வியாபார நிலையக் கூரையைப்பிரித்துஉள்ளிறங்கிய திருடர்கள் 75 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தையும், அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவின் சேமிப்புக் கருவியையும் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம் மட்டுவில்வடக்குபன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகில் நடந்துள்ளது.
வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு அருகில் உள்ள வீட்டுக்குச் சென்று உணவருந்தி விட்டு வருவதற்கிடையில் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிபொருள்கள்வாங்குவதற்கு வைத்திருந்த பணத்தையும் கண்காணிப்புக்கமராவின் ஒளிப்பதிவுப் பெட்டியையும் அபகரித்துச் சென்றுள்ளனர் என முறைப்பாடுசெய்ப்பட்டுள்ளதுஎன்றுபொலிஸார்தெரிவித்தனர். பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# உலக மக்கள் அனைவருக்கும் நிரந்தர சமாதானம் கிட்டட்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வெசாக் தின வாழ்த்து

கொழும்பு, மே 9
இலங்கையில் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகளின் வெசாக் தின நிகழ்வுகள் மற்றும் பன்னாட்டு பௌத்த மத சம்மேளனம் ஆகியவற்றின் ஊடாக உலகில் அனைத்து மக்களுக்கும் நிரந்தர சமாதனம் கிடைக்க வாழ்த்துகள்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கையின்எதிர்க்கட்சித்தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
அவர் அனுப்பியுள்ள வெசாக் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
இந்து பக்தராக பிறந்த புத்த பெருமான் உயிரினங்கள் அனைத்துக்கும் கருணை காட்டிய ஒருவராக திகழ்ந்ததுடன், இந்து தர்மத்தை அடிப்படையாகக்கொண்டு பௌத்த தத்துவத்தை உலகுக்கு



அறிமுகம் செய்தார்.
புத்த பெருமானின் போதனைக்கு அமைவாக ஒருவர் அவரது இனம், மதம், குலம், செல்வம் என அனைத்திலும் பாகுபாடு இன்றி அனைத்து மனிதர்களையும் சமமாக மதித்தல் வேண்டும்.
இவ்வாண்டின் வெசாக் தினத்தின் தொனிப்பொருளாக சமூக நியாயத்துவம் மற்றும் நிலையான உலக சமாதானம் என்பவற்றின் நிமித்தம் பௌத்த போதனைகள் அமைந்துள்ளன. இந்த தொனிப்பொருள் இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமன்றி உலக வாழ் மக்கள் அனைவருக்கும் பொருத்தமானஒன்றாகவிளங்குகின்றது.
இம்முறை வெசாக் கொண்டாட்டம் மற்றும் பன்னாட்டு பௌத்த சம்மேளனம் போன்றவற்றின் கலந்துரையாடப்படவுள்ள விடயங்களில் புத்தரின் போதனைகளை தெளிவுபடுத்தி அதன் ஊடாக முழு உலகுக்கும் நிரந்தர சமாதானம் மற்றும் நீதி என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது. (ற-8)

# சமத்துவத்தையே உலகுக்கு கற்பித்தார் புத்தர் பெருமான்

## வெசாக் வாழ்த்துச் செய்தியில் அரச தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே 10
முப்பெரும் மங்கள நிகழ்வுகளில் ஒன்றாகிய புத்த பெருமானின் முக்திப்பேற்றுடன் ஆரம்பமாகும் எமது தேசத்தின் வரலாறாலது, இந்த முறை பன்னாட்டு வெசாக் விழா இலங்கையில் நடத்தப்படுவதன் மூலம் புதியதொரு அத்தியாயத்தில் அடியெடுத்து வைக்கின்றது.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.
வெசாக் தினத்தை முன்னிட்டு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளதார்.
அதில் உள்ளதாவது:
இலங்கை பௌத்த வரலாற்றின் பொற்காலஅத்தியாயத்தின் ஆரம்ப அடையாளமாகவே இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்தோராவது சிறி புத்த வருடம் உதயமாகிறது.
புத்தபிரானின்புனிதபாதங்கள்மும்முறை பதிந்த புனித பூமியாகிய நமது தாய்நாட்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பு பன்னாட்டு வெசாக் விழாவைநடத்தத்தெரிவுசெய்துள்ளமைநாம்பெற்றஅரியபாக்கியமெனக் கருதுகிறேன். அந்த வாய்ப்பானது பௌத்த தர்மத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றதன் பின்னர் எமது நாடுபெற்றமிகச்சிறந்தபன்னாட்டு வெற்றியாகும்.
ஐக்கியநாடுகளின்பதினான்காவது பன்னாட்டு வெசாக் விழாவின் முதன்மைப் பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டமைக்கு அண்மைக் காலத்தில் நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகளும் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. அந்த வெற்றிக்காக உழைத்த அனைத்து மக்களும் தமது வாழ்நாளில் ஒரு யுகத்தை மெருகூட்டிய புண்ணியவான்களாகவரலாற்றில்இணைந்துகொள்வார்கள்.
'சமூகநீதி மற்றும்பேண்தகு உலக சமாதானத்துக்கானபௌத்ததர்மத்தின்போதனைகள்' என்பதேஇலங்கையில் நடத்தப்படும் இந்த பன்னாட்டு வெசாக் விழாவின் தொனிப்பொருளாகும். சமத்துவமே சமூக நீதியின் அடித்தளமாகும். புத்தபிரானின் காலத்திலும் அடிப்படைக் கோட்பாடாக சமத்துவம் எனும் உலக நீதியே இருந்து வந்தது. இன்றைய உலகம் மிக உருக்கமாக வேண்டி நிற்பதும் அந்த சமத்துவத்தையேயாகும்.
அந்த சமத்துவத்தை இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னரே புத்தபிரான் தாம் உயிர் வாழ்ந்த இந்த பூவுலகுக்குப் போதித்துள்ளார்.
உலகவாழ் பௌத்த பெருமக்களுக்கு மங்களகரமான வெசாக் திருநாள்வாழ்த்துக்கள்உரித்தாகட்டும் - என்றுள்ளது. (ற-10)

# குழாய்க் கிணறுக்கு அனுமதியளிப்பது குறித்துக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாண மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான அனுமதி வழங்கல் தொடர்பான கூட்டம் எதிர் வரும் 15ஆம் திகதிதிங்கட் கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் அறிவித்தார்.
பிரதேச செயலளர்கள், பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் உட்பட திணைக்களத் தலைவர்களை இந்தக் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டது. (வ-9)




**10.05.2017 -முதலாம் நாள் புதன்கிழமை**

தலைவர்
திரு.அ.பௌநந்தி (விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
பிரதம விருந்தினர்
நாட்டிய வாரிதி ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் வலயம்)
நாச்சிமார் கோயிலடி சிவதாஸ் பிரபாகரன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான் P.S.ஜெயசங்கர் | லயஞான சிரோண்மணி சிதாஸ் பிரபாகரன் |
| நாதஸ்வர இளவரசன், கான கலாவித்தகன் P.S.B.சாரங்கன் | கல்வியங்காடு தவில் வித்துவான்சந்திரன் |

* மாங்கல விளக்கேற்றல்
* திருமுறை ஓதுதல் :- செல்விகள் ப.சகிஸ்சனா, ப.மதுஷனா(சாரங்கா இசைமன்ற மாணவிகள்)
* ஆசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர் நல்லை ஆதீனம்)
* வாழ்த்துரை :-திரு.வை.இரகுநாதமுதலியார் (அறங்காவலர் நீராவியடி பிள்ளையார் கோயிலடி)
* தலைமையுரை :- தலைவர்.
* சைவ வித்தியா விருத்திச் சங்க " சைவ சிறுவர் இல்ல " மாணவிகள் வழங்கும் - வரவேற்பு நடனம்
  *நட்டுவாங்கம் :- திருமதி. யாழினி ரதீஸ்வரன் *பாட்டு :- திருமதி வத்சலா கருணாகரன்
  * வயலின் :- திருமதி இந்துமதி தயாபரன் * மிருதங்கம் :- திரு. T.சிவகுமார்.
* இசைக்கச்சேரி :- * பாட்டு :- செல்வி சிவநாதன் மதுஜா
  * வயலின் :- திரு.அ.ஜெயராமன் *மிருதங்கம் :- திரு.நல்லை க.கண்ணதாஸ்
* கலாநிதி சைலஜா குமாரசாமியின் மாணவிகள் வழங்கும் நாட்டிய அளிக்கை
  * நட்டுவாங்கம் :- கலாநிதி சைலஜா குமாரசாமி
  * பாட்டு :- திரு.அ.அமிர்தலோஜனன் * வயலின் :- திரு.அ.ஜெயராமன்
  * மிருதங்கம் :- திரு.நல்லை க.கண்ணதாஸ்
  * புல்லாங்குழல் :- திரு.க.தேசீகன். * கீபோட் :- திரு.S.மனுசங்கர்
* கலைஞர்கள் கௌரவிப்பு * பிரதம விருந்தினர் உரை
* வழக்காடு மன்றம் :- பொருள் :- குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள்

| *வழக்குத் தொடுப்போர் | *மறுப்போர் |
|---|---|
| திரு.இ.சர்வேஸ்வரா - (உதவி பதிவாளர் யாழ்.பல்கலைக்கழகம்) திரு.ஜெ.ரஞ்சித்குமார் (சட்டத்தரணி) | திரு.வே.சிவராஜா (சமூகசேவைகள் உத்தியோகத்தர்), திரு.ந.ஜங்கரன் (நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்) |

*நீதிபதி:- திரு.ச.சலீசன் (பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
* அமரர் கீதாஞ்சலி V.K. நல்லையாவின் மாணவர்கள் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினருடன் இணைந்து வழங்கும் பண்பாட்டு நடனங்கள்
  *நட்டுவாங்கம் :- திருமதி மங்கயற்கரசி மனோகர்
  *பாட்டு :- திரு.வர்ஜிகன் கமலநாதன், செல்வி. மதுஜா சிவநாதன்
  * கீபோட் :- இசைக்கலைமணி திரு.ந. செல்வச்சந்திரன்
  * மிருதங்கம் :- திரு.நல்லை க.கண்ணதாஸ் *ஜெண்டை :- திருசெல்வரெட்ணம்
* நன்றியுரை.

அனுசரணை:- அன்பொளி கல்வி நிலையம்

**மைதிலி நகை மாடத்தில்**
அக்ஷய திருதியையில் நகைகளைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறையில்
வெற்றி பெற்ற சாதனையாளர்களின் விவரம்
முதல் மூன்று வெற்றியாளர்களுக்குத் தங்க நாணயம்



1 ஆம் பரிசு R.நிஷாந்தினி - கோண்டாவில்
2 ஆம் பரிசு K.யசிதா - கெற்பேலி, மிருசுவில்
3 ஆம் பரிசு N.அனுசியா - உரும்பிராய்.

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

| | |
|---|---|
| Mrs.L.Shasha | :- சங்கத்தானை, சாவகச்சேரி. |
| S.அஞ்சுதா | :- நாகம்மாள் வீதி,உடுவில் |
| N.ஆறுமுகதாஸ் | :- இணுவில் தெற்கு, சுன்னாகம். |
| S.பிரியங்கா | :- திருகோணமலை |
| M.குணம் | :- விடத்தற்பளை, மிருசுவில் |
| திரு.பி.பிரதீஸ் | :- சரசாலை தெற்கு, சாவகச்சேரி |
| P.கிருஸ்ணகௌரி | :- கேணியடி, திருநெல்வேலி கிழக்கு |
| K.தனுசியா | :- வட்டுக்கோட்டை |
| Mrs.A.செந்தில்குமார் | :- தாவடி தெற்கு, கொக்குவில். |
| U.கௌசிகா | :- 22,துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை. |

பரிசில்கள் இன்று (10.05.2017) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வழங்கப்படும்.
மைதிலி நகைமாடம்
89, V.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7902

# திருநெல்வேலி ஞானவைரவருக்கு திருக்குடமுழுக்கு

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணம், திரு நெல்வேலி கிழக்கு கேணியடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய திருக்குடமுழுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. எண்ணெய் காப்பு முதல் நாள் சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரையில் நடைபெறும். திருக்குடமுழுக்குத் தினத்தன்று மாலை 6.30 மணியளவில் வசந்தமண்டப வழிபாடு இடம்பெற்று அதனை தொடர்ந்து சுவாமி வெளி வீதியுலா வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-37)

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 10
காரைநகர் வடக்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள்நடைபெறும்எனஆலயத்தின்பொறுப்புரிமையாளர் சபை அறிவித்தது. (வ-ரி)



## போராட்ட களத்திலிருந்தே ஆண் குழந்தை பெற்ற தாய்

### சுகாதாரத் தொண்டர் நியமன போராட்டத்தில் சம்பவம்

வவுனியா, மே 10

நிரந்தர நியமனம் கோரி சுகாதாரத் தொண்டர்கள் வவுனியாவில் போராட்டம் நடத்தி வரும் நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவருக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. அவர் மருத்துவனையில் சேர்க்கப்பட்டு ஆண் குழந்தையைப் பிரசவித்தார்.

சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நேற்று 6 ஆவது நாளாகத் தொடர்ந்தது. 15 ஆண்டுகளுக்கு மேலாகச் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே போராட்டம் நடத்தப்படுகின்றது.

தங்கள் கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும் வரை தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். (ஞ-10)

கொக்கிளாய் வாடி விவகாரம்

# நீதிமன்றத்தின் உத்தரவை மீறும் தெற்கு மீனவர்கள்

### நகர்த்தல் பத்திரத்தின் மூலமாக மன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டது

முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் வாடி தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் தொழில் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் தென் பகுதியைச் சேர்ந்தோர் நீதிமன்ற உத்தரவை மீறித் தொழில் செய்கின்றனர் என்று நகர்த்தல் பத்திரம்மூலம்நேற்றுமுன்தினம்நீதிமன்றின்கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டது.

கொக்கிளாய் மீனவர் சங்கத்தின் சார்பில் நகர்த்தல் பத்திரத்தைசட்டத்தரணிஅன்ரன் புனிதநாயகம் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

அவர் தெரிவித்தாவது:

முல்லைத்தீவுமாவட்டத்தின் கொக்குளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டுக்காக பிரதேச செயலாளரால் வாடி அமைக்க நிலம் வழங்கப்பட்டது. அந்த நிலம் தென்னிலங்கை மீனவர்களுக்கான கரை வலைப்பாட்டுப் பகுதிக்குள் அடங்குகின்றது. வாடி அமைப்பதைத்தடைசெய்ய வேண்டும்என்றுதெரிவித்து தென்னிலங்கைமீனவர்கள் மூவர் சார்பாக நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

அந்தப் பகுதியில் உள்ளூர் மீனவர்கள் தொழில் செய்ய இடைக்காலத்தடைவிதிக்கப்பட்டது. வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றன. கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி நடந்த வழக்கு விசாரணையில் வாடி அமைப்பதற்குவழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து 375 மீற்றருக்கு அப்பால் உள்ளது என்று பிரதேச செயலரால் அரச நில அளவையாளரின் அளவீட்டு ஆவணம் ஊடாக நீதி மன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நில அளவை வரைபடத்தை ஏற்க மறுத்தனர். சகலதரப்பினரும்உடனிற்க மீண்டும்நிலஅளவைசெய்து மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதேச செயலருக்கு நீதிமன்று உத்தரவிட்டது. அந்தப் பகுதியில் தொழில் புரிய இரு தரப்புக்கும் இடைக்காலத் தடை விதித்தது.

நீதிமன்றின் உத்தரவை மீறித் தற்போதும் தென்னிலங்கை மீனவர்கள் கரை வலைஇழுக்கும்தொழிலை மேற்கொள்கின்றனர். கடந்த வாரம் கிராம சேவகர், பிரதேச செயலகப் பணியாளர்கள், மீனவர்கள்சங்கத்தினர் நேரில்சென்றுஅவதானித்து அதுதொடர்பாகநீரியல்வளத் திணைக்களம் மற்றும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. பொலிஸார் உரியநடவடிக்கைஎடுக்காததால் நீதிமன்றின் கவனத்துக்கு நகர்த்தல் பத்திரம் மூலம்கொண்டுவரப்பட்டது.

நகர்த்தல் பத்திரத்தை ஆராய்ந்த் நீதிமன்று அது தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டது- என்றார். (ஞ-101)

## கருத் திட்டங்கள் மக்கள் பயன்பாடு உடையவையாக இருக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 10

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இனம்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் சகல கருத்திட்டங்களும் மக்கள் பயன்பாடு உடையவையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார் தேசிய கொள்கைகள் மற்றும்பொருளாதார விவகார அமைச்சு செயலாளர் எம். றபீக்.

விவசாய உற்பத்திக்கான களஞ்சிய உட்கட்டுமானம், கிழமை சந்தைகள், கால்வாய், வாய்க்கால்கள், அணைக்கட்டுகள், குளங்கள், கிணறுகள், குடி தண்ணீர்த் திட்டம் உள்ளடங்கலான கருத் திட்டங்களாக அமைந்த கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களாக இருக்க வேண்டும்.

சகல வேலைத் திட்டங்களையும் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சகல பிரதேச செயலாளர்களும் மாவட்ட செயலாளர்களுக்கு முறையாக அறிக்கையிட வேண்டும்.

வேலை ஆரம்பிக்கும் இடத்தில் பொருத்தமான பெயர்ப்பலகை முதலில் இடப்பட வேண்டும் என்று அவர்அறிவுறுத்தியுள்ளார். (ஞ-50)

## வடக்கு கலைஞர்களை தமிழகம் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள்

### யாழ். இந்தியத் துணைத் தூதரக கொன்சியூலர் நடராஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

தமிழகக் கலைஞர்களை இங்கு அழைத்து வந்து நிகழ்வுகள் நடத்துவது போன்று, வடக்கில் உள்ள கலைஞர்களையும், கல்வியியலாளர்களையும் தமிழகத்துக்கு அழைத்துச் சென்று நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை எமது தூதுவராலயம் முன்னெடுக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.


மருதனார்மடம், இராமநாதன் சங்கீதக் கல்லூரியின் முன்னாள் இசை விரிவுரையாளர் மகா வித்துவான் ஏ. பி. ஜயாக்கண்ணு தேசிகரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் கடந்த சனிக்கிழமை சந்தானகோபாலனின் இசைக் கச்சேரி நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

இலங்கையில் மட்டுமன்றி மேலைநாடுகளில் கலை நிகழ்வுகள் நடக்கின்றன. அவற்றையெல்லாம் யார் நடத்துகின்றனர். யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் நடத்துகின்றனர். அதை நினைக்கும்போது பெருமையாக இருக்கின்றது.

இசை இனிமையான அனுபவத்தைக் கொடுகின்றது. ஜயாக்கண்ணு தேசிகரின் நூற்றாண்டு விழாவில் அவரது குருதிகளான பிள்ளைகள் இங்கு இசை விற்பன்னர்களாக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏராளமான கலைஞர்கள், கல்விமான்கள் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள மூத்த கலைஞர்களை தமிழ்நாட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை எமது தூதுவராலயம் மேற்கொள்ளும்- என்றார். (ஞ-5)



நல்லூர் கையிலாச பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக் காலை நடைபெற்றது. (ஞ-101)

## இ.போ.ச. நடத்துநர் மீது தாக்குதல்

வவுனியா, மே 10

இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாலை நடத்துநர் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினர். காயமடைந்த அவர் செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செட்டிக்குளத்தில் இரவு 7 மணியளவில் நடந்துள்ளது.

வவுனியா பேருந்து நிலையத்தில் பூவரசங்குளம் ஊடாகச் செட்டிக்குளம் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்தில், குளுமாட்டுச் சந்தியில் 4 பேர் ஏறினர். அவர்கள் சண்முகபுரத்தில் இறங்கியபோது நடத்துநரைத் தகாத வார்த்தைகளால் ஏசியதுடன், தாக்குதலும் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் செட்டிக்குளம்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சண்முகபுரத்தைச்சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஞ-10)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையை பொறுப்பேற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 10

வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்ட பொது சுகாதார பரிசோதகர்களின் இடமாற்றலை நடைமுறைப்படுத்தும் வகையில் 2017ஆம் ஆண்டு இடமாற்றல் வழங்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களை புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்க விடுவிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அனைத்து உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் போன்றவற்றில் கடமையாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குக் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றல் பட்டியல் வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன.

தாபன விதிக் கோவைக்கு முரணாக இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி முதல் 22 நாள்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தொழிற்சங்கத்தினர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் மேற்கொண்ட பேச்சின் அடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி சுகாதாரப் பரிசோதகர்கள் கடமைக்குத் திரும்பினர்.

அதே பட்டியல் கடந்த ஏப்ரல் மாதம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டது. மே மாதம் 2ஆம் திகதி இடமாற்றல் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுகாதாரப் பரிசோதகர்கள் மீண்டும் பணிப் புறக்கணிப்பு மேற்கொண்டனர். அது தொடர்பில் நீதிமன்றில் பொதுநலன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பணிப் புறக்கணிப்புக்கு நீதிமன்று தடை விதித்தது.

கடந்த 2ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் அனுப்பப்பட்ட இடமாற்றல் பட்டியலின் பிரகாரம் இடமாற்றல் செய்யப்பட்டுள்ளவர்களை புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்கும் வகையில் விடுப்புக் கடிதங்களை வழங்க வேண்டும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

"உள்ளூராட்சி சபைகளில் இடமாற்றல் செய்யப்பட்டவர்களும், ஏனைய மாவட்டங்களில் இடமாற்றல் செய்யப்பட்டவர்களும் புதிய நிலையங்களில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இடமாற்றல் செய்யப்பட்ட சிலர் இன்னமும் புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை" என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. (ஞ-9)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## உயிருக்கு உலை வைத்த அலைபேசி தொடர் பேச்சு!

கொழும்பு, மே 10
மனைவியின் கழுத்தை வெட்டிக் கொலை செய்த கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கம்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அலவத்துகொட பிரதேசவாசியான இரு பிள்ளைகளின் தாயான சுனேத்ரா குமாரி ஜராங்கனி (வயது - 44) என்ற பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

எந்த நேரமும் அலைபேசியில் கதைப்பதையே வழக்கமாக வைத்திருந்த மனைவியின் காதை அறுப்பதற்காக கத்தியுடன் சென்ற கணவன் ஆத்திரம் மேலிட்டதால் அவரின் கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவி நீண்டநேரமாக அலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்ததைக் கண்டதும் ஆத்திரமடைந்து இந்தக் கொலையைச் செய்துள்ளார். தனது மகன் கராத்தே படிக்கும் பள்ளிக்குச் சென்ற கணவனின் வருகையை அறியாமல் மனைவி தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த பின்னரே இந்தக் கொலைநடந்துள்ளது என்றும் விசாரணைகளில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற - 10)

# த.தே.ம.மு. ஆதரவாளருக்காக முன்னிலையாகிறார் சுமந்திரன்

## வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பான தண்டனைக் காலத்தைக் குறைக்க

யாழ்ப்பாணம், மே 10
வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவாளரின் தண்டனைக் காலத்தைக் குறைக்க விண்ணப்பிப்பதற்கு முன்னிலையாகவுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன்.

2012ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மடத்தடியில் நடந்த வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 8 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். வாள் வெட்டுச்சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு நாள் நேற்று முன்தினம் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் விரல் ரேகை அடையாளங்கள் சமர்ப்பிக்கப் படாததால் வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு நீதிமன்று ஒத்தி வைத்தது.

சந்தேகநபர்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர் ஒருவரும் அடங்குகின்றார். குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்காக விண்ணப்பிப்பதற்குச் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையானார். வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதால் அவர் திரும்பிச் சென்றார். (ற - 12)



வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், பண்ணையை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் அலங்காரங்கள் மேற்கொள்கின்றனர். புல்லுக்குளம், வீரசிங்கம் மண்டப வீதி, முனியப்பர் கோயில் வளாகம் ஆகிய இடங்களில் வெசாக் அலங்கரிப்புப் பணிகளில் இராணுவத்தினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (ற – ரி)

# 100ஆவது நாளிலிருந்து பரந்துபட்ட போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அரசுக்கு எச்சரிக்கை



கிளிநொச்சி, மே 10
இன்னும் இரு வாரங்களில் சாதகமான முடிவுகளை அரசு வழங்காது விட்டால், 100 ஆவது நாளில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் பரந்துபட்ட போராட்டமாக மாற்றமடையும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களின் இணைப்பாளர் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டம் நடத்தப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்ட போராட்டம் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மருதங்கேணி என விரிவடைந்தது.

தமது கோரிக்கைகளுக்கு உரியதீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உறுதியுடன் உள்ளனர். அவர்களின் போராட்டங்களுக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்குகின்றனர்.

"எங்கள் போராட்டம் நூறாவது நாளை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இன்னும் இரு வாரங்களில் அரசு சாதகமான பதிலை எமக்கு வழங்க வேண்டும். இல்லையென்றால் 100 ஆவது நாளில் இருந்து எமது போராட்ட வடிவம் மாறும். தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு ஏதாவது இழப்புகள் ஏற்படுமானால் கூட்டு அரசும், தமிழ் அரசியல் தலைவர்களுமே பொறுப்புக் கூற வேண்டும்." என்று கிளிநொச்சியில் தொடர் போராட்டும் நடத்தும் மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் 79 ஆவது நாளாகவும், வவுனியாவில் 75ஆவது நாளாகவும், முல்லைத்தீ வில் 63 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 66ஆவது நாளாகவும், மருதங்கேணிலி 56 ஆவது நாளாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். (ற -6)



## உதயங்கவின் வழக்கு ஒத்தி வைப்பு

கொழும்பு, மே 10
பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு எதிராக ரஷ்யாவின் முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க உயர்நீதிமன்றத்தில் தொடுத்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான புவனெக அலுவிஹாரே, உபாலி அபேரத்ன, அனில் குணரத்ன ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மனுதாரரான உதயங்க வீரதுங்கவின் வங்கிக்கணக்கு தொடர்பிலான விசாரணைகள் இன்னும் முடிவடையாததால் அந்தக் கணக்கின் மீதான தடையை விடுவிக்க கால அவகாசம் தேவை என்று மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் யசந்த கோட்டா கொட தெரிவித்தார்.

அவரது இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் வழக்கின் அடுத்த விசாரணையை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (ற)

## ஐ.தே.கவின் எதிர்காலத்தை ஆராய்வதற்கு 3 குழுக்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் பற்றி ஆராய மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழு தெரிவித்துள்ளது.

அமைச்சர்களான மங்கள சமரவீர, அஜித் பீ. பெரேரா, அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் தலைமையில் மூன்று குழுக்களும் இயங்கவுள்ளன.

கட்சியின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு மங்கள சமரவீரவும், தேர்தல்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அஜித் பீ. பெரேராவும் கிராமிய மட்ட அமைப்புகளுக்கு அகிலவிராஜ் காரியவசமும் பொறுப்பாக இருப்பார்கள் எனவும், மங்கள சமரவீரவின் குழுவில் ஹரின் பர்னாந்து, ஹர்ஷ டீ சில்வா ஆகியோருடன் சில இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அஜித் பீ. பெரேராவின் குழுவில் சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, வஜிர அபேவர்தன ஆகியோருடன் மேலும் சிலரும், அகிலவிராஜ் காரியவசத்தின் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில முக்கிய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மறிச்சுக்கட்டி மக்களின் அவலம் மைத்திரி பதிலில் முடியட்டும்

## கே.காதர் மஸ்தான் எம்.பி. எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், மே 10
எதிர்வரும் 13ஆம் திகதி அரச தலைவரால் வழங்கப்பட்டவுள்ள பதில் மறிச்சுக்கட்டி முஸ்லிம் மக்களுக்கு விடிவாக அமைய வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான்.

தமது பூர்வீக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்து தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மறிச்சுக்கட்டி மக்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது
சிறுபான்மை மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளால் உருவாக்கப்பட்ட கூட்டு அரசின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இனவாதியோ அல்லது சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைப்பவரோ அல்ல. வில்பத்துவிவகாரத்துடன்தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலில் அரச தலைவருக்குத் தவறான தகவல் வழங்கப்பட்டு ள்ளமை உண்மை.

இந்த விடயம் தொடர்பாக அரச தலைவர் அங்குள்ள சிவில் சமூக அமைப்புகளையே சந்திக்க விரும்பினார். அனைத்து முஸ்லிம் சிவில் அமைப்புகள் சார்பிலும் சிலர் அரச தலைவரைச் சந்தித்ததன் விளைவாக எதிர்வரும் 13ஆம் திகதி சாதகமான பதில் தரப்படும் என்றும், போராட்டம்நடத்தும்மக்களைகைவிட வேண்டும் என்றும் கோரினார்.

சிறுபான்மை மக்களின். ஜனநாயகத்தை உறுதிப்படுத்திக் கூட்டு அரசைப் பலப்படுத்தக் கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை அரச தலைவர் சரியாகப் பயன்படுத்துவார் என்ற நம்பிக்கை இருக்கின்றது. என்றுள்ளது. (ற - 10)

## முன்னாள் ராணுவ உயர் அதிகாரிக்கு இராஜதந்திரப் பதவி

கொழும்பு,மே 10
இராணுவத்துக்கு எதிராக அமெரிக்காவில் சாட்சியம் அளித்த முன்னாள் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு, இராஜதந்திரப் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறித்த இராணுவ அதிகாரி இலங்கை இராணுவத்துக்கு எதிரான 100 பக்கச் சத்தியக் கடதாசி ஒன்றை அமெரிக்க அரசுக்கு வழங்கியிருந்தார்.

இவர், தென் மாகாணத்தில், கடந்த தேர்தலில் தோல்வியடைந்த அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினராவார். இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவர் தனது பெயரை மாற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அரச படையினருக்கு எதிராகச் சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் சாட்சியமளித்தமைக்காக இந்த முன்னாள் அதிகாரிக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - என்றுள்ளது. (ஐ)

## சிறைச்சாலைப் பேருந்து மீது சூடு: மேலும் இருவர் கைது

கொழும்பு,மே 10
களுத்துறையில் சிறைச்சாலைப் பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த இரு சந்தேக நபர்களும் அதுருகிரிய பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 27 வயதானவர்கள் எனவும், அவர்கள் கடுவலை மற்றும் அதுருகிரிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் சந்தேக நபர்களைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

களுத்துறையில் சிறைச்சாலைப் பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது பாதாள உலகக் குழு நபரான சமயங், சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் உட்பட ஏழு பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரி காந்தினி விசித்ரா ராஜபக்ச, கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் காலமானார். மகிந்த தனது சகோதரியின் உடலைக் கொழும்பு மலர்ச் சாலைக்கு ஒரு கையால் தூக்கிச் சென்றார். ஒரே குருதியில் பிறந்த சகோதரியின் உடலை ஒரு கையால் தூக்கிச் சென்ற அண்ணன் என்று ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# இரட்டைக் குடியுரிமை கொண்ட எம்.பிக்களின் விவரங்கள்வேண்டும்

### குடிவரவுக் கட்டுப்பாட்டாளரிடம் கோருகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, மே 10
மிகப் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இரட்டைக் குடியுரிமை விவகாரம் உருவெடுத்துள்ளது. இரட்டைக் குடியுரிமை காரணமாக, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர், கீதா குமாரசிங்க ஏற்கனவே பதவி இழந்துள்ள நிலையில், இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களைத் தருமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம், மகிந்த அணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்பதால், நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 3 ஆம் திகதி தீர்ப்பளித்திருந்தது.

மேலும் பல இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம், இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்



தைப் பயன்படுத்தி, உதய கம்மன்பில கேட்டுள்ளார்.

அதேவேளை மகிந்த அணியில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரி மையைக் கொண்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அவர்களும் பதவி இழக்கும் நிலை ஏற்படலாம் என்று தெரிய வருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் நிலையைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், மகிந்த அணியில் இருக்கும் இரட்டைக் குடியுரிமை கொண்ட 11 பேரின் நிலமை குறித்துக் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு தொடர்பில் தாம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கீதாகுமாரசிங்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோடியின் வருகைக்காக அகற்றப்படும் குளவிகள்

### மலையகத்தில் விசித்திர நடவடிக்கை

கொழும்பு, மே 10
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பாதுகாப்புக் கருதி, மலையகத்தில் குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு வருகிறார் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி. மறுநாள் மே 12ஆம் நாள் ஹற்றனுக்குச் செல்கிறார்.

மலையகப் பகுதிகளில் உள்ள குளவிகளால் இந்தியாவின் தலைமை அமைச்சருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தால் மலையகத்தில் சில பகுதிகளில் உள்ள குளவிக் கூடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் தலைமை அமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்புப் பிரிவுகள், ஹற்றன் பொலிஸாருடன் இணைந்து, குளவிகளைப் பாதுகாக்கும் அமைப்பின் உதவியுடன் குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளன.

மலையகப் பகுதிகளில் உள்ள பெரிய மரங்களில் பெருமளவில் குளவிகள் கூடுகளைக் கட்டியுள்ளன. இந்தியாவின் தலைமை அமைச்சரின் பயணத்தின் போது அதிகளவு உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்படும் வாய்ப்புகள் உள்ளதால் குளவிகள் கலைந்து கொட்டக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது. (உ - 5)

## இலங்கையின் தேர்தல்களில் அமெ. தலையீடு

கொழும்பு,மே 10
இலங்கையில் நடைபெற்ற நான்கு தேர்தல்களில் அமெரிக்கா தலையீடு செய்துள்ளது என்று அமெரிக்காவின் மெலன் பல்கலைக்கழக பேராசிரியர் டோட் லெவின் தெரிவித்தார்.

117 நாடுகளில் இடம்பெற்ற தேர்தல்கள் குறித்து பேராசிரியர் லெவின் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1956 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க அரசு இலங்கையின் தேர்தல்களில் தலையீடு செய்து வருகிறது. 1960 ஆம் மற்றும் 1963 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற தான தேர்தல்களிலும் அமெரிக்கா தலையிட்டது.

முன்னாள் தலைமை அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்க, இடதுசாரிக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பில் அமெரிக்கா அதிருப்தியடைந்திருந்தது - என்றார். (ஐ)

## ரூபாவின் வீழ்ச்சியால் நாட்டின் கடன் அதிகரிப்பு

### மத்திய வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு,மே 10
கடந்த வருடம் வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபா பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் காரணமாக நாட்டின் முழுமையான கடன் 186.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களின் அடிப்படையில் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் 2015 ஆம் ஆண்டு இறுதியில் 77.6 வீதமாக பதிவாகியுள்ள நிலையில், அரச கடன் 2016 ஆம் ஆண்டு இறுதிவரையில் 79.3 வீதமாக அதிகரித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இறுதி வரையில் இலங்கை செலுத்த வேண்டிய முழுமையான கடன் 9 ஆயிரத்து 387 பில்லியன் ரூபாவாகும். இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10.4 வீத அதிகரிப்பாகும்.

உள்நாட்டு ரீதியில் செலுத்த வேண்டிய கடன் 5 ஆயிரத்து 342 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அது 7.7 வீத வளர்ச்சியாகும்.

வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டிய கடனின் பெறுமதி 4 ஆயிரத்து 46 பில்லியன் ரூபாவாகும். 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இது 14.2 வீத அதிகரிப்பாகும்.

அரசின் முழுமையான கடன் தொகையில் உள்நாட்டு ரீதியாக 56.9 வீத கடனைச் செலுத்த வேண்டியுள்ளது - என்றுள்ளது. (ஐ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீண்டும் மீண்டும் சகதிக்குள் உழலும் மகிந்த ராஜபக்ச

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த ஆபத்தான உறுப்பினர்களையும் விடுவித்துவிட்டுத் தனது பாதுகாப்பையும் இந்த அரசு குறைத்துவிட்டது என்று கூறுவதன் மூலம் தனது உயிருக்குப் புலிகளால் ஆபத்து என்று கூற முற்பட்டிருக்கிறார் முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்ச. இனவாதம், விடுதலைப்புலிகள் ஆகிய இரண்டு விடயங்களையும் விட்டால் அரசியல் செய்வதற்கு வேறு எதுவும் இல்லை என்கிற அரசியல் வறுமையில் அவர் சிக்கிக் கொண்டிருப்பதையே அவரது இந்தக் கூற்று தெளிவுபடுத்துகிறது.

தனது ஆட்சிக்காலத்தில் ஒரு மன்னரைப்போன்று கோலோச்சியவர் மகிந்த ராஜபக்ச. அப்போதும் தமிழர்களுக்கு எதிரானதும், புலிகள் மீதானதுமான போரையே தனது அரசியலின் முதன்மைக் கூறாகக் காட்டி சிங்கள மக்களிடம் வாக்குகளைச் சேகரித்தார். போரை நடத்திப் புலிகளை ஒடுக்குவதன் மூலமே தனது செல்வாக்கைச் சிங்கள மக்கள் மத்தியில் உயர்த்திக்கொண்டு அசைக்க முடியாத இடத்தில் அமர்ந்து கொண்டார்.

ஓர் இனப்படுகொலையுடன் முள்ளிவாய்க்கால் கரையோரம் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தன்னை ஒரு துட்டகைமுனுவாக நிலைநிறுத்திக் கொண்டவர். அந்த அரசியல் நகர்வுக்கு ஊடாகவே சிறுபான்மை மக்களைப் பகைத்துக்கொண்டவர்.

போரை முடித்து வைத்துவிட்டாலும்கூட அவரால் புலிவாலைக் கைவிட முடியவில்லை. போருக்குப் பின்னரான காலத்திலும் புலிகள் பற்றிய மாயையிலேயே அல்லது புலிகளை மீண்டெழ விட்டுவிடமாட்டோம் என்கிற வீறாப்பு மாயையிலேயே சிங்கள மக்களை திளைக்க வைத்து அரசியல் நடத்திக்கொண்டிருந்தவர், அந்தக் காரணத்தாலேயே ஒரு பகுதிச் சிங்களவர்களின் வெறுப்பையும் சம்பாதித்துத் தேர்தலில் தோல்வியையும் தழுவிக்கொண்டவர்.

இத்தனைக்குப் பின்னரும் அவரால் இனவாதத்தையும் விடுதலைப் புலிகளையும் விட்டுவிட்டு முற்போக்கான, புத்தெழுச்சியான அரசியலை நடத்த முடியவில்லை. தோல்வியிலிருந்து மீண்டெழுவதற்கு அவர் மீண்டும் கையிலெடுத்த ஆயுதங்கள் இனவாதமும் விடுதலைப் புலிகளும்தான் என்பதை அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் வெளிப்படையாகக் காட்டுகின்றன.

புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மக்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிடப்போகிறார்கள் என்றும், இந்த அரசின் காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீளெழுச்சி பெற முயற்சிக்கின்றது என்றும், விடுதலைப் புலிகள் கேட்டதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கேட்கிறது அதற்கு இந்த அரசும் ஆதரவாக இருக்கின்றது என்றும் சிங்கள மக்களிடம் பரப்புரை செய்வதன் ஊடாகவே தனது அரசியல் மீளெழுச்சியைச் சாத்தியமாக்க மகிந்த அண்மைக் காலமாகவே முயன்று வருகிறார். காத்திரமான அரசியலைச் செய்வதற்கான சரக்கு அவரிடம் இல்லை என்பதால்தான், அவர் மீண்டும் மீண்டும் சகதிக்குள்ளேயே உழன்றுகொண்டிருக்கிறார்.

ஆபத்தான புலிகளையும் விடுவித்துத் தனது பாதுகாப்பையும் குறைப்பதன் மூலம் புலிகளைக் கொண்டு தன்னைக் கொல்வதற்கு இந்த அரசு முயல்கிறது என்று சிங்கள மக்களை நம்ப வைக்கும் மலின அரசியல், அவரது ஆகப்பிந்திய நகர்வு. அரசுக்கும் தனது சொந்தக் கட்சிக்கும் எதிரான தனது நகர்வுகளின் விளைவாகவே அவரது பாதுகாப்பைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கையை எடுத்திருக்கக்கூடிய நிலையில், அதனை நேர்பட எதிர்கொள்வதற்குத் திராணியற்ற வகையில் இப்படிப் புலிகளை இழுத்து அரசியல் செய்ய அவர் முயன்றிருப்பது அவரது அரசியல் வறுமையையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.


இத்தகைய முயற்சிகள் இனங்கள் இடையே ஒருபோதும் இணக்கத்தை எட்டுவதைச் சாத்தியமாக்காது. அது தீர்வுக்கும் ஒரு தடையாகவே இருக்கும்.

இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கான அரசியலைச் செய்வதைவிட்டுவிட்டு, நாட்டைப் பின்னோக்கி இழுக்கும் வகையில் இப்படியான மலின அரசியலை அவர் செய்ய முயன்றிருப்பது இந்த நாட்டின் மிகப் பெரும் சாபக்கேடு!



கட்டுரை

# இந்தியத் தலைமை அமைச்சரது பயணம் ஈழத் தமிழர்களுக்கு நன்மை பயக்கட்டும்!



மு. ஈழத்தமிழ்மணி

இலங்கைத் தமிழர்களின் நலன் குறித்த அக்கறையில் யாழ்ப்பாணம் சென்ற முதல் இந்தியத் தலைமை அமைச்சர் நான்தான் என 2016ஆம் ஆண்டு மே மாதம் ஆறாம் திகதி சென்னையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்து இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி கூறியிருந்தார்.

மோடி தமது இலங்கைக்கான முதல் பயணத்தை 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்கொண்டிருந்தார். 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இந்திய அரசின் தலைமை அமைச்சர் என்ற ரீதியில் அவர் முதன் முதலாக இலங்கைக்கு வந்திருந்தார். புதிய அரசுத் தலைவராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதையடுத்து தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை 2015 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியன்று இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்தார். அரசுத்தலைவர் மைத்திரியின் அழைப்பினை ஏற்று 2015 மார்ச் மாதத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியத்தலைமை அமைச்சர் நரேந்திரமோடி, இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் இரண்டாவது தடவையாகத் தனது இலங்கைக்கான பயணத்தை நாளை வியாழனன்று மேற்கொள்ளவுள்ளார்.

> “ புதிய அரசுத் தலைவராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதையடுத்து தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை 2015 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியன்று இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்தார். அரசுத்தலைவர் மைத்திரியின் அழைப்பினை ஏற்று 2015 மார்ச் மாதத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியத்தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் இரண்டாவது தடவையாகத் தனது இலங்கைக்கான பயணத்தை நாளை வியாழனன்று மேற்கொள்ளவுள்ளார்.


அவரது இலங்கைக்கான இந்தப் பயணம் கொழும்பு மற்றும் மலையகத்துடன் மட்டுமே மட்டுப்படுத்தப்படுமெனத் தெரியவருகின்றது. கட்டுநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொள்வதுடன் பின்னர் டிக்கோயா நகரில் இந்திய நாட்டு உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலையையும் அவர் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் கண்டியில் உள்ள தலதாமாளிகைக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதுடன், கலாசார மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல்லையும் நட்டு வைக்கவுள்ளார்.

நரேந்திர மோடியுடன் இலங்கை அரச தலைவர், தலைமை அமைச்சர் உட்பட பல இராஜதந்திரிகளும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களுடனான சந்திப்பும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய நல்லாட்சி அரசு பதவிக்கு வந்தபின்னர் இந்தியத்தலைமை அமைச்சரது இலங்கைப் பயணம் தமிழ் மக்களால் பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது அத்தகைய ஆர்வநிலையை அவதானிக்க முடியவில்லை.

### அறவழிப் போராட்டங்களை முன்னெடுக்கும் ஈழத் தமிழர்கள்

நல்லாட்சி அரசு பதவியேற்றதிலிருந்து இன்றுவரை எமது தமிழ் மக்கள் பலவிதமான அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். வீதியில் இறங்கிப் போராடுகின்ற நிலைக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டு விட்டனர்.

காணாமல் போனவர்களின் உறவுகளால் தங்களது பிள்ளை



“

இன்றைய கால கட்டத்தில் ஆளுமை மிக்க தொரு தலைவ ராகக் கருதப்படும் நரேந்திர மோடி தமிழர்களின் உணர்வுகளை மதிப்பவராகவும் கருதப்படுகிறார். கடந்த ஜனவரி மாதம் தமிழகத்தில் தமிழர்கள் நடத்திய ஜல்லிக்கட்டுப் போராட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து அதற்கான தடையை நீக்கியவர் என மதிக்கப்படுபவர். ஜல்லிக் கட்டுப் போராட்டத்தின் போது இந்தியத் தமிழர்களுக்கு ஈழத்தமிழர்களின் பங்கும் ஆதரவும் உணர்வுகளும் மேலோங்கி இருந்தன. இதனால் இந்தியப் பிரதமர் மீதானதொரு தனி மதிப்பும் மரியாதையும் ஈழத்தமிழர்களிடையே இருந்து வருகிறது.

களைக் கண்டு பிடித்துத்தருமாறு கோரி.மேற்கொள்ளப்படும் போராட்டம், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களது காணிகளை விட்டு விலகி தம்மைத்தமது இடங்களுக்குச் சென்று வசிப்பதற்கு வழிவிடுமாறு கோரி நடப்படுகின்ற போராட்டம் என்பவை தமிழர்களின் வாழ்வில் நிரந்தரமாகிவிட்ட நிலையில் தமிழினத்தின் மீதான பிரச்சினைக்கு நல்லாட்சி அரசும் நிரந்தரமான தீர்வு வழங்க முயலாமல் காலம் கடத்துவதையும்,ஐ.நா.விடம் அதற்காக மைத்திரி அரசு இரண்டு வருட கால அவகாசத்தை பெற்றுக் கொண்டதும் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியும் எரிச்சலையும் எற்படுத்தியிருக்கிறது. இந்த நிலையில் இந்தியத் தலைமை அமைச்சரான மோடியின் பயணம் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஏமாற்றம் தருமொன்றாகவே கணிக்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் ஆளுமை மிக்கதொரு தலைவராகக் கருதப்படும் நரேந்திரமோடி, தமிழர்களின் உணர்வுகளை மதிப்பவராகவும் கருதப்படுகிறார். கடந்த ஜனவரி மாதம் தமிழகத்தில் தமிழர்கள் நடத்திய ஜல்லிக்கட்டுப் போராட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து அதற்கான தடையை நீக்கியவர் என மதிக்கப்படுபவர். ஜல்லிக் கட்டுப் போராட்டத்தின் போது இந்தியத் தமிழர்களுக்கு ஈழத்தமிழர்களின் பங்கும் ஆதரவும் உணர்வுகளும் மேலோங்கி இருந்தன. இதனால் இந்தியப் பிரதமர் மீதானதொரு தனி மதிப்பும் மரியாதையும் ஈழத்தமிழர்களிடையே இருந்து வருகிறது.

இந்தியாவில் சில மாதங்களுக்கு முன்னர் கறுப்புப் பணத்தை ஒழிக்கும் முயற்சியில் நடைமுறையிலிருந்த பழைய நாணயத்தாளை ஒழிக்கும் திட்டத்தை அதிரடியாக நாட்டில் கொண்டு வந்து வெற்றி கண்ட நரேந்திரமோடியின் தலைமையிலான பாரதிய ஜனதாக்கட்சி உத்தரப் பிரதேச மாநில சட்ட சபைத்தேர்தலில் மாபெரும் வெற்றியீட்டியிருந்தது.

### இந்திய அரசின் இலங்கைக்கான உதவிகள் பலதரப்பட்டவை

இலங்கையின் புதிய ஆட்சி மாற்றத்தையடுத்து, இந்திய இலங்கை உறவுகள் மீதான வரலாற்று ரீதியான மாற்றங்களை வலுவான நிலையில் முன்னோக்கி நகர்த்துவதற்கான முயற்சியாக தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான இரண்டாவது பயணம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம் தொடக்கம் காங்கேசன் துறை வரையிலான புகையிரதப் பாதை நிர்மாணப்பணி 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதேபோல் மடுவீதி தொடக்கம் திருக்கேதீஸ்வரம் வரையிலான புகையிரதப் பாதை புனரமைக்கப்பட்டு பரீட்சார்த்த போக்குவரத்து 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மேற்கொண்டு பார்க்கப்பட்டது. வடபகுதிக்கான புகையிரதப்பாதை நிர்மாணப்பணியில் இந்தியா ஆற்றிய பங்களிப்பு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இணைப்பினை ஊக்குவிக்கும் ஓர் அம்சமாகும்.

இந்தியா கல்வி, சுகாதாரம் , போக்குவத்து, விவசாயம் , மீன்பிடித்துறை, கைவினைத்துறை மற்றும் கலாசாரம் போன்ற துறைகளிலும் தொடர்ச்சியாக சிறிய அபிவிருத்தித்திட்டங்களைப் படிப்படியாக இலங்கையில் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு புனரமைக்கப்பட்டமை, மகாத்மா காந்தி ஞாபகார்த்த நிலையம் நிர்மாணிப்பு, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டையில் கைவினை கிரா மங்களை அபிவிருத்தி செய்தல் , மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்பு தோட்டத்தொழிலாளர்களுக்கான 70 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைப் புனரமைத்தல், கிளிநொச்சி விவசாய மற்றும் பொறியியல் பீடங்கள் நிர்மாணிப்பு, யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையம் நிர்மாணிப்பு, முல்லைத்தீவு மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் விநியோகம், வடமாகாணத்தில் தொழிற்பயிற்சி நிலையம் உருவாக்கல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா பங்களிப்பு மேற்கொண்டிருப்பினும், இந்தியாவுக்கான தட்டிக் கழிக்காத பொறுப்பு என்று ஒன்றுள்ளது.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வுக்கு இந்தியா வழிவகுக்க வேண்டும்.

சுமார் 70 ஆண்டுகள் வரையில் நாட்டில் நீடித்துச் செல்கின்ற தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியதலைமை அமைச்சர் நரேந்திர மோடி முன்வரவேண்டும்.

### இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா அக்கறை செலுத்தி வந்துள்ளது

இலங்கையின் முன்னைநாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச, தமிழர்கள் மீதான கொடிய போரை வன்னியில் நடத்திக் கொண்டிருந்த வேளையில் 2002 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அப்போதைய இந்திய நாட்டு தலைமை அமைச்சரான மன்மோகன்சிங் இலங்கைக்கு வந்திருந்தார். இந்தியாவின் ஐந்து பிரதமர்களும் இலங்கைக்கு வந்த போதெல்லாம் தமிழர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக தமிழ்த் தலைவர்களுக்கும் அப்போதைய சிங்களத் தலைவர்களுக்குமிடையே முரண்பாடுகளும் கருத்து மோதல்களும் இடம்பெற்றிருந்தன.

தந்தை செல்வா முதல் அமிர்தலிங்கம் வரை பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடக்கம் இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான இரா. சம்பந்தன் வரை தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண்பதற்கு இந்தியா உதவ வேண்டும் எனக் குரல் கொடுத்தபடியே இருந்துள்ளனர்; இருந்து வருகின்றனர்.


புதிய நல்லாட்சி அரசில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற தமிழ் த்தலைவரான இரா.சம்பந்தனையும் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி சந்திக்கின்ற வாய்ப்புள்ளதனால் தமிழர்களின் பிரச்சினையின் முக்கியத்துவம் உணரப்படும் என நம்பலாம். இலங்கைக்கு இரண்டாவது தடவையாக பயணம் மேற்கொள்கின்ற இந்தியத் தலைமை அமைச்சரான மோடி தமிழ்த் தலைவர்களால் நேரடியாக எடுத்துரைக்கப்படுகின்ற தமிழர்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக மைத்திரி அரசின்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத் தமிழர்களிடம் நிறையவுண்டு.

பல இந்தியத் தலைவர்களை ஈழத் தமிழர்கள் நம்பியதும் ஏமாந்ததும் இந்தியாவா ஈழத் தமிழர்களுக்கு இப்படித் துரோகமிழைத்தது என்றவாறான வெறுப்புணர்வுகளிலிருந்தாலும், இன்றைய கால கட்டத்தில் நல்லாட்சி அரசும் தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கின்றது என்ற எண்ணம் மேலோங்கியுள்ள நிலையில், இரண்டு ஆண்டுகளில் நல்லாட்சி பற்றித் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள தமிழ் மக்களின் உணர்வுகளை இந்திய தலைமை அமைச்சர் மதிக்க வேண்டும்.

மைத்திரியின் நல்லாட்சியிலும் தமிழ் மக்கள் நிம்மதியற்ற சூழலில் படையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் போர் முடிந்த பின்னர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை இந்தியா முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியத் தலைமை அமைச்சரது இரண்டாவது பயணம் ஈழத் தமிழர்களுக்கு சாதகமானதொரு நிலையை ஏற்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

மே 18 இல் முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டு இன்றுவரையில் இதயங்களிலிருந்து ரணவலி ஆறாது தவிக்கின்ற, வேதனைப்படுகின்ற ஈழத் தமிழர்களது துயரங்களை ஆற்ற இந்திய அரசு வழி சமைக்க வேண்டும். வல்லமை படைத்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான இரண்டாவது பயணம் ஈழத் தமிழர்களின் விடியலுக்கு நன்மை பயக்குமா?



## ஆசிரியருக்கான கடிதம்

### அரசியல் காய்நகர்த்தல்களின் அடிப்படை எவருக்கும் புரிவதில்லை

‘சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி’ என்றொரு பழமொழி தமிழில் வழக்கில் உள்ளது. அரசுக்கு எதிராக அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் பல தரப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த இராணுவத்தில் சிறப்புச் செயலணியொன்றை உருவாக்கி, அதன் அதிகாரங்களை முன்னாள் இராணுவத் தளபதியும் , தற்போதைய அமைச்சரவை உறுப்பினருமான சரத்பொன்சேகாவிடம் ஒப்படைக்க அரச உயர் மட்டத்தில ஆலோசிக்கப்பட்டு வருவதாகச்செய்தியொன்று கசிந்திருந்தது. அதன் உடனடி விளைவாக பல தரப்புக்களிலிருந்தும் அந்த விடயம் குறித்து காரசாரமான விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன. அதன் அடிப்படை குறித்து இலங்கையில் சேவையாற்றும் பல வெளிநாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த இராஜதந்திரிகள் கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டு அவதானித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகி வருகின்றன. இத்தனைக்கும் சரத்பொன்சேகா என்பவர் முன்னாள் இராணுவத்தளபதி என்பதும், அவரது தலைமையில் இலங்கை இராணுவம் செயற்பட்ட வேளையிலேயே விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டனர் என்பதும் பலரது மனங்களில் இடறலை ஏற்படுத்தியுள்ளன. அத்தகையதொரு இராணுவத்தரப்புச் சார் பதவிக்கு சரத்பொன்சேகா நியமிக்கப்பட்டால், அரசின் இயக்கத்துக்குப் பாதிப்பேதும் ஏற்பட வாய்ப்புண்டா என்ற கோணத்திலும் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

‘மடியில் கனமில்லாவிட்டால் வழியில் பயமெதற்கு’ என்ற முதுமொழி இன்றைய இலங்கை அரசியலரங்கில் அரசியல் தலைவர்களது குழப்பமான மனநிலைக்குப் பொருத்தமானதொன்றாக அமைகின்றதல்லவா?

அதேவேளை தமிழ் மக்கள் குறித்து இதுவரை காலமும் கடும் நிலைப்பாட்டைப் பேணி வந்த ஜே.வி.பி. தரப்பு , இருந்தாற் போலிருந்து தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வந்து இனங்கள் மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது குறித்துக் கருத்து வெளியிடுகிறது. ஆயினும் இது ஒரு வகையில் ‘ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை’ போன்றதெனவே தமிழ் மக்கள் கருதமுனைவர் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

மொத்தத்தில் அரசியலில் இத்தகைய குத்துக்கரணங்களும் கோமாளித்தனங்களும் சகஜமப்பா என்றே கருத வேண்டியுள்ளது.

த.இரத்தினம்
கோண்டாவில்

# தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு மாகாண சபைகளின் செயற்பாடுகள் ஒழுங்காக வேண்டும்

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டில் உள்ளதான அனைத்து மாகாண சபைகளினதும் செயற்பாடுகள் ஒழுங்கமைவு பெற வேண்டும் என்பதான கருத்துக்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
33ஆவது முதலமைச்சர்கள் மாநாடு அண்மையில் ஹபரண சினமன் லொஜ் மண்டபத்தில் இடம்பெற்றபோதே இந்தக் கருத்துக்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் கருத்துக்களைத் தெரிவித்துள்ள அவர்,

"எமது நாட்டினது ஒன்பது மாகாண சபைகளும் வெவ்வேறு திசைகளில் செயற்படுவதனால் நாட்டின் பொது அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பெரும் சிக்கல் நிலைமைகள் தோன்றியுள்ளது.
மக்கள் பிரதிநிதிகளாக பொறுப்புக்களை நிறைவேற்றுவது அனைவரினதும் கடமையாகும். மக்களுக்கான வினைத்திறனான சேவையினை வழங்காதிருப்பதால் மக்கள் எம்மீது வெறுப்படைவதுடன் மனஅழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர்.

நாட்டின் தேசிய அபிவிருத்தி இலக்குகளை வினைத்திறனான முறையிலே அடைந்துகொள்வதற்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அனைத்தும் ஒழுங்கமைப்புடன் இருக்கவேண்டும். அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பும் சீர் செய்யப்படவேண்டும். அரசமைப்புச் சட்டம் மற்றும் அது சார்ந்த அதிகாரம் என்பன வேறுபட்டிருந்தாலும் எமது நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே மக்களுக்கான சேவைகளை நாம் வழங்க வேண்டும்" - என்றார்.




Abans

# மாணவர்களுக்கான மடிக் கணினிகளை வழங்கியது அபான்ஸ்

கணினியின் தேவை அத்தியாவசியமாகவுள்ள மாணவர்களுக்கான மடிக்கணினிகளை இலவசமாக வழங்கி உதவும் சமூக நற்பணி சேவையை அபான்ஸ் ஆரம்பித்துள்ளது.
இதன்பிரகாரம் கணினிகளின் தேவை இருந்தும் அதனை கொள்வனவு செய்வதற்கான நிதி வசதியற்றிருந்த மாணவர்களுக்கான நூறாவது மடிக் கணனிகளை வழங்கி வைக்கும் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றுள்ளது.
இதுவரையும் ஐந்து கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி மடிக்கணினிகளை அன்பளிப்பாக வழங்கி வைக்கும் சேவையின் ஐந்தாவது கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது மாணவர்களுக்கான மடிக்கணினிகளே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.
அபான்ஸ் தலைமையகத்தின் பயிற்சிக் கூடத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அபான்ஸ் பி.எல்.சி. தொழில்நுட்பப் பிரிவின் பொதுமுகாமையாளர் சத்துர ஜயவர்தன, அபான்ஸ் பி.எல்.சி வர்த்தகக் குறியீட்டுமுகாமையாளரர் செல்வி. திமுத்து விக்கிரமசிங்க ஆகியோர் விருந்தினராக கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையில் முதல்தர கணினி விநி யோகஸ்தராக திகழும் அபான்ஸ் நிறுவனம் உலகின் புகழ்பெற்ற எச்.பி,டெல்லி னோவா, அசெர் மற்றும் அப்பிள் வர்த்தக நாமங்களைக் கொண்ட கணினிகளுக்கான அங்கீகாரம் பெற்ற இலங்கை சார்பான முகவர் நிறுவனமாகும்."

மேலும் "இலங்கையில் இதுவரைக் காலமும் இணையத்தளங்களுக்கு பிரவேசித்து அறிவாற்றல் சார்ந்த தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும், கணினிகளை பயன்படுத்துவதற்குமான வாய்ப்பு மிகவும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுக்கே கிடைத்துள்ளது.
அந்தவகையிலே நாட்டின் முன்னணி நிறுவனம் என்ற வகையில் இந்த நிலமையை மாற்றியமைப்பதற்கான செயற்பாடாக மாணவர்களுக்கான இந்தப் பங்களிப்பு வழங்குதலை எமது பொறுப்பாக கருதுவதோடு, எம் நாட்டின் இளைய சமூதாயத்தின் அறிவாற்றல் மற்றும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் மிகச்சிறந்த தலைவர்களை உருவாக்கிட முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்" என அபான்ஸ் குறிப்பிட்டு ள்ளது.

# குடும்பப் பிணைப்பை ஊக்குவிக்கும் பரப்புரைச் செயற்பாடுகள் ஆரம்பம்

HUGGIES BRAND

குழந்தைகளுக்கான அணையாடை (diaper) சந்தையில் தனது அதிசிறந்த தரத்திற்காக, பன்னாட்டு ரீதியாக பிரபலமான ஒரு வர்த்தகநாமமான கக்கீஸ் (Huggies) இலங்கையிலும் தற்போது அறிமுகமாகியுள்ளதுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது.
சிறுவர்களை இலக்காகக் கொண்டு அன்பினை வளர்க்கும் அதேசமயம் பெற்றோர்களும் பிள்ளைகளும் தமக்கிடையே இயைபின்றி காணப்படுகின்ற தன்மைகளை இனங்கண்டுகொண்டு தங்களிடையேயானஉறவை மீளவும் கட்டியெழுப்ப வாய்ப்பளிக்கும் வகையில் விழிப்பு ணர்வு நிகழ்ச்சித்திட்டங் களை கக்கீஸ் நிறுவனம் வடிவமைத்துள்ளது.
அந்த வகையிலே பெற்றோர் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கிடையிலான பிணைப்பைப் பேணு தல் மற்றும் இன்றைய உலகின் யதார்த்தங்களை இனங்காணுதல் ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள கக்கீஸ் (Huggies) இன்றைய சமூக முறைமையின் யதார்த்தங்களை எவ்வாறு குடும் பங்கள் உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதை பொதுமக்கள் மத்தியில் உணர்திறனாக்கும் பணியை நாடு பூராகவும் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் தனிநபர் வருமானம் அதிகரிப்பு

இலங்கையில் தனி நபர் வருமானமானது கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையிலே உள்நாட்டிலுள்ள சில்லறை விற்பனை சந்தைகளின் தொகை மதிப்பீடு 25 தொடக்கம் 30 பில்லியன் டொலர்களாக அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் இந்த மதிப்பீட்டின் சமனிலையானது விரைவில் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
குறிப்பாக இலங்கையின் தனி நபர் வருமானமானது 3 ஆயிரத்து 912 டொலர்களாக அமைந்துள்ளது.
இந்தத் தொகையானது தெற்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரத் தரப்படுத்தல் முறைமையில் முதன்மை இடத்தை பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

# இலங்கைக்கு 221.85 பில்லியன் ரூபா கடன் உதவி

## சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி

இலங்கைக்கான கடன் உதவியாக 221.85 பில்லியன் ரூபாக்களை வழங்குவதற்கான அனுமதியினை சர்வசே நாணயநிதியத்தின்நிறைவேற்றுக்குழு வழங்கியுள்ளது.
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக ஏழு தவணைகளில் இந்தக் கடன் தொகையினை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் திட்டமிட்டுள்ளது.
இதன்படி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாடுகளுக்கிடையே ஏற்படும் நிலுவைத் தொகையினை செலுத்துவதற்கு தேவை ஏற்படும் படசத்திலே பயன்படுத்துவதற்கான முன்ஏற்பாடகவே இந்தக்கடன் உதவி வழங்கப்படவுள்ளது.
இந்தநிலையிலே கடன் உதவிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியமானது நாட்டின் நிதிக்கொள்கை மற்றும் நிலுவை தொடர்பில் எதிர்பார்க்கும் சில நோக்கங்கள் குறித்த யோசனைகளை முன்வைத்துள்ளது.
பிரதானமாக வருமானத்தை அதிகரித்து வரவு மற்றும் செலவில் இடைவெளியைக் குறைத்தல், மத்திய வங்கியின் பன்னாட்டு இருப்பு குறைவடைதலைத் தடுத்தல், மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் அரச கடனைக்குறைத்தல், கடனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுத்தல், அரசநிதி முகாமைத்துவம் மற்றும் அரச திட்டங்களின் செயற்பாடுகளை மேம்படுத்தல் என்பன இந்த யோசனைகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
அத்துடன் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு நெகிழ்ச்சித்தன்மையுடைய செலாவணி விகிதத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் அனைத்து மக்கள் பிரிவினருக்குமான நிரந்தரப் பொருளாதார அபிவிருத்தியை அடைதல் என்பனவும் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவைதவிர மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நான்கு விடயங்கள் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

9/5/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| [illegible] | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | ⇩ | -0.63 | 6,666.83 | 6,667.46 |
| S&P SL20 | ⇧ | 9.16 | 3,836.50 | 3,827.34 |
| வியாபாரப்புரள்வு | | | 720,922,620 | 637,767,230 |
| உள்நாடு:- கொள்வனவு | | | 473,400,640 | 358,573,216 |
| விற்பனை | | | 503,461,568 | 496,426,112 |
| வெளிநாடு:- கொள்வனவு | | | 247,522,016 | 279,194,016 |
| விற்பனை | | | 217,461,072 | 141,341,104 |



| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 41.30 | 3,605,387 | 147,842,955 |
| சன்சைன் ஹோல்டிங்ஸ் | SUN.N | 56.00 | 1,890,531 | 103,978,847 |
| சிலோன் கிரேன் எலிவேற்றர் | GRAN.N | 72.30 | 1,202,872 | 87,112,161 |
| பான் ஏசியன் பவர் | PAP.N | 3.00 | 20,079,798 | 64,239,674 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 240.00 | 191,266 | 45,903,767 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 2260.00 | 19,013 | 42,970,959 |
| சொ·ப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் | SHL.N | 13.90 | 2,540,546 | 34,325,059 |
| தேசிய அபவிருத்தி வங்கி | NDB.N | 149.00 | 222,331 | 33,326,996 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 68.90 | 415,516 | 28,619,241 |
| வட்டவளை பெருந்தோட்டம் | WATA.N | 32.10 | 551,090 | 18,167,984 |

**அறிவித்தல்கள்**

பங்குலாபம்
சிலோன் டேபாப்கோ ரூபா. 15.00 இடைக்கால பங்குலாபம்
டோகியோ சிமென் - ஒதுக்கங்களின் முதலாக்கம்
கலாமசு சிஸ்ரம் - உரித்து வழங்கல் திகதி
லங்கம் சிலோன் - உரித்து வழங்கல்

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 236 |
| விலை உழைப்பு | 12.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.6 |

# பாக். எல்லைக்குள் புகுந்து தாக்குவோம்

## ஈரான் எச்சரிக்கை



தெக்ரான், மே 10

பாகிஸ்தானில் இருந்துகொண்டு தமக்கு எதிராகச் செயற்படும் ஆயுதக் குழுக்களைப் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்தது.

பாகிஸ்தான் - ஈரான் நாட்டு எல்லையில் ஜெய் அல் அட் என்ற ஆயுத அமைப்பு செயற்படுகிறது. இந்த அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரிகள் ஈரானுக்குள் போதைப் பொருள்களைக் கடத்துகின்றனர் என்று ஈரான் தரப்பு குற்றச்சாட்டுகிறது.

இதைக் கட்டுப்படுத்த ஈரான் ராணுவம் எல்லையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இது தொடர்பாக ஈரான் இராணுவ தலைமைத் தளபதி முகமது பகுதி நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

"பாகிஸ்தான் எல்லையில் செயற்படும் தீவிரவாத முகாம்கள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். தீவிரவாதிகளின் அட்டூழியம் இனியும் தொடர்ந்தால் ஈரான் ராணுவம் சகித்துக் கொள்ளாது. நாங்களே நேரடியாகக் களம் இறங்கி, பாகிஸ்தான் மண்ணில் உள்ள தீவிரவாத முகாம்களை அழிப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



கனடாவின் கியூபெக் நகரில் தொடர்ச்சியாகப் பொழிந்த கடும் மழை காரணமாக, அங்கு தற்போது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணியில் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கியூபெக்கின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று கனடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# மக்ரோன் - ட்ரம்ப் விரைவில் சந்திப்பு





பரிஸ், மே 10

பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இருவரும் எதிர்வரும் 25ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளனர் என்று ட்ரம்பின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை அறிவித்தது.

பிரான்சின் இரண்டாம் கட்டத் தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. லி பெனைத் தோற்கடித்து மக்ரோன் அதிபரானார். அவருக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசாமே, இந்திய தலைமை அமைச்சர் மோடி உள்ளிட்ட அரச தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் ட்ரம்ப் மக்ரோன் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று வெள்ளை மாளிகை அறிவித்தது. (ம)

# தென்சூடானில் அகதிகளாக 10 லட்சம் சிறுவர்கள்



யுபா, மே 10

தெற்கு சூடானில் நடக்கும் உள்நாட்டுப் போரினால் 10 லட்சம் சிறுவர்கள் அகதிகளாக உள்ளனர். இந்தத் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

ஆபிரிக்க நாடான சூடானில் இருந்து கடந்த 2011ஆம் ஆண்டு தெற்கு சூடான் பிரிந்தது. அதன் பின்னர் இனவாரியாக பிளவுப்பட்ட தெற்கு சூடான் உள்நாட்டுப் போர் காரணமாகக் கடும் பஞ்சத்தை எதிர்கொண்டுள்ளது. இதனால் மக்கள் கூட்டம் கூட்டமாக அகதிகளாகத் தங்களது நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். தங்கள் நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்வோர் எண்ணிக்கையும் மிகையாகவே அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தெற்கு சூடானில் நிலவும் உள்நாட்டுப்போர் காரணமாக 10 லட்சம் சிறுவர்கள் அகதிகளாக உள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் நேற்றுமுன்தின அறிக்கை ஒன்று சுட்டுகிறது.

75 ஆயிரம் சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்துள்ளனர். 75 சதவீத குழந்தைகள் பள்ளிப் படிப்பை நிறுத்தியுள்ள னர் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை மேலும் சுட்டி குறிப்பிடுகிறது. (ம)

# அனுமதியின்றி எவரெஸ்டில் ஏறமுற்பட்டவருக்கு தண்டம் விதிப்பு

அனுமதியின்றித் தனியாக எவரெஸ்ட்சிகரம் ஏற முயன்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வீரருக்கு 40 லட்சம் ரூபா (இலங்கை மதிப்பில்) தண்டம் விதித்து நேபாள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ரியான்சீன்டெவி என்ற வீரரே அவ்வாறு தண்டம் செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார். வெளிநாட்டு வீரர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற வேண்டுமனால் நேபாள அரசுக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 20 லட்சம் ரூபா செலுத்த வேண்டும். அதை இவர் செலுத்தவில்லை. எவரெஸ்டில் உள்ள கண்காணிப்புக் குழுவின் சோதனையில் இவர் அகப்பட்டதைத் தொடர்ந்து நேபாள அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையின் இரு மடங்கு தண்டமாக விதிக்கப்பட்டது.

அவர் மீது சில வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் அவர் நேபாளத்துக்கு வருவதற்கு 5 ஆண்டுகள் தடை அல்லது இமைய மலையில் ஏறுவதற்குப் பத்து ஆண்டுகள் தடை விதிக்கப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# நாஜி காலத்து சின்னங்கள் தொடர்பில் இராணுவ குடியிருப்புக்களில் தேடுதல்

## ஜேர்மனியில் நடைபெறுகிறது

பேர்லின், மே 10

நாஜி காலத்து நினைவுப் பொருள்கள் ஜேர்மனி இராணுவ குடியிருப்புகள் இரண்டில் இருந்து கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் அனைத்து இராணுவ குடியிருப்புகளிலும் நாஜி கால பொருள்களைத் தேடுகின்ற அதிரடி உத்தரவை ஆய்வாளர்களுக்கு ஜேர்மனி அரசு வழங்கியுள்ளது.




ஜேர்மனி இராணுவ படைப் பிரிவுகளின் தலைமை ஆய்வாளரிடம் இருந்து இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

நாஜி கால பொருள்கள் இராணுவக் குடியிருப்புகளில் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கா செல்லத் திட்டமிட்டிருந்த தனது பயணத்தைக் ஜேர்மனி பாதுகாப்பு அமைச்சர் உர்சுலா வென் டெர் லெயென் கை விட்டுள்ளார்.

> ❝ ஹிட்லருடன் தொடர்புடைய அல்லது நாஜி காலத்துப் பொருள்கள் எவையும் (ஜேர்மனியின் சட்டத்துக்கு முரணான பொருள்கள்) இராணுவ முகாம்களிலோ அல்லது குடியிருப்புக்க ளிலோ கிடைக்கவில்லை.

"ஹிட்லருடன் தொடர்புடைய அல்லது நாஜி காலத்துப் பொருள்கள் எவையும் (ஜேர்மனியின் சட்டத்துக்கு முரணான பொருள்கள்) இராணுவ முகாம்களிலோ அல்லது குடியிருப்புக்களிலோ கிடைக்கவில்லை. இருப்பினும், இன்றைய இராணுவம் வெயர்மாக்ட் படைக்கு மரியாதை வழங்குவதை பொறுத்துகொள்ள போவதில்லை" என்று வென் டெர் லெயென் தெரிவித்தார். முன்னதாக நடைபெற்ற ஆய்வு ஒன்றில் ஜேர்மனியில் ஹிட்லரின் வரலாறு அதிகம் விரும்பி வாசிக்கப்படுகிறது என்று தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# ஆயுதக் கடத்தல் எகிப்தில் முறியடிப்பு

கெய்ரோ, மே10
எகிப்து நாட்டில் உள்நாட்டுச் சண்டையில் ஈடுபட்டுவரும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினருக்காக லிபியாவில் இருந்து பயங்கர ஆயுதங்களைக் கடத்திவந்த 15 லொறிகளை எகிப்து போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி அழித்தன.
முப்பதாண்டுகளுக்கும் மேலாக பதவியில் இருந்த ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2012ஆம் ஆண்டில் பதவியிலிருந்து இறக்கி விட்டு அதிபர் பதவியைப் பிடித்த மோர்சியால் ஓராண்டுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை.
எகிப்தின் இராணுவத் தலைவராகஇருந்தஅப்டெல்சிசிஎன்பவர் மோர்சியைப் பதவியிலிருந்து இறக்கி கைது செய்து சிறையிலும் அடைத்தார். அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவருக்குத் துணை புரிந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையை எதிர்நோக்கி காவலில் உள்ளனர். இவர்களில் பலருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஒரு பிரிவினர் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்திலும் பங்கேற்று வருகின்றனர். அவர்களுக்காகக் கடத்தப்பட்டு வந்த ஆயுதங்களே அவ்வாறு அழிக்கப்பட்டன. (ம)

# ஓ.பி.எஸ்.-இ.பி.எஸ். இணைப்புத் தோல்வி

சென்னை, மே10
அ.தி.மு. கழகத்தின் இரு அணிகளையும்இணைக்கும் முயற்சி தோல்வியடையும்நிலையில்உள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சசிகலா, தினகரன் இருவரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் தற்போதையமுதல்வர்எடப்பாடி பழனிச்சாமியும், கட்சியில் இருந்து பிரிந்து சென்ற முன்னாள் முதல்வர்ஓ.பன்னீர்செல்வமும் மீண்டும் இணைந்து செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
இரு அணிகளின் தரப்பிலும் பேச்சுக்குச் செல்லப்போகும் குழுக்களும் அமைக்கப்பட்டன. எனினும்பேச்சுஎன்பதுவெளிப்படையாக நடைபெறவில்லை.
ஓ.பன்னீர்செல்வம் அணியில்உள்ளவரான செம்மலை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் "எடப்பாடி பழனிச்சாமியின் தரப்பில் உள்ள 35 சட்டமன்ற உறுப்பினர்கள் தம்முடன் இணையத் தயாராக உள்ளனர்" என்று தெரிவித்திருந்தார்.
இந்தக்கருத்துக்குஎடப்பா



டியின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவரும் தமிழகநிதி அமைச்சருமான ஜெயக்குமார் நேற்றுப் பதிலடிகொடுத்தார்.
"ஆட்சியில் எவருடைய தலையீடும் தற்போது இல்லை.
பன்னீர் செல்வம் அணியில் இருந்து வருவதற்கு பலர்தயாராகஉள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.
எனவே இந்தக் கருத்துக்களின்மூலம்ஒவ்வொரு தரப்பும் தமது பெரும்பான்மைப் பலத்தை நிருபிக்கவே எத்தனிக்கின்றன எவரும் இணைந்து செயற்படத் தயாரில்லை என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு; 9 மாணவர்கள் சாவு

காபூல், மே10
ஆப்கானிஸ்தானின் பர்வான் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று நடந்த குண்டு வெடிப்புச்சம்பவத்தில் 9 மாணவர்கள்பரிதாபமாகச்சாவடைந்தனர்.
கற்றல்செயற்பாடுகள்ஆரம்பிக்கப்பட்ட சில நிமிடங்களில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. 9 மாணவர்கள் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். அவர்களைச் தவிர எட்டு மாணவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில்பலரின்நிலைமைகவலைக்கிடமாக உள்ளதாதல் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
நேற்றுமதியம்வரைஎந்தஆயுதக் குழுவும் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு இதை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம்வெளியிடப்பட்டது. (ம)




ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின்பிடியில்இருந்து மீட்கப்பட்ட சிரியாவின்நிம்ருட்நகரில்சாகசக்கலைஞர்களான இப்ராகிம் அல் கதிரி (வயது - 19), மொகமட் அல் கதிரி (வயது - 18) இணைந்து போர் எச்சத்தை சான்று பகரும் கட்டடமொன் றில் சில சாகசங்களைச் செய்துள்ளனர். இது தொடர்பிலான ஒளிப்படங்களும் காணொலியும் சமூக வலைத்தளங்களில் தற்போது மிகவும் வைரலாகப் பரவி வருகின்றன. (ம)



# ஜப்பானில் நிலஅதிர்வு

டோக்கியோ, மே10
ஜப்பானில் நேற்று சக்திவாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்தத் தகவலை அமெரிக்கப் புவியியல் சார் ஆய்வுமையம் உறுதிப்படுத்தியது.
ஜப்பானின் தென்பகுதியில் உள்ள தீவான மியாகோவி லேயே இந்த நில அதிர்வு ஏற்பட்டது. இந்த அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 6.2 அலகுகளாகப் பதிவானது என்றுஅமெரிக்கப்புவியியல்சார் ஆய்வு மையம் தெரிவித்தது.
சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. எனினும், அலையின் வடிவங்களில் மாறுதல் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. மக்கள் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது என்று ஜப்பான் புவியியல்சார் ஆய்வு மையம் தெரிவித்தது.
ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு மிகப்பெரும் சுனாமிப் பேரலை ஏற்பட்டது. இதில் 18 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். புகுசிமா அணு உலையில் வெடிப்பும் ஏற்பட்டது. இந்த வெடிப்பால் இன்றளவும் கதிர் வீச்சுவெளிவருகிறது என்று அவ்வப்போது ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# தொலைந்துபோன கடற்கரை மீண்டும் தோன்றிய அதிசயம்

டப்ளின், மே10
அயர்லாந்தில் கடுமையான சூறாவளிகாற்றுமற்றும்கடல் சீற்றத்தால்1984ஆம்ஆண்டு காணாமல்போனகடற்கரை, கடந்த மாதம்திடீரெனதோன்றிய அதிசயம் அங்குள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அயர்லாந்தில்உள்ளதீவு அசில். இங்குள்ள சிறிய கிராமங்களில் ஒன்று டூவாக். இங்கு 300 மீற்றர் நீளத்தில் அழகான கடற்கரை இருந்தது. 1984ஆம்ஆண்டுவீசிய கடும் புயலால் கடற்கரையில் இருந்த தொன் கணக்கான மணல் காணாமல் போனது. பெரிய பெரிய பாறைகள் மட்டும் இருந்தன.
ஆங்காங்கே குளம் போன்று தண்ணீர் தேங்கி கிடந்தது. இதனால் சுற்றுலாப் பயணிகள் வரத்துகுறையத்தொடங்கியது.
இந்தநிலையில்கடந்தமாதம் தொடர்ந்து10நாள்களாக ஆச்சரியம் அளிக்கும் வகையில், கடலில்வழக்கத்துக்குமாறான அலைகள் எழுந்தன. இந்த அலைகள் தொன் கணக்கில் மணல்களைக் கரைக்கு கொண்டு வந்து குவிக்கத் தொடங்கின. இதன் காரணமாக காணாமற்போன கடற்கரை மீண்டும் உருவாகத் தொடங்கியுள்ளதாம். (ம)

# 2, 200 கலைமான்களைக் கொல்ல நோர்வே அரசு முடிவுசெய்துள்ளது

மான் இனத்துக்கிடையே பரவும் தொற்று நோயொன்று, நோர்வேயின் நோர்ஜெல்லா பகுதியில் இருக்கும் கலைமான்களிடத்தில் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து 2 ஆயிரத்து 200 மான்களைக் கொல்ல நோர்வே திட்டமிட்டுள்ளது.
அமெரிக்காவில்வெகுவாகப்பரவியிருந்தஇந்த நோய்த் தாக்கம் தற்போது நோர்வேயிலும் பரவியுள்ளது. இது விரைவாக ஏனைய மான்களுக்கும் பரவும் அபாயம் உள்ளதை அடுத்து மிகவிரைவாகஇந்தநடவடிக்கையில்நோர்வே இறங்கியுள்ளது.
2ஆயிரத்து200என்பதுநோர்வேயின்காட்டுக் கலைமான்களின் எண்ணிக்கையில் 10 சதவிகிதம். இந்தமுடிவைஎடுப்பதற்காகநோர்வே அரசு மூன்று குழுக்களை அமைத்து ஆய்வு நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# முல்லை மாவட்டம் சார்ந்த நவீன இலக்கியங்கள் எழுதுவதில் ஆர்வமில்லை

இரா.தனம்

கடந்த 1979ஆம் ஆண்டு தனி மாவட்ட மாகப் பிரிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டமானது காடும் கடலும் வயல் நிலங்களும் சூழ்ந்துள்ள இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் விவசாயம், மீன்பிடி என்பனவற்றையே பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். அன்றைய கால கட்டத்தில் பாடசாலைகள் இல்லாமையாலும் நீண்ட தூரங்களுக்கு அப்பால் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதி இல்லாததாலும் ஆரம்ப காலங்களில் உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை சிலர் ஆரம்பக் கல்வியுடனே நிறுத்திவிட்டு விவசாய வேலைகளைக் கவனித்ததே ஒழிய கல்வியின் தேவையை உணரவில்லை. இவ்வாறான சூழலில் இங்கு வாழ்கின்ற மக்களிடையே நவீன இலக்கியங்கள் உருவாவதற்கு ஏது நிலை இல்லை என்றுதான் கூறவேண்டும். ஆனால் இவர்கள் பாரம்பரிய நாட்டார் பாடல்கள், நாட்டுக் கூத்துக்கள் முதலிய கிராமியக்கலைகளிலே ஆர்வமுடையவர்களாக இருந்தனர். இவை இவர்களது விவசாயபொருளாார வாழ்க்கையோடு இணைந்தனவாகவே அமைந்திருந்தன. இவ்வாறான நிலையிலும் ஓரளவு பொருளாதார வசதிபடைத்த குடும்பங்களிலிருந்து சிலர் பிற மாவட்டங்களில் சென்று கல்வியைக் கற்றனர். அவர்களே தமது புதிய இலக்கிய அனுபவங்களைக் கொண்டு நவீன இலக்கியங்களை எழுதுவதில் ஆர்வமாக இருந்தனர்.

சில இலக்கியப்படைப்பாளர்கள் முல்லைத்தீவு ஆலயச் சூழல்களை மையப்படுத்தவும் காதல் குடும்பச் சொத்துடமை ஆகியவற்றைப் பொருளாகக் கொண்டும் முல்லைத் தீவின் மண்வாசனை படும் படியானவைகளாக எழுதப்பட்டன. இதன் வரிசையில் இலக்கியப்படைப்பாளிகளாக த.கைலாசபிள்ளை, அ.பால மனோகரன், முல்லைமணி, வே.சுப்பிரமணியம், முல்லையூரான், க.சிவராசா, மதுபாலன், அருணா செல்லத்துரை என்பவர்கள் முல்லை மாவட்டம் சார்ந்த படைப்பாளிகளே.

**வன்னியின் மண் வாசனை**

வன்னிப் பகுதியின் மண்வாசனையை முதன்முதலாக வெளிப்படுத்திய அ.பாலமனோகரனின் 'நிலக்கிளி' நாவலாரும் அத்துடன் கனவுகள் கலைந்த போது தாய் வழித் தாகங்கள் ஆகிய நாவல்கள் சாதாரண குடும்ப உறவுகளை வெளிப்படுத்தப்படுபவையாக அமைந்தன.

இதைவிட வே.முல்லைமணியின் 'மல்லிகை வனம்', முள்ளியவளை அரசடிப்பிள்ளையார் ஆலயச் சூழலை மையமாகக் கொண்டு அங்கே நடைபெறுகின்ற கோவலன் கூத்தில் கோவலனாக ஆடிய நன்னியனுக்கும் சிலம்பிக்குமிடையே ஏற்பட்ட காதலையும் அதற்கு ஏற்பட்ட தடைகளையும் விவரிப்பதாக இருந்தது. அவரது படைப்பான மழைக்கோலம் கமுகஞ்சோலை வன்னியர் திலகம் என்பனசமகால சம்பவங்களையும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த உடையார் குடும்பங்களையும் தண்ணீர் ஊற்றுக் கிராமத்தில் கமுகு மரங்களைத் தறிக்க முற்பட்ட ஆங்கில அதிகாரிகளை எதிர்த்துப் போரிட்ட ஊரவர்களின் கதையையும் எதிர்த்துக் காட்டுகின்றன. முல்லையூரானின் குங்குமம் நாவலில் 1985 காலப்பகுதிகளில் கேப்பாப்பிலவு வற்றாப்பளை ஆகிய கிராமங்களைக் களமாகக் கொண்ட விவசாயக் குடும்பங்கள் போர்ச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டதைப் போர்க்காலப் பின்னணியில் விவரிப்பதாக அமைந்திருந்தது.

சிறுகதைகளாக முல்லைமணியின் அரசிகள் அழுவதில்லை கொண்டு வந்த சீதனம் பாலமனோகரனின் தீபு தோரணம் இவைகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் வாழ்வுப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்பட்டன அத்தோடு முள்ளியவளை யைச் சேர்ந்த அருணா செல்லத்துரை வள்ளி தோறும் தேடல்களை ஆரம்பித்து பண்டைய மக்களின் வாழ்வாதாரங்களையும் அவர்களது கலை, கலாசாரங்களையும் ஆலய வழிபாடுகளையும் எடுத்துக் காட்டுவன அவை யாக கதைகளில் குறிப்பிட்டுள்ளார்.



அதுமட்டுமல்ல மாவீரன் பண்டார வன்னியனின் வரலாறு அவனது ஆட்சி அரசாட்சி ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டமை அவனது காதலியான குருவிச்சை நாச்சியாரின் வாழ்க்கை வரலாறு பண்டார வன்னியன் குருவிச்சை நாச்சி காதல் என்பனவற்றுடன் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டதின் பின் அவனது காதலி நஞ்சருந்தி மரணம் என்பனவற்றை மிகவும் தெளி வாகவும் சிறப்பாகவும் அவரது கதைகளில் குறிப்பிடப் பிட்டிருந்தன. அதனைவிட அதனை நாடகமாகவும் சித்த ரித்து பல மேடைகளில் நடிக்கவும் வைத்து இன்று பண்டார வன்னியன் நாட கம் மிகவும்பிரபலமடைந் துள்ளது.



**படைப்பாளிகள் இல்லாத நிலை**

ஆனால் இன்று அவர்களைப் போன்ற படைப்பாளிகள் முல்லை மாவட்டத்தில் இல்லாமல் இல்லை ஏனோ புனைகதைகளிலும் நவீன இலக்கியப்படைப்புகளிலும் ஈடுபடுவதில்லை மேற்காட்டப்பட்டவர்கள் எமது மாவட்டத்தின் பெருமைகளையும் மக்களின் வாழ்வையும் அன்றைய ஆட்சி முறைகளையும் கதைகள் மூலமும் பாடல்கள் நாடகங்கள் மூலமும் புனைந்தனர். அவர்களின் மறைவுக்குப் பின் எமது வரலாறுகள் யாவும் மறைக்கப்படும் நிலை ஏற்படும் போல தோன்றுகிறது. எத்தனையோ படைக்கக் கூடிய படைப்பாளிகள் இன்று உள்ளனர். அவர்களாக முன்வந்து நவீன இலக்கியங்களைப் படைக்க முன்வர வேண்டும் அத்துடன் எமது வராலாறுகள் மறையாது எமது இளந்தலைமுறையினருக்கு அறியக் கூடியதாக நவீன இலக்கியங்களில் படைத்து பாடசாலைகளில் கற்பிக்கவும் முன்வரவேண்டும்.




அங்கே ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ளது. அதிலே கல்வி கற்றவர்கள் எமது மூதாதை யர்கள் அவர்களின் வழிவந்தவர்களும் இன்றும் இருக்கின்றனர். 1934ஆம் ஆண்டு அந்தப் பாடசாலை கற்சிலைமடுவின் மத்தியாக ஆரம்பிக்கப்பட்டு 5ஆம் வகுப்புவரை கற்பிக்கப்பட்டது. இவற்றை எல்லாம் விடுத்து சிங்கள இனத்தவர்கள் தமது ஆட்சிக் குட்பட்டதாகக் கூறுகின்றமை நகைப்பிற்குரியதாகும். எமது வன்னிமண்ணில் ஒருபிடி மண் கூட அவர்களுக்கு சொந்தம் கிடையாது எமது மண்ணினை ஆக்கிரமிக்கும் முகமாகப் புலி களை அழிக்க வந்தவர்கள் எமது சொந்த மண்ணை ஆக்கிரமித்தது. கறையான் புற்றில் பாம்பு குடி கொண்டது போல விளை நிலங்கள் மற்றும் வாழ்விடங்களை ஆக்கிரமித்து எல்லை போட்டு நிற்கின்றனர். எமது மக்களை அழித்தது மட்டுமல்லாது அவர்களது வாழ்வியல்புகளையும் கலை, கலாசாரங்களையும் அழித்து புத்தர் சிலைளை அமைத்து வரலாறாக்க முனைப்பாக உள்ளனர்.



**வரலாற்று உண்மைகள்**

எனவே எமது முல்லை மண்ணின் புதைந்து போன அல்லது மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை கலை, கலாசாரங்களை வெளிக் கொண்டு படைக்கப் படைப்பாளிகள் முன்வரவேண்டும். தொடர்ந்து படைப்புக்களைப் படைப்பதனானேலே எமது வரலாறுகள் மறையாது காக்கப்படும். படித்த அறிவாளிகள் அனைவரும் நவீன இலக்கியங்களைப் படைப்பதற்கு இன்றே திட சங்கற்பம் பூண வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

# கிளிநொச்சியும் மலையகத் தமிழரும்



(சென்றவாரத் தொடர்ச்சி)

மலையகத்திலும், அனுராதபுரத்திலும் 1958 இல் நிகழ்ந்த இனக் கலவரம் காரணமாகபல்லாயிரக்கணக்கானோர் தரைமார்க்கமாகவும்கப்பல்மூலமாகவும் வட பகுதிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

அப்படி வந்தவர்களில் ஒரு பகுதியினருக்காக தர்மபுரம் என்ற குடியேற்றத் திட்டம்உருவாக்கப்பட்டுஅங்குகுடியேற்றப்பட்டனர். சுற்றிவரக் கல்மடு, முரசுமோட்டை, கண்டாவளை, புளியம் பொக்கணைஎனவயல்நிலங்கள்இருந்த காரணத்தால் அவர்களுக்கு வேலையற்ற பிரச்சினையும் இருக்கவில்லை.

1966இல்விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம்உருவானபின்புவேலை வாய்ப்புக்கள் மேலும் பெருகின. பின்னாள்களில்அவர்களுக்கு வயல்நிலங்களும் வழங்கப்பட்டன. இன்று தர்மபுரம் செல்வாக்குமிக்க ஒரு குட்டிநகரமாகவே மாறிவிட்டது. விஸ்வமடு வுக்கும், தர்மபுரத்துக்கும் பல திருமண பந்தங்களும் உருவாகிவிட்டன.

அவர்களில் இன்னொரு பகுதியினர் குடியேற்றத்திட்டங்களில் ஏற்கனவே வழங்கப்பட்டு உரிமையாளர்களால் கைவிடப்பட்ட காணிகளில் குடியேற்றப்பட்டனர். அவர்கள்ஏற்கனவேகுடியிருந்தமக்களுடன் இரண்டறக்கலந்தனர். இன்னும் சிலர் அக்கராயன் கரும்புத்தோட்டப் பகுதியில் குடியேறினர். மேலும் பலர் திருநகர், இரத்தினபுரம், பரந்தன் போன்ற பகுதிகளில்காடுகளைவெட்டிக்குடியேறினர். யதார்த்தநிலை இப்படியிருக்க1958 இல் விரட்டப்பட்ட மக்கள்திரும்பிப்போய்விட்டனர் என்பது உண்மைக்குப் புறம்பானது.

1977, 1983 காலப் பகுதிகளில் ஏராளமான மலையக மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சியின் பல பகுதிகளுக்கும் வந்தனர். பலதொண்டுநிறுவனங்கள்அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுக்குத்தேவையான உதவிகளை வழங்கின. அவர்கள் அங்கு காணிகள் வழங்கப்பட்டுக் குடியேற்றப்பட்ட போதும் தொழில்வாய்ப்பின்மையால் அந்தப்பகுதி களில் அவர்கள் தொடர்ந்து வாழ முடியவில்லை.1977க்குமுன்புஅருவிவெட்டு, சூட்டடி காலங்களில் மட்டக்களப்பிலிருந்து ஏராளமான தொழி லாளர்கள் வந்துவேலைசெய்வதுண்டு. போர்ச்சூழல் காரணமாக அவர்களின் வருகை நின்ற பின்பு, பெருமளவு கூலியாள்களின் தேவை எழுந்தது. எனவே வெவ்வேறு பகுதிகளில் குடியேற்றப்பட்ட மலையக மக்கள் கிளிநொச்சி நோக்கி வந்தனர்.

1977, 1983 காலப்பகுதிகளில் ஏராளமான மலையக மக்கள் இடம்பெயர்ந்துகிளிநொச்சியின்பலபகுதிகளுக்கும்வந்தனர். பல தொண்டு நிறுவனங்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுக்குத்தேவையான உதவிகளைவழங்கினஅவர்கள் அங்குகாணிகள்வழங்கப்பட்டுக்குடியேற்றப்பட்டபோதும்தொழில் வாய்ப்பின்மையால் அந்தப்பகுதிகளில் அவர்கள் தொடர்ந்து வாழ முடியவில்லை 1977 க்கு முன்பு அருவிவெட்டு, சூட்டடி காலங்களில் மட்டக்களப்பிலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் வந்து வேலை செய்வதுண்டு, போர்ச்சூழல் காரணமாக அவர்களின்வருகைநின்றபின்பு,பெருமளவுகூலியாள்களின் தேவை எழுந்தது. எனவே வெவ்வேறு பகுதிகளில் குடியேற்றப் பட்ட மலையக மக்கள் கிளிநொச்சி நோக்கி வந்தனர்.

**பெருமளவு வேலையாள்கள்**

மிளகாய், வெங்காய, வாழைத்தோட்டங்களுக்கு பெருமளவு வேலையாள் கள் தேவைப்பட்டனர். எனவே காணி உரிமையாளர்கள் தங்கள் தேவைக்கேற்ப மலையக மக்களைத் தங்கள் காணிகளிலேயே கொட்டில்களைப் போட்டுக் குடியேற்றினர். காலப்போக்கில் அந்த மலையக மக்கள் காடுகளை வெட்டி தங்களுக்கெனச் சொந்தக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். அந்த வகையில் பாரதிபுரம், கிருஷ்ணபுரம், உதயநகர், செல்வா நகர், சாந்தபுரம்போன்ற குடியிருப்புகள் கிளிநொச்சியிலும்பரந்தன். அக்கராயன் முறிப்புப்பகுதிகளில்பலகுடியிருப்புகளும் உருவாகின.

"இடையறாதவேலைவாய்ப்பும், தங்கியிருக்க ஒரு கொட்டில்போடும் இடமும் கிடைத்ததால்அந்தமக்கள் இந்த இடங்களிலேயேதங்கிவிட்டனர்."எனமலையக மக்களை வெறும் உதிரிகளாகச் சித்தரிப்பது ஏற்புடையதல்ல. மெத்தப் படித்த மேதாவியிலிருந்து கூலியாள் வரை வேலையிருக்கும் இடத்தை நாடுவதுதவிர்க்கமுடியாததேவை. கொட்டில் போடஇடம்கிடைத்ததும்அதுவேசொர்க்கமென அவர்கள் அங்கேயேபடுத்துவிடவில்லை. தமக்கென காணிகளை வெட்டினர். குடியிருப்புகளை அமைத்தனர். அதைக் காண மறுத்து அந்த மக்களை நையாடி செய்யும் உரிமையை யாரும் தமது கைகளில் எடுத்துக் கொள்ள முடியாது.

தென்னிந்திய திருச்சபையால் உருவாக்கப்பட்ட செல்வபுரமும், கியூடெக் நிறுவனத்தால்உருவாக்கப்பட்டபொன்நகரும் சிறப்பான கிராமங்களாகவிளங்கிவரும் போது மதநிறுவனங்களைக் காரணமின்றிப் புண்படுத்துவதும் ஏற்புடையதல்ல. கிளிநொச்சியில் எந்த மதநிறுவனமும் மக்களை வலிந்து மதம் மாற்றியதாகநாம்அறியவில்லை. அவரவர்தமது மதங்கள் தொடர்பான பரப்புரைகளை மேற் கொள்வது அவர்களின் மத சுதந்திரம்.

இவை மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையில் ஏதோ ஒருவகையான உள்நோகக்கத்துடன் சொல்லப்படக் கூடாது. மலையகப் பெண்கள் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்குத் தந்தைபெயர் தெரியாத குழந்தைகள் உண்டு எனவும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் அதிகமெனவும் கூறும் கருத்துக்கள் இந்த வகையிலானவையே!

பாலியல் ரீதியாகப் பாதிக்கப்படும் பெண்கள் எல்லா சமூகத்திலும் உண்டு. அது ஒன்றிரண்டு பேராக இருக்க முடியுமேயொழிய பெரும்பாலானாரோ, ஒட்டு மொத்த சமூகமோ இல்லை. அப்படி ஏமாற்றப்படும் பெண்களுக்கு நிச்சயமாகத் தமக்குப் பிறக்கும் பிள்ளைகளின் தகப்பன் பெயர் தெரிந்திருக்கும். விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்குமட்டுமேதகப்பன்பெயர்தெரியாத பிள்ளைகள் பிறக்கும் வாய்ப்புண்டு. பாலியல்ரீதியாகப்பாதிக்கப்பட்டபெண்களுக்குதகப்பன்பெயர்தெரியாதபிள்ளைகள்உண்டுஎனக்கூறமுடியாது. அப்படிச் சொல்வதுஅவர்கள்பாலியல்தொழிலில் ஈடுபட்டனர் என்றுகூறுவதைப் போன்றது. இத்தகைய கருத்துக்கள் தவிர்க்கப்படவேண்டும்.

அடுத்த கருத்து இந்தக் குடும்பங்களிலிருந்து போராடப் போனவர்கள் அதிகம். காரணம் தேசப்பற்றல்ல அவர்களுக்கு ஒரு சமூக மதிப்பு தேவைப்பட்டது தான் என்பதாகும்.

**50 வயதில் போராளி**

நானறிய எந்த ஒரு மலையகப் போராளியும் தனது பிள்ளை புலிகளால்மாற்று இயக்கமென்பதால் கைது செய்யப்பட்டவேளை அவனை விடுவிக்க முன்னும் பின்னும் அலைந்து பின் 50 வயதில் போராளியாக இணைந்து, ஆங்கிலம்கற்று, சட்டத்தரணியாகி, கதை எழுதி, வானொலி நிகழ்ச்சிகள் தயாரித்துதனது சொந்த மதிப்பை உயர்த்திக் கொண்டதில்லை. எவரும் தாங்கள் பெரும் அறிவாளிகள் எனத் தம்பட்டமடித்து, நுனிப்புல் மேய்ந்து விட்டுச் சத்தியெடுத்துத் தனதுஅறியாமையைஅம்பலப்படுத்தியதில்லை.

மலையகப் போராளிகள் அர்ப்பண உணர்வுடன்குருதிசிந்திப்போராடியவர்கள்.இந்தமண்ணுக்காகவீரச்சாவடைந்தவர்கள். அவர்கள்தங்களை வளர்த்துக் கொள்ள எதுவும்செய்யவில்லை.

தலைவரின் மிகவும் அன்புக்குரிய, நெடுங்கேணி இந்திய இராணுவ முகாமைத் தாக்கியடித்து விட்டுத்திரும்பிய போது எறிகணை வீச்சில் படுகாயமடைந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கேணல் நவம். (அவர் பெயராலேயே நவம் அறிவுக்கூடம் அமைக்கப்பட்டது.) கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலில் படுகாமயடைந்து பின் வீரச்சாவைத்தழுவியலெப். கேணல்சந்திரன் தன் இளமையின் பொன்னான 18 வருடங்களை மண்ணின் விடுதலைக்கு அர்ப்பணித்த முன்னாள் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட்ட பல போராளிகள் தேசப்பற்றற்றவர்களா? சமூக மதிப்பு தேடியா உயிர் அர்ப்பணிப்பு உட்படச் சகல தியாகங்களையும் செய்தனர்?

மலையகமக்கள்பற்றியஅலட்சியமனப் போக்கோடு கருத்துச் சொல்லக் கூடாது. இதை மக்களால் மட்டுமல்ல வேறு எவராலும் மன்னிக்க முடியாது.

ஒருசமூகத்தின்ஒழுக்கவிழுமியங்களையும் தேசப்பற்றையும் உண்மைக்குப் புறம்பானவகையில்எழுந்தமானமாகக் கீழ்மைப்படுத்திக் கட்டுரை எழுதி, அதை ஏராளமான மக்கள் படித்தபின்பு அதைத்திரும்பப்பெறுவது என்பது நகைப்புக்கிடமான அர்த்தமற்ற வெளிப்பாடாகும். கட்டுரையைத் திரும்பப்பெறுவதாகக் கூறப்படும் வெற்று வார்த்தைகள் புண்பட்ட அந்த மக்களின் மனதுக்கு மருந்திடவோ, தோன்றிய கோபத்தை ஆற்றுப்படுத்தவோபோதுமானவையாக இருக்கமுடியுமா?

இப்படியான கருத்துக்கள் ஏன் வெளியிடப்பட்டன. இதை கட்டுரையாளர்எழுதயாராவது தீய சக்திகள் பின்னணியில் இருந்தார்களா? இப்படியான ஒரு நச்சுத்தனமான கட்டுரையைப் பிரசுரிக்க மலர்க்குழு எப்படி அனுமதியளித்தது. இப்படியான தலைப்பில் ஒரு கட்டுரையை எழுத கிளிநொச்சி மாவட்டத்தைச் சாராத கட்டுரையாளர் ஏன் தெரிவு செய்யப்பட்டார்போன்றகேள்விகளுக்கு விளக்கம் வழங்கப்பட வேண்டும். அது மட்டுமன்றி இந்தக்கட்டுரையை வெளியிடக்காரணமாயிருந்தஅனைவரும் தமது தவறை உணர வேண்டும்.

**அனைவருக்கும் அவமானம்**

எப்படியிருந்த போதிலும் மலையக மக்கள் கிளிநொச்சியின் நிரந்தர குடிமக்கள் என்பதையும் அவர்களுக்கு ஏற்படும் அவமானம் முழுக்க கிளிநொச்சி மக்களுக்கும் ஏற்படுத்தப்படும் அவமானம் என்பதைநாம்திட்டவட்டமாகத்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.



# முதலில் சினிமாவின் அடிப்படைகளை புரிந்துகொள்ளவேண்டும்

## என்கிறார் குறும்பட இயக்குனர் ஜெ.வினோத்

சி.ப.வேந்தன்



சக்கரம் கட்டிவிட்ட கால்களைப்போல ஓரிடத்தில் நிற்காது ஓடிஓடித் தனது குளிர்களி நிலையத்து வாடிக்கையாளர்களை கவனித்துக் கொண்டிருக்கிறார் வினோத் என்கிற ஜெ. அமர்நாத். பரபரப்பாக வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவரிடம் என்னை அறிமுகப்படுத்தியதும் புன்முறுவலோடு பேசலாமே என்றவர் தனக்குக் கிடைத்த சின்னச்சின்ன இடைவெளிகளில் பேச ஆரம்பித்தார்.

யாசகம்,வினவு,விசன் என்ற மூன்று குறுந்திரைப்படங்கள் மூலம் எல்லோரையும் தன்னைத் திரும்பிப்பார்க்க வைத்திருக்கும் இவர் சினிமாவை பிழைப்புக்காக இல்லாமல் தன்னுடைய சந்தோசத்துக்காகவும், சாதிக்க வேண்டுமென்பதற்காகவுமே செய்துவருகிறார். தனது அறிமுகப்படத்திலேயே விருதைப் பெற்றிருக்கும் இவர் விருதுகளுக்கான கலைப்படங்களையே இயக்க விரும்புவதாகவும் கூறுகிறார். சினிமா சார்ந்த இதுவரைக்குமான அவரது அனுபவங்களை உதயனுடன் பகிர்ந்துகொண்டார்.

### பின்னணி எதுவும் இல்லை

கலைத்துறையில எனக்கு எந்தப் பின்னணியும் இல்லை. வீரகேசரியில முந்தி கட்டுரைகள் எழுதி வந்தனான். வெளிநாட்டு சஞ்சிகைகளுக்கும் எழுதி வந்தனான். இப்ப எழுதுறதில்லை. இலக்கியத்திலயும் விருப்பம் கூட இருக்கு. இப்ப யாழ் இலக்கியக் குவியத்தின் செயலாளரா தொடர்ந்து 6வருடமா இயங்கிக் கொண்டு இருக்கிறன்.

சிறுகதை, நாவலில அதிக விருப்பம், கூடுதலா வாசிக்கிறது. ஆரும் சொல்லுற கதைகளை விரும்பி கேட்பன். இப்பிடி என்னட்டை இருந்த ஆசைதான் என்னை சினிமாவிலயும் வரவைச்சது.

திரைப்படங்களை பாக்கேக்க நானும் படம் எடுக்கவேணும் எண்டு நினைப்பன். அதால பொழுபோக்காகப் பார்க்கிறதை விட்டிட்டு அதில உள்ள நுட்பங்களைப் பார்ப்பன் அப்பிடிப் பார்த்துப்பார்த்து வர அதில உள்ள விசயங்கள் கொஞ்சம கொஞ்சமா விளங்கத் தொடங்கீற்றுது.

இங்க சினிமாவுக்கான சரியான களமும் இல்லை. எனக்கு சினிமா தொடர்பானவர்களின் அறிமுகங்களும் இல்லை. நானாகவே தெரிஞ்சு கொண்டன். ஏகலைவன் மாதிரி பார்த்துப்பார்த்துத்தான் பழகினனான். பிறகு நாளடைவில திரைக்கதைகளை எழுதிப்பாக்க ஆரம்பிச்சன். நிறைய பிழைகளுக்குப் பிறகு 2014ஆம் ஆண்டு கொஞ்சம் சரியா எழுதி முடிச்ச கதைதான் யாசகம். அது காணாமல் போனவர்களைப் பற்றிய கதை.

### முதல்பட உருவாக்கம்

சரி அதைப்படமாக்குவம் என்றால் அப்ப மகிந்த ஆட்சிக்காலம். யாசகம் கதையை படமாக்கக்கூடிய சூழல் இருக்கேல்லை . அதில நடிக்கிறதுக்கும் யாரும் சம்மதிக்கேல்லை.

அந்த நேரம் இயக்குனர் மதிசுதா மட்டும்தான் நான் நடிக்கப்போறன் என்று முன்வந்து செய்தவர். அம்மா பாத்திரத்துக்கு நிறையப்பேரிட்ட கேட்டனான். கனபேர் பயத்தில மாட்டனெண்டு சொல்லீட்டினம். சரி அதுக்கான காலம் வரட்டும் என்று வச்சிருந்தன். அதுக்குப் பிறகு ஆட்சி மாறினவுடன ஓரளவு இதைச் செய்யக்கூடிய சூழல் வந்திச்சுது. அப்ப இதை செய்வம் என்று சொல்லி ஆரம்பிச்சன். கொழும்பில இருக்கிற மூத்த கலைஞர் மகேஸ்வரி ரட்ணம் இந்தப் படத்தில நடிக்க சம்மதிச்சு வந்து நடிச்சுத் தந்தவா. 2015ஆம் ஆண்டு மார்கழியில கொழும்பில நடந்த அஜன்டா14 போட்டிக்கு இதை அனுப்பியிருந்தனான். அதில திரையிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டு மனித உரிமைகளுக்கான விருதை பெற்றது. அது எங்களுக்குக் கிடைச்ச வெற்றி எண்டு சொல்லலாம். எங்கட பிரச்சனையை சிங்கள மக்கள் மத்தியில கொண்டுபோய் சேர்த்ததாகவும் அது அமைஞ்சது. தமிழ்,முஸ்லிம், சிங்களம் என்ற மூன்று மொழித் திரைப் படங்களும் அங்க திரையிடப்பட்டன. எப்படியாவது இந்தப்படம் எல்லோராலும் பேசப்படவேணும், விருது கிடைக்கவேணும் என்றுதான் அதை ஆரம்பத்தில் இருந்து நான் செய்ய ஆரம்பிச்சனான். அதில எனக்கு முழு நம்பிக்கையும் இருந்தது. என்னால இந்தப் பிரச்சினையை குறிப்பிட்ட சிலர் மத்தியில கொண்டுபோய் சேர்த்தது சந்தோசமான விசயம். விருது எண்டுறதைத் தாண்டி அதில எனக்கு ஒரு திருப்தியும், சந்தோசமும் கிடைச்சது. காதலும் அடிதடியின் கலப்பு ஒருங்கிணைஞ்ச படங்கள் கூடுதலாக வந்து கொண்டிருக்கேக்க ஒரு வயதான பாத்திரத்தை வைச்சு படம் எடுத்து எப்பிடி அதை வெற்றியடைய வைக்கிறது என்ற பெரிய சவாலோடதான் இதைச் செய்திருந்தன். நல்ல கதை இருந்தால் இப்பிடியும் படம் எடுக்கலாம் என்று கண்டு கொண்டன் அது உண்மையில் வெற்றியுமடைஞ்சது முதல் முயற்சியே வித்தியாச மாகவும், வெற்றியாகவும் அமையுறது என்றது சவால்தானே? என கேள்வி எழுப்பியவர் இடையிடையே வந்த வாடிக்கையாளர்களையும் கவனித்துக்கொண்டுமிருந்தார். தன்னை மீண்டும் சுதா கரித்துக் கொண்டு பேச ஆரம்பிக்கிறார்.

பிறகு இதை மட்டக்களப்பில நடந்த வேல்ஸ் திரைப்பட விழாவுக்கும் அனுப்பினனான். அங்கேயும் இது தெரிவு செய்யப்பட்டது. அதில நடிச்சிருந்த மகேஸ்வரி அம்மாவுக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது கிடைச்சது.

அதைவிட 2016ஆம் ஆண்டு இங்க நடந்த பன்னாட்டுத் திரைப்பட விழாவிலயும் யாசகம் தெரிவுசெய்யப்பட்டு திரையிடப்பட்டது.

> “
> இங்க சினிமாவுக்கான சரியான களமும் இல்லை. எனக்கு சினிமா தொடர்பான ஆக்களின்ர அறி முகங்களும் இல்லை. நானாகவே தெரிஞ்சு கொண்டன். ஏகலைவன் மாதிரி பார்த்துப் பார்த்துத்தான் பழகினனன்.(சிரிக் கிறார்) பிறகு நாளடைவில திரைக் கதை எழுதிப் பாக்க ஆரம்பிச்சன் நிறைய பிழைகளுக்குப் பிறகு 2014ம் ஆண்டு கொஞ்சம் சரியா எழுதி முடிச்ச கதை தான் யாசகம். அது காணாமல் போனவர்களைப் பற்றிய கதை.

### வினவு திரைப்பட வெற்றி

வினவு திரைப்படம் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில நிகழ்த்தப்பட்ட போட்டிக்காக செய்தபடம். சிறுவர் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு எதிரான கருத்தைச் சொல்லக்கூடியதாக படம் இருக்க வேணுமெண்டு கேட்டிருந்தது. வினவு கதை ஏற்கனவே நான் எழுதி வைச்சிருந்த கதை. நண்பர் ஒருத்தர் அதை வாங்கி போட்டிக்கு அனுப்பியிருந்தார் அதில இது தெரிவுசெய்யப்பட்டு படமாக்க அனுமதியும் கிடைச்சது அதுக்குப்பிறகு கதை படமாகத் தயாராகிச் சிறந்த சமூகத் திரைப்படமாக தெரிவாகி விருது கிடைச்சது.

அதுக்கு அடுத்ததாக செய்த விசன் கொழும்பில உள்ள வுமன் அன் மீடியா கலக்டிவ் என்ற அமைப்பு பெண்களை சமூகத்தில நேர்படக் காட்டக்கூடிய 2நிமிடப் படம் ஒன்றைச் செய்யச்சொல்லி அறிவிப்பு வெளியிட்டிருந்தது. அந்த விடயங்களை உள்வாங்கிச் செய்த படமாய்தான் அமைஞ்சிருக்கு இப்பிடி நான் செய்த மூன்று படங்களுமே நல்ல படங்களெண்டு பேரெடுத்தது சந்தோசமா இருக்கு.

திரும்பவும் நான் செய்யப்போற கதை இவற்றைப்போலவே சமூகவெளிகளைப் பேசும். இங்க இருக்கிற பெண்கள் எதிர் கொள்கிற பிரச்சினைகளில் ஒன்றை இதில பேசப்போறன். அதுக்கு இவள்" என்று பெயர் வைச்சிருக்கிறன்.

இங்க நல்ல கலைஞர்கள் இருக்கினம் ஆனால் வாய்ப்புக்கள்தான் இல்லை. யாராவது செலவுசெய்ய, தயாரிக்க முன்வருவார்க ளாக இருந்தால் நல்ல படைப்புக்கள் உருவாகும். யாசகம் நான் சொந்தமாகத் தயாரிச்ச படம். வினவு படத்தை நானும் என்னுடைய நண்பர் தேவராஜ் என்றவரும் சேர்ந்து தயாரிச்சனாங்கள். விசன் படமும் அவர்தான் செய்தது. விசன் படத்துக்கான இசையும், எடிட்டிங்கும் நண்பர்கள் காசு வாங்காமல் எனக்கான உதவியாகச் செய்து தந்தவை.

அடுத்த படத்துக்கும் தயாரிப்பாளரை தேடினனான். கிடைக்கேல்லை. வெளிநாட்டில இருந்து வருகிற சில தயாரிப்பாளர்கள் வணிக ரீதியான சினிமாவுக்கு எவ்வளவும் செலவு செய்ய தயாரா இருக்கினம். ஆனால் கலைப் படங்களை தயாரிக்க முன்வருகின மில்லை அவர்கள் எதிர்பாக்கிறது இந்திய சினிமா மாதிரி ஹீரோ, ஹிரோயின், காதல், அடிதடி, பாட்டு, நகைச்சுவை இப்பிடி இருந்தா ஓம் என்று சொல்லுகினம். யாசகம் மாதிரியான படங்களை தயாரிக்க விரும்புகினமில்லை. அது அவர்களுடைய வணிக நோக்கம். அதை நாங்கள் பிழைசொல்ல முடியாது ஆனால் சமூக அக்கறை இருந்தால் இப்படியான முயற்சிகளுக்கும் கைகொடுக்கலாம்.

### எமது சினிமாவும் தவறுகளும்

எங்கட சமூகம் தென்னிந்திய சினிமாவுக்கு கொடுக்கிற வரவேற்பைக்கூட எங்களுடைய சினிமாவுக்கு கொடுப்பதில்லை. நாங்கள் அவர்கள் அளவுக்கு வரவில்லை என்றாலும் எங்கட சினிமாவையும் ஆதரிச்சு வரவேற்புத் தந்தால் நாளடைவில எங்கட சினிமாவும் முன்னேற சாத்தியமிருக்கு.

அவர்கள் இந்திய சினிமாவுக்கு பழக்கப்பட்டிட்டினம். அவர்களை மாற்றி எங்கட சினிமாவுக்குள்ள கொண்டு வர நீண்ட காலம் தேவை. நிறைய வேலைகளும் செய்ய வேண்டிய தேவையிருக்கு.

(22 ஆம் பக்கம் பார்க்க)



கைதடியூர் நி.ஹரன்

# கலாபூசணம் அ.பிரான்சிஸ் ஜெனத்தின் நடிப்பு ஆளுமைகள்

ஈழத்து அரங்க வரலாறு நீண்டதொரு அரங்கப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. கூத்துப் பாரம்பரியம், இசை, நாடகப் பாரம்பரியம், நவீன நாடகப் பாரம்பரியம் என அரங்க வரலாறு வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இவ்வாறான எமது அரங்க பாரம்பரியத்தில் தடம் பதித்துக் கொண்ட முக்கியஸ்தர்களில் ஒருவராக பிரான்சிஸ் ஜெனம் விளங்குகின்றார். நடிப்பு, நெறியாள்கை, எழுத்துருவாக்கம், வேட உடை, ஒப்பனை , அரங்கப் பயிற்சிப் பட்டறை என்பவற்றில் திறமை மிக்கவராக செயற்பட்டாலும் இவற்றுள் நடிப்பே இவரை சிகரத்தைத் தொட வைத்தது என்றால் அது மிகையாகாது.

**நடிகனின் கதை**

நடிப்பு என்பதை நடிகனின் கலை என்பர். நடிப்புத் துறையிலே ஒருவர் தன்னைத் திறம்பட வெளிக்காட்ட வேண்டுமானால் அயராத உழைப்பு அவசியமானதாகும். குறிப்பாக தீவிர குரல் பயிற்சியும், உடற்பயிற்சியும், உளப்பயிற்சியும் இயல்பான தனித்திறமையும் சிறந்த கற்பனைத் திறனும், அர்ப்பணிப்பும் இன்றியமையாதவையாகும். இவ்வாறான விடயங்களைக் கருத்தில் எழுத்துக் கொண்டு நடிப்புத் துறையிலே தனது ஆளுமைகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திக் கொண்டவராக ஜெனம் விளங்குகின்றார். இவரது அரங்க ஆளுமைகளை அறிந்து கொண்ட இலங்கை அரசு 2010ஆம் ஆண்டில் கலாபூசணம் எனும் உயர் விருது வழங்கி இவரைக் கௌரவித்தது.

யாழ்ப்பாணத்தில் சில்லாலை என்னும் கிராமத்தில் 1941ஆம் ஆண்டில் பிறந்த ஜெனம் சிறுவயது முதலே நாடகங்களில் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். சில்லாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்ற காலத்தில் யூடித் எனும் பெண்பாத்திரம் ஏற்று நடித்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். இதுவே இவரது அரங்க செயற்பாட்டின் முதல் கால் தடம் ஆகும். இதனைத் தொடர்ந்து பெண் பாத்திர நடிகராகத் தன்னை ஆரம்பகாலங்களில் இனங்காட்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருந்த பெரும்பாலான நாடகக் குழுக்களோடு இணைந்து நடித்த பெருமை ஜெனத்தையே சாரும். அந்த வகையில் கலையரசு சொர்ணலிங்கத்தின் ஒறியன்ற் ஸ்போட்ஸ் அன் பைன் ஆட்ஸ் சொசாய்ரி குழுவோடு இணைந்து வழி தெரிந்தது தேரோட்டி மகன் போன்ற நாடகங்களிலும் மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்துடனும் இணைந்து ஆரமுது அசடா, மல்லியம் மங்களம் போன்ற நாடகங்களிலும் நடித்தார்.

மேலும் வண்ணக் கலைவாணர் மன்றத்தால் எஸ்.ரி. அரசின் நெறியாள்கையில் பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட திப்பு சுல்தான் நாடகத்தில் பேகம் சாஹிபா எனும் பிரதான பெண் பாத்திரம் ஏற்று நடித்து அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றார். ஜெனம் நாடகங்களில் மட்டுமல்ல கூத்துக்களிலும் தன்னை சிறந்த ஒரு நடிகனாக காட்டிக் கொண்டார். அந்த வகையில் யாழ் நவரச நாட்டுக் கூத்துக் கலாமன்றத்தில் இணைந்து பூந்தான் ஜோசேப்புவின் அண்ணாவியத்தில் கருங்குயிலில் குன்றத்துக்கொலை, எஸ்தாகியார் புரட்சித்துறவி சங்கிலியன் போன்ற நாட்டுக் கூத்துக்களில் நடித்தார்.

கொழும்பில் நிர்வகிக்கப்பட்டு வந்த நிழல் நாடக மன்றத்தில் சேர்ந்து சுஹயர் ஹமிட்டின் நெறியாள்கையில் வேதாளம் சொன்ன கதை பச்சைக் கிளியே பழம் கொண்டு வா, வாடகைக்கு அறை , கொலைகாரன் போன்ற பல நாடகங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் திரு மறைக்கலாமன்றத்தில் கலாநிதி மரியசேவியர் அடிகளாரின் நெறியாள்கையில் காட்டிக் கொடுத்தவன் , சாவைவென்ற சத்தியன், களங்கம் எனப் பல நாடகங்களில் நடித்துத் திருமறைக் கலாமன்றத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்தார்.

**காத்திரமான நடிப்பின் பாத்திர அமைவு**

நாடக அரங்கக் கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்து அந்தக் கல்லூரியால் தயாரிக்கப்பட்ட பல நாடகங்களில் சிறப்பாக நடித்துப் புகழ்பெற்றார். குறிப்பாக தாசீசியஸின் நெறியாள்கையில் பொறுத்தது போதும் நாடகத்தில் சம்மாட்டியார் என்னும் பிரதான பாத்திரத்தில் நடித்துச் சிறந்த நடிகருக்கான அரச தலைவர் விருதினைப் பெற்றுக் கொண்டார். இதனைவிட நாடக அரகக் கல்லூரியால் தயாரிக்கப்பட்ட உயிர்த்த மனிதர் கூத்து அபசுரம், சங்காரம், எந்தையும் தாயும், கூடி விளையாடு பாப்பா போன்ற பல நாடகங்களில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்திப் பாராட்டுக்களைப் பெற்றார். இவ்வாறாக ஜெனம் இதுவரையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெனம் அவர்கள் நடிப்புத்துறையிலே தன்னைச் சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு பல்வேறு திறன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் நாடக எழுத்துருவை பல தடவைகள் வாசித்துதான் ஏற்கும் பாத்திரத்தில் மிகவும் கருத்தூன்றி நின்று அந்தப் பாத்திரத்தை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்துவார். எழுத்து ருவை வாசிக்கின்ற போதே தான் ஏற்கும் பாத்திரத்தின் குரல்கள் தனக்குள் ஒலிக்கும் என்று இவர் கூறுவார். நெறியாளர் கூறுவதோடு மட்டும் நின்றுவிடாது தானும் பொருத்தமான கற்பனைகளை மேற்கொண்டு நடிப்பினை நுணுக்கமாக அற்புதமாகச் செய்வார்.

அத்துடன் தான் ஏற்கும் பாத்திரங்களுக்குரிய குணாம்சங்களை நடைமுறை வாழ்க்கையிலிருந்து கண்டுபிடித்துத் அதைத் திறம்படச் செய்யும் திறமை இவரிடம் இருக்கின்றது. குறிப்பிட்ட பாத்திரத்துடன் சம்பந்தப்பட்ட மனிதர்களை வீதி வழியாகச் செல்லும் போது வீடுகளில் கதைக்கும் போது நன்றாக அவதானித்து அவர்களுடைய சிறப்பான அம்சங்களைக் குறித்த பாத்திரத்துடன் பொருத்தமாகப் புகுத்தி நடிக்கும் திறமை இவரிடம் இருக்கின்றது. எடுத்துக்காட்டாக எந்தையும் தாயும் நாடகத்தில் சங்கரப்பிள்ளை என்ற பாத்திரத்தில் நடித்த போது தனது வீட்டுக்குப் பக்கத்தில் வாழ்ந்த ஒரு பரியாரியாரை அவதானித்து அவரின் சில சிறப்பு பண்புகளை உள்வாங்கிக் குறிப்பாக அவர் பிரச்சி னைகள் கஸ்டங்கள் வரும் போது உச்சந்தலையைச் சொறிவார். அந்த நுட்பத்தை தான் ஏற்ற சங்கரப்பிள்ளை பாத்திரத்தில் பிரயோகித்து நடித்ததாக இவர் கூறுவார். வேறு பாத்திரங்களில் தான் நடித்திருந்தாலும் சங்கரப்பிள்ளையாக நடித்ததே தனது மனத்துக்கு நன்கு திருப்தி அளித்ததாக இவர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெனம் நடிப்புத்துறையில் தன்னை கால் பதித்துக் கொண்டதற்குச் சினிமாவும் காரணமாக அமைந்தது. அந்தக் காலங்களில் தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த சிறந்த திரைப்படங்களைப் பார்த்து அதில் வரும் குறிப்பிடத்தக்க நடிப்புத் திறன்களை மாதிரியாக எடுத்து அதனை நாடகங்களில் பிரயோகிக்கும் வல்லமை இவரிடம் இருந்தது. குறிப்பாக நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் திரைப்படங்கள் தனது நடிப்புக்கு ஒரு வழிகோலாக அமைந்ததாக ஜெனம் கூறுவதுண்டு.



தனக்குள் குறித்த பாத்திரம் தொடர்பான கேள்விகளை எழுப்பி அதற்கான விடைகளையும் கண்டறிந்து நடிக்கும் திறன் இவரிடம் இருந்தது. உதாரணமாக குடிகாரன் என்ற பாத்திரத்தில் நடிக்க வேண்டும் எனின் ,அவன் யார் எதற்காக குடிக்கி றான். குடித்ததன் பின்னர் என்ன செய்கின்றான் எங்கே செல்கின்றான் எப்படிச் செல்கின்றான் என கேள்விகளை தனக்குள் எழுப்பி காரணகாரிய ரீதியில் நடிப்பை வெளிப்படுத்துவார்.

ஜெனம் நாடகங்களில் நடிக்கும் பொழுது குறிப்பிட்ட பாத்திரமாக வாழ்கின்றோம் என்ற நிலையை விடுத்து குறிப்பிட்ட பாத்திரமாகவே நடிக்கிறோம் என்ற உணர்வினைத்தனது நடிப்புநுட்பமாக வைத்திருப்பார். தனக்கு வழங்கப்பட்ட பாத்திரத்தின் சகல குணாம்சங்களையும் நன்றாக உள்வாங்கி அரங்கில் குறித்த பாத்திரமாக வாழுதல் என்பதற்கு அப்பால் குறித்த பாத்திரமாக நடித்தல் என்ற வரையறையில் தன்னை வெளிப்படுத்துவார். அத்துடன் உணர்ச்சி வசப்பட்டுநடித்தல்என்றதன்மையும்இவர்விரும்புவதில்லை. நல்ல நடிப்பென்பது விளையாட்டு மைதானத்திற்குள் நின்று விளையாடுவது போல இருக்க வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு எந்த உணர்ச்சியையும் அரங்கில் காட்டலாம். ஆனால் அதேவேளை நடிகர்கள் தங்களுக்குள் நெகிழ்வான போக்குடையவர்களாகவும் நிற்க வேண்டும் என்பார்.

இவர் எல்லாவகையான நாடகப் பாத்திரங்களையும் நடிக்கும் திறனைத் தன்னில் வளர்த்துக் கொண்டார். அந்த வகையில் இசை நாடகப் பாத்திரங்கள், வடமோடி தென்மோடிக் கூத்துப் பாத்திரங்கள், சமூகநாடகப் பாத்திரங்கள், அபத்தநாடகப் பாத்திரங்கள், சிறுவர் நாடகப்ப ாத்திரங்கள், அரசநாடகப் பாத்திரங்கள், நகைச்சுவை நாடகப் பாத்திரங்கள் என எல்லா வகையான நாடகப் பாத்திரங்களையும் நடிக்கும் திறனைத் தன்னிடம் வளர்த்துக் கொண்டார். இப்படிப்பட்ட திறமை ஏனையவர்களிடம் இருக்கும் எனக் கூறுவது கேள்விக்குறியே அப்படிப்பட்ட மிகச் சிறந்த நடிகன் கலைஞன் தான் ஜெனம்.

பெரும்பாலான நடிகர்கள் தங்களுடைய நடிப்புத்திறமைகளை ஏனையவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க தயங்குவார்கள். ஏனெனில் மற்றையவர்களுக்கு சொல்லிக் கொடுத்தால் அவர்கள் தங்களைவிட விஞ்சி விடுவார்கள் என்ற மனப்பாங்கு சில நடிகர்களிடம் இருக்கின்றது. ஆனால் ஜெனம் அப்படிப்பட்டவர் அல்ல. தனக்குத் தெரிந்த விடயங்களை ஏனையவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பார். மற்றைய நடிகர்களின் முன்னேற்றத்துக்குத்"திட்டம் வகுத்துக் கொடுப்பர்.. அவ்வாறான கள்ளங்கபுடமற்ற அற்புதமான ஒரு கலைஞர் தான் ஜெனம்.

அரங்க விபத்துக்களை மறைத்து நடிக்கும் திறமை இவரிடம் இருக்கின்றது. நாடக மேடையில் எதிர்பார்க்காமல் தவிர்க்க முடியாத சில சம்பவங்கள் நடக்கலாம். இதன் காரணமாக நடிகர் வசனங்களை மறந்து விடலாம். ஒரு பாத்திரம் காட்சியில் வரவேண்டிய நேரத்தில் வராது இருக்கலாம் கைப் பொருள்களை நடிகர் எடுத்து வாராமல் விடலாம் நடிகர்களின் அலங்கார ஒப்பனைகள் (தாடி, மீசை) கழன்று விட ஆயத்தமாகலாம். அப்படியான சம்பவங்கள் நடைபெற்றுவிட்டால் அதனைப் பார்வையாளர்கள் இனங்காண்பதற்கு முன்னதாகவே அதனை நாடக வடிவத்துக்குள் நாடக ஓட்டத்துக்குள் மாற்றிக் கொண்டு நாடகத்தைக் குழப்பமடை யாது திறம்பட நடத்திச் சென்று நடிக்கும் திறமை ஜெனத்திடம் இருக்கின்றது.

**விருதுகளின் அலங்காரம்**

நாடக அரங்கிலே தன்னுடையதிறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்தியதன் பலனாக பல விருதுகள் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. தினகரன் தமிழ் நாடக விழாவில் சிறந்த துணை நடிகருக்கான விருது (1969) யாழ்.மாவட்ட செயலகம் நடத்திய நாட்டுக் கூத்துப் போட்டியில் சிறந்த நடிகருக்கான விருது (1972) கலாசார அமைச்சின் தேசிய நாடக விழாவில் சிறந்த நடிகருக்கான விருது (1975,1980) சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞருக்கான வடமாகாண பிரதேச செயலகத்தின் விருது (1985) திருமறைக்கலாமன்றத்தின் சிறந்த நடிக்கருக்கான விருது (1990) கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தலைக் கோல் விருது (1995) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறந்த கலைஞருக்கான விருது (2009) தேசிய நாடக விழாவில் கலாபூசண விருது (2010) கலாசார அமைச்சால் நாடகக் ககிர்த்தி விருது (2010) மற்றும் வாழ்நாள் சாதனையாளருக்கான முது கலைஞர் விருது (2010) போன்ற பல விருதுகள் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக தனது அரங்க ஆளுமையால் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டு ஈழத்துக்கு பெருமைத்தேடித் தந்து தனக்குள் நீண்டதொரு அரங்க பாரம்பரியத்தை வைத்திருந்த சிறந்த ஒழுக்கப்பண்புள்ள கலைஞரான ஜெனம் இறுதிக்காலத்தில் இரு கண்களும் பார்வையிழந்த நிலையில் தனது மனைவி பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தமை எமது நாடக உலகுக்கு கவலை தருகின்ற விடயமாகும். எனினும் இவ்வாறான நோய்வாய்ப்பட்ட நிலையிலும் பல்வேறு நாடகம் சார் ஆலோசனைகளைப்பலருக்கும் வழங்கி வந்தார். என்பதை கேள்வியுறும் பொழுது எம்மனம் ஆனந்தம் கொள்கின்றது. இவ்வாறான நிலையில் கடந்த 29.04.2017 அன்று நடிப்புலகில் இருந்து விடுபட்டு இறைவனடி சேர்ந்தார்.

*இயக்குநர்*
*யாழ்ப்பாண முற்போக்கு*
*அரங்க இயக்கம்*

# இலக்கியத்தில் விருந்தோம்பல்

எஸ்.மல்லிகா

தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் தலையாயது விருந்தோம்பல். பசித்தவர் முகம் கண்டு, அவர்தம் பசியாற்றியவர்கள் தமிழர்கள். வீட்டுக்கு வந்தோரை வரவேற்று, அன்புக்கு அறமேற்றியவர்கள் தமிழர்கள். இத்தகைய தமிழ்க் குடியின் சிறப்பினையும் அவர்தம் விருந்தோம்பல் பண்பினையும் பழந்தமிழ் இலக்கியங்கள் விதந்துரைக்கின்றன.

இல்லறத்தில் விருந்தினரைப் பேணுதல் முக்கிய கடமையாகச் சுட்டப்படுகிறது. மாணவ நிலையில் இருப்போர், துறவிகள் மற்றும் துறவுக்கு ஆயத்தமாவோர் ஆகிய மூநிலையினர்க்கும் விருந்தளிக்கும் கடமை இல்லறத்தவனுக்கே உண்டு என்று இந்துமத நூல்களும் வலியுறுத்துகின்றன. இந்த விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை, இல்வாழ்க்கை ஆகாது என்று கூறப்படுகிறது. விருந்து என்றால், 'புதுமை' என்று பொருள். வீட்டுக்கு வரும் புதியவர்களுக்கு உணவு அளித்தல் விருந்தோம்பல் எனப்படும். இவ்வாறு வீட்டுக்கு வருவோரின் பசிப்பிணி போக்குவதுடன் அமையாது, அவர்கள் இளைப்பாறிச் செல்வதற்கு ஏற்றவகையில் வீட்டினையும் அமைத்திருந்தவர்கள் தமிழர்கள். அதாவது, அவர்தம் வீடுகளுக்கு வெளியே இரு திண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் விருந்தினர்கள் தங்கிச் செல்வார்கள்.



**சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்**

சங்க இலக்கியங்கள் காதல், வீரம், கொடையை மட்டுமன்றி இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றான விருந்தோம்பலையும் சிறப்பித்துக் கூறுகின்றன. விருந்தோம்பலில் தமிழரே பெயர் பெற்றவர்கள் என்பதனை அழுத்திச் சொல்கின்றன. பழந்தமிழர்கள் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டமையை, அக்கால நூல்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

சங்ககாலத்தில் ஐவகை நிலப்பகுதிகளிலும் அவற்றுக்கு ஏற்ப உணவு விருந்தாக அளிக்கப்பட்டிருப்பதாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. விருந்தினர் எந்த நேரத்தில் வீட்டுக்கு வந்தாலும், தலைவி இன்முகத்துடன் விருந்து பரிமாறுவாள் என்று விருந்தோம்பலின் சிறப்பைக் கூறுகிறது (அல்லி லாயினும் விருந்துவரின்...) நற்றிணை. சிறுபாணாற்றுப்படையில், ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கும் உணவு மற்றும் விருந்தோம்பல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பட்டினப்பாலை விருந்தினர்களுக்காக வடித்த கொலு கஞ்சியை 'யாறுபோல் பரந்தொழுகி' என்கிறது. அதேநேரம், குடும்பத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனைத் தீர்த்து வைப்பதற்காக யாராவது விருந்தினர்கள் வரமாட்டார்களா என்று தலைவன் ஏங்குவதாக நற்றிணை குறிப்பிடுகிறது.

இத்தகைய விருந்தினரை ஓம்பும் முறையை (பேணிக் காத்தல்) பொருநராற்றுப்படை விரித்துக் கூறுகிறது.

விருந்தினரிடம் நண்பனைப் போல உறவு கொண்டு, இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தனக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசு கன்றிடம் காட்டும் அன்பு போல அவர்களிடம் அன்பு காட்டி எலும்பே குளிரும்படியான அன்பால் நெகிழச் செய்ய வேண்டும் என்கிறது.

கேளிர்போல கேள் கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி
கண்ணில் காண நண்ணுவழி
பருகு அன்ன அருகா நோக்கமொடு

(பொருநராற்றுப்படை,7478)

இதேபோன்று, பலவகையான உணவினை விண்மீன்கள் போல கிண்ணத்தில் பரப்பி விருந்தினரை அன்போடு நோக்கி, அவர்கள் விரும்பியதைக் குறிப்பறிந்து கொடுத்து ஓம்ப வேண்டும் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பின் தானின்று ஊட்டி (477479)

விருந்து படைப்பவரே அருகில் இருந்து, விருந்தினர் விரும்பும் உணவினை வழங்க வேண்டும் என்று இங்கு கூறப்படுகிறது.

(தொடரும்...)

# அரிச்சந்திர புராணம் வடமோடிக் கூத்து பல வருடங்களுக்குப் பின் அரங்கேற்றம்







மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சுமார் 61 வருடங்களுக்குப் பின்னர் அரிச்சந்திர புராணம், வடமோடிக் கூத்து கடந்த சனிக்கிழமை இரவு அரங்கேற்றப்பட்டது.

ஈஸ்வரா கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் கொக்கட்டிச்சோலை குமரகுரு விளையாட்டு மைதானத்தில் அரங்கேற்றம் நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை கிராமத்தில் 1956ஆம் ஆண்டு அரிசந்திர புராணம், வடமோடிக்கூத்து இறுதியாக அக்கிராம மக்களினால் அரங்கேற்றப்பட்டுள்ளது. அதில் பாத்திரமேற்று நடித்த இரு கலைஞர்கள் மட்டுமே தற்போதும் உயிருடன் இருக்கின்றனர். அக்கூத்தினைத் தொடர்ந்து ஒரு சில கூத்துக்கள் இக்கிராமத்தில் ஆடப்பட்டுள்ளதாக பெரியவர்கள் தெரிவித்தனர்.

இவ்விழாவினை பார்வையிடுவதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகைதந்திருந்தனர். ஆசியுரையை கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதமகுரு மு.கு. சச்சிதானந்தக் குருக்கள், ஆலயக்குரு வ.சோதிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.


கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஸ், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவக பணிப்பாளர் சி.ஜெயசங்கர், கிழக்கு பல்கலைக் கழக கலை, கலாசார பீடாதிபதி மு.ரவி மற்றும் அரச உயரதிகாரிளும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர்.

கலைக்கழகத்தின் தலைவர் பி.நீதிதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கூத்துக்கலைஞர்கள் அனைவரும் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் 1956ஆம் ஆண்டு கூத்தில் பாத்திரமேற்று நடித்த இரு கலைஞர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (ய)

# சித்திரா பௌர்ணமி விரதம் இன்று

அராலியூர் வி.செல்வரத்தினம்



சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி சித்திரைப் பௌர்ணமி எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றது. இந்த நாளில் சந்திரன் முழுவலிமை பெற்று தனது முழுக்கிரகணத்தையும் பூமிக்கு அளிக்கின்றான். இதனால் சிறப்புப்பெறும் இந்த நாளில் வரும் பௌர்ணமி முக்கியமானது. ஆண்டின் முதல் மாதப் பௌர்ணமியாகவும் சித்திரைப் பௌர்ணமி வருவது இதன் சிறப்பம்சமாகும்.

சித்திரா பௌர்ணமி தினத்திற்குரித்தான தார்ப்பரியங்களையும், பெருமைகளையும் அறிந்து கொண்டு இந்தப் புண்ணிய தினத்தில் விரதம் அனுஷ்ட்டிப்பதால் இறந்துவிட்ட தமது தாயின் ஆத்மாவைப் புத்திரர்களால் நற்கதியடை வைக்கமுடியும் என்பது ஐதீகம். அத்துடன் இந்தக் காலத்தில் சிவனைத் தியானித்து வழிபடுபவர்கள் தாமும் நற்பேறு அடைய முடியும் என்பது திண்ணம். ஒவ்வொரு நாளும் ஆயுள் குறைந்து கொண்டே போகின்றது. இந்த அழிவுகள், பாவங்கள் போன்றவற்றிலிருந்து எம்மைச் சித்திரா பௌர்ணமி விரதம் காக்கும் என்பதால் இந்த விரதம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இறந்துவிட்ட தந்தையின் ஆத்மா நற்கதியடைவதற்கு ஆடி அமாவாசையன்று விரதம் அனுஷ்டிப்பதைப் போன்றே சித்திரா பௌர்ணமி இறந்த தாயாருடைய ஆத்மாவின் நலனுக்காகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்தத் தினத்தில் விரதமிருப்பதால் பிதிர்களுக்குரிய விரத நாளாகவும் இது அமைகின்றது. ஒவ்வொரு மாதமும் தாயை நினைத்து வழிபட முடியாதவர்கள் வருடத்தில் ஒருமுறை வருகின்ற சித்திரா பௌர்ணமி விரதத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். எமது கண்கண்ட தெய்வமாக விளங்கும் தாயை இந்தத் தினத்தில் வழிபட்டு ஆசியும் பெறுவோமாக.

முறையாக விரதம் பூண்டு, ஆலயம் சென்று, இறைவனிடத்தில் பக்திபூர்வமாக வழிபாடு செய்து அன்னதானம், சித்திரைக் கஞ்சி வார்த்தல் போன்றவற்றைச் செய்தால் தாயின் ஆத்மா நற்கதி பெறும். பிதிர்க்காரர்கள் ஆசீர்வாதமும் பெறுவர். குழந்தை பாக்கியமும் கிடைக்கும்.

குறித்த நாளில் சித்திரகுப்தன் குறித்தான ஒரு கதையும் உள்ளது. இந்த நாளில் அவரைத் தொழுது விரதம் இருப்பது மிகவும் சிறப்பானது என திருவிளை யாடற் புராணம் கூறுகிறது.

தேவேந்திரன் தேவியுடன் இணைந்து குழந்தை பேற்றுக்காக இறைவனை நினைந்து தவம் இருந்தன். இவர்களின் தவத்தை மெய்ச்சி, திருவுளங்கொண்டு இந்திரனின் துயரை நீக்கும் பொருட்டு சித்திர புத்திரனை இந்திரனுக்கும் இந்திராணிக்கும் பிள்ளையாகப் பிறக்குமாறு ஈசன் பணித்தருளினார். சித்திர புத்திரன் இந்திராணிக்குக் குழந்தையாகப் பிறந்த தினமும் இந்த நாளே என்று திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. இதனால் சித்திரா பௌர்ணமியன்று சித்திரகுப்த னையும் சிறப்பாக வழிபடுகின்றனர்.

உலக மக்களின் கர்ம வினைப் பலன்களை முறை தவறாமல் பதிவிடுபவர் சித்திரகுப்தன். என்றுமே பன்னிரெண்டு வயதுடைய சிரஞ்சீவியாகத் திகழ்பவர். அனைத்து உலகங்களின் கணிப்பையும் பரிபாலனம் செய்பவர். உலகத்து உயிரினங்கள் அன்றாடம் செய்யும் பாவ, புண்ணியச் செயல்களைத் தனது பதிவேட்டில் எழுதி வைக்கும் பணியைப் பொறுமையுடன் செய்து வருகின்றார்.

அவருடைய சந்நிதானத்தில் தலைப்பாகை, எழுதுகோல், ஏடுகள் சகிதம் சித்திரகுப்தன் அமர்ந்திருப்பதை நாம் காணலாம். அவர் தலைப்பாகை அணிய ஆரம்பித்ததன் கதை சிறப்பானது.

ஒருநாள் அவரது வேலையில் பெரும்பகுதி தீவினையாகவே அமைந்திருந்தன. தனது எழுதுகோல் இன்று நல்வினைகளே எழுதவில்லை என்று மிக வேதனைப்பட்டார். அதன் நிமித்தம் கவலை கொண்டு தன் தலையில் ஓங்கிக் குட்டிக் கொண்டார். இதனால் அவருக்குக் கடும் தலையிடியும் ஏற்பட்டது. தலைவலியைத் தாங்கிக் கொள்ள இயலாது கஷ்ரப்பட்டுக் கொண்டிருந்தார். தனது வேலையைச் செய்ய முடியாமல் இருந்தார். இதன் நிமித்தம் அனைத்து உலகங்களிலும் கர்மங்கள் தேக்கமடைந்தன. உலகங்களும் செயலிழக்கத் தொடங்கின. மனம்வருந்திய சித்திர குப்தன் கிருஷ்ணரை மானசீகமாகத் தொழுது தன்னைத் துன்பத்தி லிருந்து காப்பாற்ற வேண்டிக் கொண்டார். கிருஷ்ணரும் சித்திரகுப்தன் முன்பாகத் தோன்றி 'சித்திர குப்தா தலைவலி கடுமையாக இருக்கிறதா' எனச் சிரித்தபடி கேட்டார். தனது இடையிலிருந்த பீதாம்பரத்தையும், கர்ச்சையையும் அவிழ்த்து சித்திரகுப்தன் தலையில் கிரீடமாக அணிவித்தார். அதுவரை வாடிய முகத்துடன் இருந்த சித்திரகுப்தன் தலைவலி அகன்றது. தலையில் வந்த வலி தலைப்பாகையுடன் போய்விட்டது. இதுவே எந்த நேரமும் தலைப்பாகையுடன் சித்திரகுப்தன் இருப்பதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

கிருஷ்ணனை சித்திரகுப்தனார் தொழுது வணங்கித் தொடர்ந்தும் தனது வேலையைச் செய்யத் தொடங்கினார். நாம் செய்யும் குற்றங்களை சித்திரம்போல் இரகசியமாகத் தமது மனத்தில் நிலை நிறுத்திக் கொள்வதால் இவருக்குச் சித்திரகுப்தன் எனப் பெயர் ஏற்பட்டது.

உப்பு, பால், மோர் சேர்க்காமல் பகலில் மட்டும் உணவு உட்கொண்டு இந்த நாளில் விரதம் இருப்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். சித்திரைப் பௌர்ணமியன்று சித்திரகுப்தனை வழிபடுவதும் சிறந்தது. ஆனாலும் இந்தநாள் பிதிர்களுக்குரிய(தாய்) சிறப்பு விரதநாளாகவே முதன்மை பெறுகிறது. ஆக, மறைந்த நம் தாயை வழிபட்டு விரதம் கடைப்பிடித்து ஆசியும் பெறுவோமாக!

## சித்திரா பௌர்ணமியின் மகத்துவச் சிறப்புக்கள்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

சித்திரை மாதம் பௌர்ணமி அன்றே சந்திரன் முழுவலிமை பெற்று முழுக் கிரணத்தையும் சித்திரையின் கிரணத்தோடு சேர்த்துப் பூமிக்கு அளிக்கிறான். இதுபோல் வேறு எந்த நாளிலும் ஏற்படாதாகையினால் இந்த நாள் சிறப்புடையதாகும்.

ஆண்டிலே வரும் பன்னிரண்டு மாதங்களில் சித்திரை மாதம் முதலாவது மாதமாகவும், அறுபது வருடச் சுற்றிலே சித்திரை முதல் மாதமாகவும், சித்திரை முதலாம் நாள் இராசிச்சக்கரத்தில் முதலாவதான மேடமாகவும் கொண்டு விளங்கும் மேடராசிக்குரிய மாதமாகவும், புத்தாண்டு பிறக்கின்ற மாதமாகவும் கணித்து இந்நாள் சிறப்பிற்குரியதாகக் கொண்டாடப்படுகின்றது.

சித்திரை மாதம் சித்திரை நாளில் சித்திர புத்திரனார் தோன்றினார். எனவே அன்று கொண்டாடப்பெறும் விரதம் தனை சித்திர குப்த விரதம் என்பர். அவரவர்களின் பாவபுண்ணியங்களைக் கணக்கெடுத்துக் கொடுக்கும் பணி சித்திரகுப்த நாயனாரின் பணி என்று இந்துமத சாஸ்திரங்கள் கூறுகின்றன. யம தர்மராஜா மக்கள் அவரவர் செய்யும் பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப நீதி வழங்குவார்.

சிவபெருமானின் வேண்டுதலின் பேரில் சித்திரபுத்திரனார் யமதர்மராஜாவின் பிரதம கணக்காளராக மக்களின் நல்வினை தீவினைகளைப் பகுத்தறிந்து ஒப்புவித்துப் பாவபுண்ணியங்களைக் கணக்கிடுகின்றார்.

நாம் செய்யும் குற்றங்களைச் சித்திரம் போல இரகசியமாகத்தம் மனதில் நிலை நிறுத்திக் கொள்வதால் இவருக்குச் சித்திரகுப்தன் எனப்பெயர் வந்ததாகவும் கூறுவர். இந்த நாளில் அதாவது, சித்திரா பௌர்ணமியில் எமனுடைய பயத்திலிருந்து மீளலாம் என்பர். பாரத நாட்டிலே, காஞ்சிபுரத்திலே சித்திரகுப்தருக்குத் தனி ஆலயமும், கல் விக்கிரகமும், உலோகவிக்கிரகம் ஒன்றும் உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த உருவச் சிலையின் ஒருகையில் ஏடும், மறுகையில் எழுத்தாணியும் காணப்பெறுகின்றன.

சித்திரத்திற் தோன்றிய சித்திரகுப்த பெருமானுக்கு சிவபெருமான் அவருக்குரிய வல்லமைகளைக் கொடுத்து உலக ஆன்மாக்களின் நல்வினை தீவினைகளைப் பகுத்து அனுபவிக்கச் செய்யும் படி வேண்டினார். இத்தகு மகத்துவம் நிறைந்த சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்துவரும் நாள் சித்திரகுப்தனின் விரதநாளாகவும், சித்திராபூரணை வழிபாட்டுக்குரிய தினமாகவும் அனுட்டிக்கப்படுகின்றது.

ஆலயங்கள் தோறும் மக்கள் தான தர்மங்களில் ஈடுபட்டும், சித்திரைக் கஞ்சி வார்த்தும் இந்தத் திருநாளை வழிபாட்டுக்குரிய நாளாகச் சிறப்புறச் செய்கின்றனர்.

## முதலில் சினிமாவின் அடிப்படைகளை புரிந்துகொள்ள வேண்டும்

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிரண்டுபேர் செய்கிற தவறுகளால ஒட்டுமொத்தமாக சினிமா சாரந்து இயங்குகிற எல்லோருக்கும் சமூகத்தில சில பிரச்சனைகள் இருக்கு. சிலர் தங்களால எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவி செய்யினம். சிலர் பரிகாசமாகப் பார்க்கினம் ஒன்றும் செய்ய முடியாது. எல்லாத்தையும் எதிர்கொண்டாத்தான் எதை யாவது செய்ய முடியும்.

எந்தவித பிரச்சி னைகளும் ஏற்படாது என்ற நம்பிக்கையையும், உத்தரவாதத்தையும் சினிமா சார்ந்து இயங்கிறவர்கள் கொடுப்பார்களாக இருந்தால் நிறைய கலைஞர்கள் குறிப்பாக, பெண் கலைஞர்கள் இந்தத்துறையில் வந்து சாதிப்பார்கள். அதற்குரிய கட்டமைப்பையும் கட்டுப்பாட்டையும் நாங்கள் உருவாக்க வேணும். அதுக்கு சினிமா சார்ந்து இயங்குகிற எல்லாரும் ஒரு புள்ளியில, சிந்தனையில குவிய வேணும். அப்பிடி என்றால்தான் இது சாத்தியம்.

எங்களுடைய திரைப்படங்கள் மக்களிடம் போய்ச்சேருவதும் மிக மிக குறைவு. அதுவும் ஒரு குறை. ஒரு படம் வெளியாகினால் திரைப்படம் சார்ந்து இயங்கியவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும், உறவினர், நண்பர்களும்தான் இதில பங்கு பற்றுகிறார்கள். ஆக அது குறிப்பிட்ட சில எல்லையைத் தாண்டி போகவில்லை.


**சினிமா அடிப்படைகளை உணருதல்**

இங்க சினிமாவுக்கென்று பதிவுசெய்யப்பட்ட அமைப்பில்லை. அதை உருவாக்க சினிமாசார்ந்த கலைஞர்களுக்கிடையில ஒற்றுமை இல்லை என்பதும் ஒரு பெரிய பிரச்சினை. மாறி மாறி இதையே எல்லாரும் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். எப்படி ஒற்றுமைப்படுவது என்பது பற்றி இன்னும் எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை என்பது வேதனையான விசயம். ரெண்டு மூன்று தடவை எடுத்த முயற்சி கள் தோல்வியிலேயே முடிஞ்சது.

குறிப்பிட்ட சிலர்தான் ஈழத் தமிழ் சினிமாவுக்கான தனித்தன்மையை நோக்கி செயற்படுகினம் என்று நினைக்கிறன். இங்க தனிய ஒரு பாடல், காணொலி (அல்பம்) வெளியிட்டுவிட்டு இயக்குனர் என்ற பேரோடு வலம்வருகிறார்கள். முதலில் நாங்கள் சினிமாவுக்கான அடிப்படைகளை உணரவேணும்.

தென்னந்திய சினிமாவுக்குள் போகாமல் தனித்துவமான சினிமாவுக்குள் நான் இயங்க விடுதலைப்புலிகளுடைய சினிமாதான் காரணம் என்று சொல்லலாம். அந்த சினிமாவினுடைய எச்சமாகத்தான் நான் என்னுடைய சினிமாவை உருவாக்க முயற்சிசெய்கிறன். எங்களுக்கு மத்தியில நிறையப் பிரச்சினைகள் இருக்கு மக்களுக்கு எதாவது ஒரு செய்தியை சொல்லவேணும். காதல் என்பது இயல்பான ஒன்று அதுக்குள்ள ஏதாவது செய்தி இருக்குமென்றால் அதை செய்யலாம் வெறுமனே காதலைத் தான் காட்டப்போறமெண்டா அதை காலங்காலமா தென்னிந்திய சினிமா மிக அழகாக சொல்லி வருது. அதை விடப் புதுசா எதுவும் நாங்க காட்டப் போறதில்லை. அதுக்குள்ளயும் ஏதாவது செய்தி இருந்தால் செய்யலாம். இன்னும் கற்றுக்கொள்ள நிறைய இருக்கு. என்று கூறிக்கொண்டே அடுத்த வாடிக்கையாளரை புன்முறுவலுடன் வரவேற்கத்தொடங்கினார்.

# சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 110ஆவது ஆண்டு நினைவு விழா








சைவத்தமிழ்ப் பேரறிஞர் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 110ஆவது ஆண்டு நினைவு விழா சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய முற்றத்தில் உதயன் நாளிதழின் அனுசரணையுடன் நிலையத்தலைவர் ஓய்வுநிலை உதவித்திட்டமிடல் பணிப்பாளர் முருகுப்பிள்ளை தர்மலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.




நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கமும், மதிப்புறுவிருந்தினராக தசாவதானி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச்சங்க உபதலைவர் சோ.கங்காதரனும், கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க மாணவர்களால் இறைவணக்கப் பாடல்களும், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களும், சபையோர் எழுந்து நிற்க இசைக்கப்பட்டன. தொடர்ந்து வரவேற்புரையை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையச் செயலாளர் பிரபாகர் பிரியந் நிகழ்த்தினார். நிலையத்தலைவர் முருகுப்பிள்ளை தர்மலிங்கம் தலைமையுரையாற்றியதையடுத்து சிறப்பு விருந்தினரான வலயக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் உரையாற்றினார். அடுத்ததாக "சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தில் சதாவதானியின் வகிபாகம்" என்னும் தலைப்பில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுநிலைப் பிரதி அதிபர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். தொடர்ந்து முதன்மை விருந்தினரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் உரையாற்றினார்.

சதாவதானி குருபூசையை ஒட்டி நடத்தப்பட்ட வடமராட்சி வலயமட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பேச்சுக்களும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதன்மை விருந்தினரால் பரிசில்களும் வழங்கப்பட்டன. சதாவதானி முன்பள்ளியின் ஆசிரியர்கள் இருவரும் சனசமூக நிலைய நூலகம் எஸ்.ஆறுமுகமும் கௌரவிக்கப்பட்டனர்.

நீர்வேலி கலாகேந்திரா நடனப் பள்ளி மாணவர்களின் இசை நடன நிகழ்வுகளுடன் யாழ்.செயல்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந்தின் நெறிப்படுத்தலில் சிந்தனைக்கும் சிரிப்புக்குமான நவீனத்துவ நாடகங்களான ஏகாந்தம் வேடமுக நாடகமும் காட்டி பொம்மலாட்ட நாடகமும் மேடையேற்றப்பட்டதுடன் விழா நிறைவுற்றது. (க-173)

# இலங்கை வேந்தன் கல்லூரியின் இயல், இசை, நாடக அரங்கு இன்று முதல் 5 நாள்களுக்கு


கோப்புப் படம்

இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு - 2017 இன்று புதன்கிழமை தொடக்கம் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பி.ப. 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அ. பௌநந்தி தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய முதலாம் நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் நாட்டிய வாரிதி ஶ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் நாச்சிமார் கோவிலடி சிவதாஸ் பிரபாகரன் குழுவினரின் மங்கல இசையும், சைவ வித்தியா விருத்தி சங்க சைவ சிறுவர் இல்ல மாணவிகளின் வரவேற்பு நடனமும், இசைக்கச்சேரியும், சைலஜா குமாரசுவாமியின் மாணவிகளின் நாட்டிய அளிக்கையும், அமரர் கீதாஞ்சலி நல்லையாவின் மாணவர்களின் பண்பாட்டு நடனங்களும், குற்றவாளிக் கூண்டியில் இன்றைய இளைஞர்கள் எனும் தலைப்பில் வழக்காடு மன்றமும் நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா. பாலகணேசன் தலைமை தாங்கவுள்ளார். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினரின் மங்கல இசையும், சைவ வித்தியா விருத்திச் சங்க சைவ சிறுவர் இல்ல மாணவர்களின் கோலாட்டமும், முத்தமிழ் இனிமை எனும் தலைப்பில் அரியாலையூர் மிசாந்தியின் கவிதை மழையும், தொன்மம் கலைக்குழுவினரின் பறை இசை நடனும், நிருத்திய கீதாலயம் மாணவிகளின் நிருத்தியாஞ்சலியும், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினரின் மாமிக்கு வாச்ச மருமகள் எனும் தலைப்பில் நகைச்சுவை நாடகமும், வசந்தம் வில்லிசைக் குழுவினரின் நாவலர் இன்று இருந்திருந்தால் எனும் தலைப்பில் வில்லிசையும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள மூன்றாம் நாள் நிகழ்வுக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமை தாங்கவுள்ளார். யாழ்ப்பாணபோதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் த.பேராந்தராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் இணுவையூர் கரிகரன் குழுவினரின் மங்கல இசையும், சைவ வித்தியா விருத்தி சங்க கருணை இல்ல மாணவிகளின் வரவேற்பு நடனமும், இசை அரங்கமும், நீர்வையூர் பொன்சக்தி கலாகேந்திரா மாணவிகளின் நாட்டியாஞ்சலியும், சுவாமி விபுலாந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் மாணவிகளின் வள்ளி திருமணம் எனும் தலைப்பில் நாட்டிய நாடகமும், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் யாரோடு நோகேன் நாடகமும் நடைபெறவுள்ளது.


கோப்புப் படம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் நான்காம் நாள் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேரா சிரியர் த.ஜெயசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் பி.எஸ். பிச்சையப்பா ரவீந்திரனின் மங்கல இசையும், சுவாமி விபுலாணந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் மல்லாரி காளி கௌத்தும் நடனமும், லய நாத கதம்பம் இசை அரங்கமும், கீர்த்தனை நடனமும், குரலிசை இசைக்கச்சேரியும், தில்லானா நடனமும், சவால் எனும் தலைப்பில் நாடகமும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஐந்தாம் நிகழ்வு நடைபெறவுள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் மருத்துவ கலாநிதி வை யோகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் நாச்சிமார் கோவிலடி சபேசன் குழுவினரின் மங்கல இசையும், சைவ வித்தியா விருத்தி சங்க சைவ சிறுவர் இல்ல மாணவிகளின் குழு நடனமும், குரலிசையும், நல்லைகலா மந்திர் மன்ற மாணவிகளின் நாட்டிய அர்ப்பணமும், செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் எண்ணித்துணி சிந்து நடைக்கூத்தும் நடைபெறவுள்ளது. (க-10)

# 2017 வைகாசி மாத பலன்



## மேடம்

புரட்சியை விரும்பும் நீங்கள், நெருக்கடி நேரத்திலும் நேர்மையாக இருப்பீர்கள். 14ஆம் திகதி வரை உங்களுடைய ராசிக்கு பூர்வ புண்யாதிபதியான சூரியன் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால் நீங்கள் நினைத்த காரியம் நிறைவேறும். இழுபறியாக இருந்து வந்த வேலைகள் நல்ல விதத்தில் முடியும்.

மகளுக்கு நல்ல வரன் அமையும். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். பூர்வீக சொத்தை சீரமைப்பீர்கள். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அவர்கள் எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில், விரும்பிய பாடப் பிரிவில் உயர்கல்வித் தொடர்வதற்கான வசதி, வாய்ப்புகளை ஏற்படுத்துவீர்கள். என்றாலும் 15ஆம் திகதி முதல் சூரியன் 2ஆம் இடத்தில் நுழைவதால் முன்கோபம் அதிகமாகும்.

நீங்கள் கோபப்படக் கூடாது என்று நினைத்தாலும் உங்களை சிலர் கோபப்பட வைப்பார்கள். 25ஆம் திகதி வரை ராசிநாதன் செவ்வாய் 2இல் அமர்ந்திருப்பதால் செலவுகள் அதிகமாகும். பேச்சால் பிரச்னைகள் வரக்கூடும். எனவே இடம், பொருள், ஏவலறிந்துப் பேசுவது நல்லது. சகோதரங்களை அனுசரித்துப் போங்கள். உங்களின் தனாதிபதியான சுக்ரன் சாதகமான வீடுகளில் செல்வதால் வீடு கட்டுவதற்கு வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும். மனைவிவழியில் சில உதவிகள் வந்து சேரும். கேது உங்களுக்கு சாதகமாக இருப்பதால் சவாலான காரியங்களைக் கூட எளிதாக முடிப்பீர்கள்.

அஷ்டமத்துச் சனியும், சகட குருவும் தொடர்ந்துக் கொண்டிருப்பதால் அவ்வப்போது பலவீனமாக உணருவீர்கள். உங்களைப் பற்றிய வதந்திகளால் மன இறுக்கத்திற்குள்ளாவீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் இருக்கும்.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். வேலையும் கிடைக்கும். வியாபாரத்தில் பெரியளவில் முதலீடுகள் வேண்டாம். இருப்பதை வைத்து நடத்தப்பாருங்கள். கூட்டுத் தொழிலை தவிர்க்கப்பாருங்கள். உத்தியோகத்தில் அவ்வப்போது நெருக்கடிகள் இருக்கும். வேலையில் நீடிப்போமோ, நீடிக்க மாட்டோமோ என்ற ஒரு சந்தேகம் இருந்துக் கொண்டேயிருக்கும். கலைத் துறையினரே! புது வாய்ப்புகள் தேடி வரும். சகிப்புத் தன்மையாலும், வளைந்துக் கொடுத்துப் போவதாலும் ஓரளவு முன்னேற்றம் தரும்.

# கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தொடர் சொற்பொழிவுகள்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தொடர் சொற்பொழிவு நிகழ்வு எதிர்வரும் 12, 13, 14ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இத் தொடர் சொற்பொழிவினை வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் " தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தவுள்ளார்.

முதல் நாளான வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம் அரங்கில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்துணைத்தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெறும். தமிழ் வாழ்த்தினை செல்வி. சௌதாமினி மோகனசுந்தரம் இசைப்பார். தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச்சங்க இலக்கியக்குழுச் செயலாளர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் நிகழ்த்துவார். " சிலப்பதிகாரச் சிந்தனைகள் எனும் தலைப்பில் " தமிழ்மணி" அகளங்கன் சிறப்புச் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு தமிழவேள் க. இ. க. கந்தசாமி அரங்கில் கொழும்புத்தமிழ்ச்சங்கத்துணைத்தலைவர் வைத்தியகலாநிதி சி. அனுஷ்யந்தன் தலைமையில் நடைபெறும். தமிழ் வாழ்த்தினை திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன் இசைப்பார். " கம்பனும் வான்மீகியும்" எனும் தலைப்பில் " தமிழ்மணி" அகளங்கன் சிறப்புச் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு முத்தையா கதிர்காமநாதன் அரங்கில் கொழும்புத்தமிழ்ச்சங்கத்துணைத்தலைவர் த. அரியரத்தினம் தலைமையில் நடைபெறும். தமிழ் வாழ்த்தினை செல்வி. சிந்தூரி, செல்வி. சரவணசுந்தரி இசைப்பார் கள். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்துவார். " புறநானூற்றுச் செய்தி கள்" எனும் தலைப்பில் " தமிழ்மணி" அகளங்கன் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

# யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பெரியகடை சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் நிறுவன ஆதரவில் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன் மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் லயன். கனகசபை அருள்நேசன் மங்கலவிளக்கேற்றுவார். அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைமாணி தெ. திருவேரகன் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப்பார். வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறை மாணவன் ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீயும் வாழ்த்துரையை கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத் தலைவர் நா. சோதிநாதனும் ஆற்றுவர். சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் 'உள்ளுவதெல்லாம் வள்ளுவம்' என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார்.

சிறப்பு நடன நிகழ்வாக மேகிலா சிவஞானசுந்தர ஐயரின் நெறியாள்கையில் நல்லூர் சிவநர்த்தனாலய மாணவர் வழங்கும் குறள்வழி நடனம் இடம்பெறும். பல்துறை வள்ளுவம் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மாணவன் ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ தலைமையில் சிந்தனை அரங்கு இடம்பெறவுள்ளது. இதில் திருவள்ளுவர் ஓர் இலக்கியவாதி என கலைப்பீட மாணவி ப. கதிர்தர்சினியும் திருவள்ளுவர் ஒரு மருத்துவர் என மருத்துவபீட மாணவன் ப. பிரதீசும் திருவள்ளுவர் ஒரு சட்டத்தரணி என சட்டத்துறை மாணவிக. துளசியும்திருவள்ளுவர்ஒருமுகாமைத்துவவாதி என வணிகத்துறை மாணவன் சி. யசோகுலனும் கருத்துரையாற்றுவர். நிகழ்வின் நிறைவில் வாழ்க தமிழ் என்ற பொருளில் எஸ்ரி. குமரன், எஸ். ரி. அருள்குமரன் ஆகியோரது நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்கள் வழங்கும் நாடகம் இடம்பெறும். தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச. லலீசன் நன்றியுரை ஆற்றுவார்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1768 -மூன்றாம் ஜோர்ஜ் மன்னரை விமர்ச்சித்து எழுதியமைக்காக ஜோன் வில்க்ஸ் சிறையிலிடப்பட்டார். இதனையடுத்து லண்டனில் வன்செயல்கள் தொடங்கின.

1773 -வடஅமெரிக்க தேயிலை வியாபாரத்தில் பிரித்தானிய கிழக்கி நிறுவனத்துக்கு ஏகபோக உரிமை வழங்கும் தேயிலைச் சட்டம் பிரிட்டன் நாடாளுமன்றில் கொண்டுவரப் பட்டது.

1824 -லண்டன் தேசிய காட்சிச்சாலை பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

1837-நியூயோர்க் நகர வங்கிகள் செயலிழந்ததையடுத்து வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்தது.

1857 -இந்தியாவின் மீரட்டில் தமது கட்டளை அதிகாரிக்கு எதிராக உள்நாட்டு வீரர்கள் சுதந்திரப் போரைத் தொடங்கினர்.

1869 -ஐக்கிய அமெரிக்காவில் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கண்டங்களுக்கு இடையேயான முதலாவது தொடரிப் பாதைப் பூர்த்தியானது.

1908 -அமெரிக்காவில் முதல் முதலாக அன்னையர் குளம் மேற்கு வேர்ஜினியாவில் கொண்டாடப்பட்டது.

1940 -இரண்டாம் உலகப்போர் பெல்ஜியம் நெதர்லாந்து மற்றும் லக்ஸம் பேக் ஆகியனவற்றினுள் ஜேர்மனியப் படைகள் நுழைந்தன.

1940 -இரண்டாம் உலகப்போர் நெவில் சம்பேரியன் பதவி விலகியதை அடுத்து ஐக்கிய ராஜ்யத்தின் தலைமை அமைச்சராக வின்சன் சேர்ச்சில் நியமிக்கப்பட்டார்.

1975 -ஜப்பானில் சொனி கம்பனியால் பீற்றாமக்ஸ் வீடியோகசட்றைக்கோடர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1993 -தாய்லாந்தில் காதர் பொம்மை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் 156 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

1994 -தென் ஆபிரிக்காவின் முதல் கறுப்பின அரசதலைவரானார் நெல்சன் மண்டேலா.

1997 -ஈரான் கொறாவள் மாகாணத்தில் 7.3லய அளவிலான நிலநடுக்கத்தில் 1567 உயிரிழந்ததுடன் 2300 பேர் காயமடைந்தனர். 15000 வீடுகள் அழிவடைந்தன.

2003 -புலிகளை வெல்ல முடியாத பேசித்தீர்வைக் காணுமாறு அரசுக்குச் சித்தார்த்தன் ஆலோசனை.

2003 இணைந்தவடக்குகிழக்கினுள்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். அமைச்சர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை வெளியீடு

2006 தமிழ் மக்கள் மீது அரச பயங்கர வாதமா? அடியோடு மறுக்கிறார் அமைச்சர் நிமால் நிலமையை விளக்கி நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு.

## நாளை

சித்திரை-28
வியாழக்கிழமை -11.05.2017
திதி: பிரதமை பி.இ.05.08
நட்சத்திரம்: விசாகம் பி.ப.05.13
சுபநேரம்:07.24-08.54 வரை
ராகுகாலம்:01.24-02.54 வரை

# பிணை கிடைக்கும் என்று கூறி ஒப்புதல் பெற்றனர் அதிகாரிகள்

## புலிகளுடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் கைதானவர் சாட்சி

பூசாவில் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தாம் சொல்வதை எழுதித் தந்தால் நீதிவான் நீதிமன்றாலேயே பிணையில் செல்ல அனுமதி கொடுப்பார் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். அரச சாட்சியாக மாற வேண்டும் என்று கேட்டார்கள்.

இவ்வாறு நீதிமன்றில் சாட்சியமளித்தார் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் ஆயுதப் பயிற்சி எடுத்தமை உட்பட 4 குற்றங்கள் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்ட ஒருவர். 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு இடைப்பட்ட கால எல்லையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் ஆயுதத்தைப் பாகம் பிரித்துக் கழற்றுதல், கைக்குண்டு வீசி எறிதல், ரி 56 ரக ரிவோல்வரால் சுடும் பயிற்சி, உடல் ரீதியான பயிற்சி என்பவற்றைப் பெற்றனர் என்ற குற்றச்சாட்டுகளில் அத்திகே பிரசன்ன ஜயலத், ஸ்டென்லி கிரிஷனா ஆம்ஸ்ரோங் ஆகிய இருவரும் கிளிநொச்சியில் வைத்துக் குற்றப்புலனாய் வுப் பிரிவால் கைது செய்யப்பட்டனர். உண்மை விளங்கல் விசாரணை வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றுக்கு எதிரிகளின் சாட்சியப் பதிவுக்காகத் திகதியிடப்பட்டது ஸ்டென்லி கிரிஷனா எதிரிக் கூண்டில் நின்று சாட்சியமளித்தார்.

அழைப்பாணையின் பிரகாரம் சென்றபோது கைது செய் தார்கள். 6ஆம் மாடியில் கடந்த 18 மாத காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன் என்று அவர் கூறினார்.

உங்களுக்கு எதிராகச் சாட்சியமளித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீங்கள் எழுதிக் கொடுத்தீர்கள் என்று ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வாசித்துள்ளாரே என்று எதிரி சார்பில் முன்னிலையான சட்டத்தரணியால் கேட்கப்பட்டது. அதற்கு எதிரிக் கூண்டில் நின்ற ஸ்டென்லி கிரிஷனா பதிலளித்தார்.

அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரை மன்றில் வைத்தே நான் பார்த்தேன். பூசா தடுப்பு முகாமுக்கு ஒரு பைல் கொண்டு வந்தார்கள். நாம் சொல்வதை எழுதித் தந்தால் நீதிவான் நீதிமன்றாலேயே பிணையில் செல்ல அனுமதிப்பார் என்றனர். அரச சாட்சியாக மாறுமாறு கேட்டனர். நான் சொல்ல அவர்கள் எழுதினார்கள். 20, 30 தடவைக்கு மேல் எழுதினார்கள். நான் விளக்கமறியலில் இருந்தபோது எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. என் குடும்பத்தினர் கஷ்டப்படுவார்கள். இவற்றைப்பற்றியே நான் விசாரணைக்காக வந்தவர்களிடம் கூறினேன். நான் பொய் கூறவில்லை. அரசு என்மீது பொய்க் குற்றம் சுமத்தியே இவ்வளவு காலமும் சிறையில் வைத்துள்ளது. நான் புலிகளிடம் பயிற்சி எடுக்கவில்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்கு என் அம்மா என்னை விடமாட்டார். நான் அம்மாவின் பார்வையிலேயே இருந்தேன். நான் வீட்டில் ஒரு ஆண் பிள்ளை என்பதால் என்மீது அக்கறை அதிகம்.

விசாரணை அதிகாரிகளின் வற்புறுத்தலாலேயே நான் அவ்வாறு கூறினேன். எனது குடும்பத்தினரின் நலனுக்காக விளக்கமறியலில் இருந்து வெளியே வந்து குடும்பத் தைப் பார்க்கலாம் என்பதாலேயே அப்படிக் கூறினேன். அவர்கள் கூறியதைக் கூறினேன்.

நீதிவான் மன்றில் இவற்றைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனதுவழக்குஅழைக்கப்பட்டு கூண்டில் ஏறி ஏதாவது கூறுவதற்குமுன்னரேஅடுத்த தவணைக்குத் திகதியிட்டு விடுவார்கள். அதனாலேயே நான் இவற்றைக் கூற முடியவில்லை என்று அவர்சாட்சியமளித்தார். அந்திகே பிரசன்ன ஜயலத் சாட்சியமளித்தார்.

2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டேன். பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். உதவிப் பொலிஸ்அத்தியட்சகர் எனக்கெதிராகச் சாட்சியளித்துள்ளார். நான் அவ்வாறான தொருவாக்குமூலத்தை வழங்கவில்லை. நான் அவரை இந்த மன்றில்தான் பார்த்திருக்கின்றேன். இதற்கு முன்பும் பார்த்திருக்கின்றேன். ஒவ்வொரு முறை வரும்போதும் பல ஆவணங்களைக் கொண்டு வருவார்கள். நானும் கையெழுத்திட்டிருக்கின்றேன். அரச சட்டவாதி இதன்போது குறுக்கு விசாரணை மேற்கொண்டார்.

நீங்கள் பொய் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். பொய்ச் சாட்சியமளிக்கின்றீர்கள். பொய்ச் சாட்சியத்துக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கக் கூடும் என்று அவர் குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த சாட்சி, நான் பொய்யாகச் சாட்சியமளிக்கவில்லை என்றார்.

கட்டளைக்காக எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற -12)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா சிவகுரு

(முன்னாள் ஆசிரியர் – யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்)

தோற்றம் 26.11.1932 — மறைவு 21.04.2016

திதி: சித்திரை பௌர்ணமி

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
எமக்கு நல்வழி காட்டி
எமை வாழவைத்த
எமது குடும்பத் தலைவரின் ஆத்மா
இறைவனின் பதங்களில் அமைதிபெற
இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

28/8, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். (AJA) 511) (13)

குடும்பத்தினர்.

TRADE FINANCE & INVESTMENTS PLC
(Licensed by the Monctary Board Of the Central Bank of Sri Lanka
Under the Finance Business Act No. 42 of 2011
No.459,Union Place,Colombo 02
T.P. +94 - (0) 112 688 421/ +94 - (0) 112 688 422/ +94 - (0) 112 698 818
Fax: +94 - (0) 112 699 226 info@tfil.lk www.tfil.lk

பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு கிளிநொச்சி கிளையில்

| MODEL | REG.NO | CHASIS NO | CONDITION |
|---|---|---|---|
| PEASURE | NP BCE-0307 | MBLJF16EHFGA18621 | NO RUNNING |
| PULSAR | NP BCQ-6848 | MD2A11CZ9FWD46813 | NO RUNNING |
| DELUXE | NP BCQ-1221 | MBLHA11AZF9F01131 | RUNNING |
| ACTIVA | NP BCU-6274 | ME4JF504GF8192673 | RUNNING |
| PEASURE | NP BCS-7871 | MBLJF16EMFGF01446 | RUNNING |
| PEASURE | NP BCE-3980 | MBLJF16EHEGJ18026 | RUNNING |
| PULSAR | NP BCM-6006 | MD2A11CZ9FWA40632 | RUNNING |
| DELUXE | NP BDR-3201 | MBLHA11AZG9C00287 | RUNNING |
| APACHE | NP BDW-9599 | MD634KE41G2E26248 | NO RUNNING |
| SALUTO | NP BEH-8638 | ME1RE122BF0023297 | RUNNING |
| XTREAM | NP BDV-4870 | MBLKC12ELFGH00646 | RUNNING |
| MEDTRO | NP BDF-1188 | MD625CF13F1K25973 | RUNNING |
| WEGO | NP BDY-0799 | MD626AG44G1F57466 | RUNNING |
| PEASURE | NP BEB-3079 | MBLJF16EMGGD04767 | RUNNING |
| GLAMOUR | NP BCT-5615 | MBLJA06ANFGG06027 | RUNNING |
| APACHE-160 | NP BDW-7556 | MD634KE49G2E26241 | RUNNING |
| ZESTA | NP BDD-5583 | MD626CG4XF2E74922 | RUNNING |
| TVS AUTO | WP YJ-0874 | MD6M14PK184B16468 | NO RUNNING |
| PULSAR | NP BEF-3169 | MD2A11CZ5GWF47707 | RUNNING |
| DIO | NP BDX-9664 | ME4JF39BFG7009636 | RUNNING |
| APACHE | NP BDL-2481 | MD634KE63F2H54397 | RUNNING |
| DISCOV-125 | WP BAG-1492 | 2A15BZ20WA44396 | RUNNING |

☆ பணம் செலுத்தியவுடன் அன்னத்து ஆவணங்களினையும் பெற்றுக்கொள்ளலாம்
☆ லீசிங் வசதிகள் செய்து தரப்படும்.
☆ விற்பனையினை இரத்து செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் நிறுவனத்திற்கு உண்டு.
மேலதிக விவரங்களுக்கு 021 228 0110, 021 228 0108, 077 166 1648, 077 109 2236
(நிபந்தனைக்குட்பட்டது)

## மூன்றாம் ஆண்டு நினைவு

அன்னை மடியில் 14 . 01 . 1954



இறைவன் அடியில் 14 . 05 . 2014

### அமரர் மயிலன் கந்தசாமி

(ஓய்வுபெற்ற வ/புகையிரத நிலைய ஊழியர்)
திதி: பூரணை (10.05.2017)

கண்ணீர்ப் பிரளயத்தில் தவிக்கவிட்டு
மூன்றாண்டாய் சென்றுவிட்டீர் - எமை விட்டு
வேர் அறுந்து விருட்சமாய் இன்று விழுது இழந்து தவிக்கின்றோம்!
எமன் உங்களில் பாசம் வைத்து அழைத்துவிட்டான் - நாங்களோ
செய்வதறியாது தவிக்கின்றோம்! இருந்தும் என்றும் உங்கள்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (cs.3817)(13)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமலர் விஜயரட்ணம்



சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் விஜயரட்ணம் 08.05.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை விஜயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஜெயலக்சுமி தம்பதிகளின் தவப்புதல்வியும், கந்தையா சண்முகதாசன் அவர்களின் அன்பு சகோதரியும், ரஞ்சினி (ஆஸ்திரேலியா), ரஞ்சன் ( டுபாய்), சுகுமார் (தலவாக்கலை), சுரேஸ்குமார் ( உரிமையாளர் - சண்முகா ரெக்ஸ்றைல், கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ராஜ்குமார், மீரா, பத்மாவதி, சகிலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பெனிய மினோ பிறடி (Ben) இன் பாசமிகு பேர்த்தியும், ரதீபன், ரூபினி, சிறினிகேத்தன், அக்சோபயாயன், கஜானன், விஹாசினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வியோராஜ்ஜின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை. (cs/3831)(11)

தகவல்:
பிள்ளைகள்

021 225 0766

### சின்னையா சிவஞானம்

(ஓய்வு நிலை கிராம அலுவலர், திருக்கேதீச்சரம், மன்னார்)



மன்னார் விடத்தல் தீவைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, தபாற் கந்தோர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவஞானம் 08.05.2017 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சிவக்கொழுந்துவின் (ஓய்வு நிலை ஆசிரியை யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி) அவர்களின் அன்புக்கணவரும் சிவகுமார் (பிரான்ஸ்), சிவபவன் (லண்டன்), பவானி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமுதினி, இராஜ ராஜன் ஆகியோரின் அன்புமாமனும் சிவப்பிரியன், ஆரணி, துஷியந்தி, வினுசாகினி, யுகராஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் அம்பிகாவதி, கமலாம்பிகை, ஞானாம்பிகை, நீலாம்பிகை, சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மீசாலை ப.வே.இராஜரத்தினம் (குட்டி விதானை), சரஸ்வதி அல்லாரை, மார்க்கண்டு - இராஜபூபதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
சிவக்கொழுந்து ரீச்சர் ( மனைவி)

# ஓ.எல் பரீட்சை விண்ணப்பம் மே 31ஆம் திகதி வரை ஏற்பு

யாழ்ப்பாணம், மே 10

"எதிர்வரும் டிசெம்பரில் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ.சாதரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடையும். விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் விரைவில் அனுப்ப வேண்டும்"

இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

"பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்ப படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. தனியார் விண்ணப்பதாரிகளுக்கான மாதிரி விண்ணப் படிவங்களும் பரீட்சை நிலையங்கள் தொடர்பான விவரங்களும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவிடவேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்" என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்கு அமைய டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# தயாராகுங்கள்

## ஐ.தே.கவை உற்சாகப்படுத்தும் ரணில்

எதிர்காலத் தேர்தல்களுக்குத் தயாராகும்படி, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.


சிறிகொத்தாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில் உரையாற்றிய அவர், கூடுதல் பொறுப்புணர்வுடன் கூடிய கட்சியாக இளைஞர்களின் பங்களிப்புடன் ஐக்கிய தேசியக் கட்சியைப் பரந்துபட்ட அளவில் நவீனமயப்படுத்தவேண்டும்.

அமைச்சர்கள் தமது தொகுதிகளில் அதிகளவு நேரத்தைச் செலவிட வேண்டும். மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து தொகுதிகளில் மேற்கொள்ளப்படக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடவேண்டும்.

எந்தத் தேர்தலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கவேண்டும். தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டோ கூட்டணி வைத்துக் கொள்ளாமலோ, கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகக் கடுமையாக உழைக்கவேண்டும்.

தேசிய அளவிலான தேர்தல்களுக்கு முன்னதாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை, என்று கூறியுள்ளார். (து-5)



# கேள்வி அறிவித்தல்

## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2017

## மாந்தை மேற்கு பிரதேச சபை

**வேலைவிவரம்** **ஒப்பந்த இலக்கங்கள்**

**சின்னசன்னார் உள்ளக வீதி தாரிட்டு புனரமைத்தல் - NP/MN/MWPS/PSDG/2017/W/01**

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி இக்குறிப்பிட்ட திட்டத்திற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, **மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார். வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. வடமாகாணத்தில் நிர்வாக எல்லையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

04. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List)சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வீதி அமைப்பு, கட்டட அமைப்புக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர்,மாந்தை மேற்கு பிரதேச சபை,அடம்பன், மன்னார். (தொலைபேசி: 023-2051853/ 023-2051854)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாளகளில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை 31.05.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **செயலாளர் மாந்தை மேற்கு பிரதேச சபை,அடம்பன்,மன்னார்,** எனும் இடத்திலிருந்து 10.05.**2017**ஆம் திகதியிலிருந்து **31.05.2017** வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,**000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர்,பெறுகைக்குழு மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன், மன்னார்,** எனும் முகவரிக்கு 31.05.**2017**ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது,கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று நாள்கள் 02.08.2017) வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிவரம் | மதிப்பீட்டு தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| **NP/MN/MWPS/ PSDG/2017/W/01** | சின்னசன்னார் உள்ளக வீதி தாரிட்டு புனரமைத்தல் | 3.8 | 03 மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல்-வீதி | 38,000/- | 30 ஆகஸ்ட் 2017 |

11. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 19.05.2017ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 14.30 மணிக்கு மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

தலைவர்
... பெறுகைக்குழு
... அடம்பன்,
...
09.05.2017

(சி.29770)(13)

### இந்தியக் ஹெலிகள்...

கொண்டு வரப்பட்டுள்ளன. அவை மலையகத்திற்கு நேற்றுப் பரீட்சார்த்த பயணத்தை மேற்கொண்டுள்ளன.

இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ஐ.நா வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காகக் கொழும்புக்கு நாளை வியாழக்கிழமை வரவுள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும்போது, இந்தியத் தலைமை அமைச்சருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் ஏற்கனவே கொழும்பு வரத் தொடங்கியுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக, இந்தியத் தலைமை அமைச்சரின் பாதுகாப்பு அணியில் உள்ள நான்கு எம்.ஐ17 சிறப்பு உலங்கு வானூர்திகள் புதுடில்லியில் இருந்து கொழும்புக்கு நேற்று முன்தினம் வந்துள்ளன.

விமானிகள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் 49 பேருடன், புதுடில்லியில் இருந்து இந்த நான்கு உலங்கு வானூர்திகளும் புறப்பட்டிருந்தன. அவை நேற்று முன்தினம் மாலை கொழும்பை வந்தடைந்தன.

இவை பரீட்சார்த்தப் பயணமாக, மலையகத்துக்கு நேற்றுச் சென்றன. மலையகத்துக்கு இந்தியாவின் தலைமை அமைச்சர் மோடி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-5)

### ஐ.தே.க...

பால சிறிசேனவிடம் கோரியுள்ளதாக, ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி தினத்துடன் அமைச்சரவையிலும், அரச உயர் நிர்வாகத்திலும் மாற்றம் ஏற்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

இதற்கான முயற்சிகள் கடந்த ஆண்டு இறுதிக் காலப் பகுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு இணக்கம் தெரிவிக்காமையினால் அமைச்சரவை மாற்றம் தொடர்ந்து பிற்போடப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறுவது உறுதியாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், தாம் வகிக்கும் அமைச்சுப் பதவியில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது என்று அரச தலைவரிடம் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-5)

### முள்ளிவாய்க்கால்...

இதனைத் தொடர்ந்து வரும் நாள்களான மே 19 முதல் மே 21 வரையான நாள்களில் நாடு கடந்த தமிழீழ அரசின் இரண்டாவது நாடாளுமன்றின் ஏழாவது அமர்வு இதே நகரில் கூடவுள்ளது.

உலகின் பல பாகங்களிலுமிருந்து வரும் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், செனற் சபை உறுப்பினர்களும் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் அவற்றைக் கையாள்வதற்குப் பாவிக்கவேண்டிய உத்திகள் பற்றியும் விவாதிப்பர் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் ஊடக - மக்கள் தொடர்பாடல் அமைச்சு அறிவித்துள்ளது. (து-5)

### கிளிநொச்சி...

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப் பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். விசாரணையின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (து-4-101)

## அச்சுறுத்துகிறார்...

வகையில் ஆற்றிய உரை தொடர்பில், அந்தச் சங்கம் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புக்குக் கடிதம் மூலம் முறைப்பாடு செய்திருப்பதுடன் இது தொடர்பான விசாரணையொன்றுக் கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் இலங்கைப் பணிப்பாளர் சிம்ரின் சிங்குக்கு இலங்கை மருத்துவர் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்ஸா அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச மருத்துவர்கள் சங்கத்தில் சுமார் 28 ஆயிரம் மருத்துவர்கள் அங்கம் வகிக்கின்றனர். நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்த எங்களுக்குப் பூரண உரிமையுண்டு. எனினும், சுகாதார அமைச்சர் இனிமேல் எங்களது போராட்டங்களுக்கு இடமளிக்கப்போவதில்லையென பகிரங்கக் கூட்டத்தில் கூறியிருக்கிறார். பன்னாட்டுத் தொழிலாளர் தினத்தில் அவர் ஜனநாயக உரிமைகளை மதிக்காமல் இவ்வாறு பேசியிருப்பது தொழிற்சங்க உரிமைகளை நசுக்குவதற்குச் சமமாகும்.

சுகாதார அமைச்சரின் இந்தப் பேச்சு பற்றிய விசாரணையொன்று தங்கள் அமைப்பால் நடத்தப்படவேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம், என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## இந்திய...

மருத்துவர்களை வரவழைப்பதற்கான தீர்மானத்தை அரசு எடுத்திருக்கின்றது என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரச மருத்துவர்கள் முன்னெடுக்கும் அர்த்தமற்ற வேலை நிறுத்தங்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது எனவும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்தியாவிலிருந்து மருத்துவர்களை வரவழைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது எனவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த ஏற்பாட்டைச் செய்வதற்காகச் சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## வட மாகாண...

சபை அமர்வில் பங்கேற்காது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் திரும்பினார். வடக்கு மாகாண சபையின் 92ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அரச வேலைவாய்ப்பைக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் நேற்றுக் காலை முதல் பேரவைச் செயலகத்தின் வாயிலையும் முதலமைச்சர் அலுவலகத்தின் வாயிலையும் முற்றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், தமக்கான நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களும் பேரவைச் செயலகத்தின் வாயிலில் போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபை அமர்வில் பங்கேற்பதற்கு அங்கு வருகைதந்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பட்டதாரிகளுடன் பேச்சு நடத்தினார். பட்டதாரிகளின் கோரிக்கைகள் தொடர்பாக தன்னால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அவர்களிடம் அவர் எடுத்துரைத்தார்.

முதலமைச்சரின் கருத்தை ஏற்க மறுத்த பட்டதாரிகள், தமக்கு தீர்வை உடனடியாக வழங்குமாறும் முதலமைச்சரிடம் கோரினர். அதுவரை உள்ளே செல்ல அனுமதிக்கமாட்டோம் என்று முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களிடம் அவர்கள் தெரிவித்தனர்.

தன்னால் முன்வைக்கப்பட்ட விளக்கங் களை போராட்டத்தில் ஈடுபட்டோர் ஏற்கமறுத்ததால் சபை அமர்வில் பங்கேற்காது முதலமைச்சர் திரும்பினார்.

இந்த நிலையில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் மதியம்வரையில் சபை அமர்வுகள் இடம்பெற்றன. பட்டதாரிகளின் போராட்டத்தின் காரணமாக பேரவைச் செயலகம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம் அதனுடன் இணைந்த அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் வெளியேற முடியாது பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளுடன் இணைந்து தென்னிலங்கை தொழிற்சங்கத்தைச் சேர்ந்த பௌத்த துறவி ஒருவரும் பங்குபற்றினார். போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளுடன் மாகாண அமைச்சர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். அவர்களுக்கு நிலமைகளை மாகாண அமைச்சர்கள் விளக்கிக் கூறினார்கள். எனினும் பட்டதாரிகளுடன் நேரடியாக வந்து சந்திக்க மறுத்த வடக்கு மாகாண முதலமைச்சர், அவர்களின் போராட்டம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஊடக அறிக்கை மூலம் வெளியிட்டார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண அமைச்சர்களை சந்தித்த பட்டதாரிகள், வடக்கு மாகாண அமைச்சுக்களிலுள்ள வெற்றிடங்களுக்கு தம்மை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். அத்துடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்யும் போது பரீட்சை வைக்காது நேர்முகத்தேர்வு மட்டும் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர்.

“இது எமக்கு உட்பட்ட விடயமல்ல. இது தொடர்பில் நாங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்துகின்றோம். அவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்கள்” என்று அமைச்சர்கள் சார்பில் பதிலளிக்கப்பட்டது. இதனை ஏற்ற பட்டதாரிகள் அங்கிருந்து போராட்டத்தை கைவிட்டு சென்றனர். (வ-8)

## இந்திய, நேபாள...

ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு வெசாக் வைபவத்தில் தலைமை விருந்தினராக இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி கலந்துகொள்ளவுள்ளார். அதற்காக நாளை வியாழக்கிழமை மாலை மோடி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடையவுள்ளார். அவரை முழு அரச மரியாதையோடு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்பார்.

நேபாள அரச தலைவர் எதிர்வரும் சனிக்கிழமை இலங்கைக்கு வருகிறார். அவரையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முழு அரச மரியாதையோடு விமான நிலையத்தில் வரவேற்பார்.

இவை தவிர, பன்னாட்டு வெசாக் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக எட்டு நாடுகளின் அமைச்சர்கள் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## பொலிஸார்...

துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

“மோட்டார் சைக்கிளில் வந்த சிலர், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுவிட்டு தப்பித்தனர். வாகனத்தை செலுத்திய பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தார்.

வாகனத்தில் பயணித்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வீதியோரத்திலிருந்த கடையொன்றின் உரிமையாளரின் பிள்ளைகளும் சம்பவத்தில் படுகாயமடைந்தனர்.

குறித்த சிறார்கள் உள்ளிட்ட 6 பேர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்” என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



ஆரம்பம் - 27.05.2017 உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

Family Rehabilitation Centre - FRC
Vacancy Notice
FRC is a Psychosocial and Counselling Organization. looking for the suitable applicants to fill the following vacancies in the District Centres.

Psychosocial Workers - 01 Position (Mullaitivu)
Applicants must possess.
- A Diploma in Counselling from NISD
- At least 03 years counselling work experience.
- Willing to work in the office as well as in the field.
Remuneration will be around Rs. 30,000.00 depending on the qualifications and experiences.

Field Officers - 02 Positions (Mullaitivu and Vavuniya)
Applicants must possess.
- Minimum GCE A/L Education.
- At least 03 years NGO work experiences in project implementation / Admin and Finance is an added value.
- Willing to work in the field as well as in the Office.
- Having Three Wheeler driving licence is preferable
Remuneration will be around Rs. 23,000.00 depending on the qualifications and experiences.

General Requirements
- Computer literacy.
- Fluency in local language and working knowledge in English.
- Vaild Motor bike driving licence.

Please forward your CV with 02 references on or before 14.05.2017 to rc-north@frcsl.org or to the following address.
FAMILY REHABILITATION CENTRE (FRC)
No.481,A9 Road, Kilinochchi.
(ct/3825)(11)

CANADA , USA
study & work visa
Minimum Qualification O/L
- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L
Swiss, France
செல்ல வழிகாட்டல்
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

விற்பனைக்கு
குளிர்சாதனப்பெட்டி (L.G.Double Door) செற்றி என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 470 5540

காணி விற்பனைக்கு
யாழ். மத்திய கல்லூரிக்கு அண்மையில் சப்பல் வீதியில் 4 பரப்பும் யாழ். வெலிங்டன் சந்திக்கு அண்மையில் Clock Tower Road இல் 3பரப்பும் (2ஆம் காணி) விற்பனைக்குண்டு.
076 697 2287 (ct/3841)

வேலைக்கு ஆள்கள் தேவை
வடமராட்சியில் இயங்கும் “தமிழ்பாவை” இணைய வானொலிக்கு பெண் அறிவிப்பாளர் மற்றும் எடிட்டர்கள் தேவை.
www.tamilpavai.com
தொடர்பு:
021 226 1623/ 077 498 8118

மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த 7இல் செவ்வாய் 28 கிரகபாவமுடைய மணமகளுக்கு மணமகன் தேவை.
(AJA CS 3836) (14)
075 495 0015

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
- Latest training materials. ( Book 11 )
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
British Council'S
IELTS Registration Centre
Spoken English
Fluency Diploma
www.itdmi.com/english Hotline 0777 17 35 17
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி Tel.: 021-226 2470 | சாவகச்சேரி Tel.: 021-227 0773 | சுன்னாகம் Tel.: 021-224 1970 | கிளிநொச்சி Tel.: 021-228 5655

விஷேட பல்
வைத்தீய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)
றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## வித்தியா...

அதன்போது சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பகர்வுப் பத்திரம் ஒரு வாரத்துக்குள் முன்வைக்கப்படும் என்று சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதியால் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கின் விசாரணையை மேல் நீதிமன்ற நீதி பதிகள் மூவரடங்கிய 'ரயல் அட்பார்' தீர்ப்பாயம் முன்னிலையில் முன்னெடுக்க சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்று அறிய முடிகின்றது. இந்த விசாரணைகள் கொழும்பில் நடத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

தீர்பாயத்தை நியமிக்குமாறு சட்டமா அதிபரால் கோரப்படுமிடத்து தலைமை நீதியரசரால் அதற்கான மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் நியமிக்கப்படுவர். அவர்களில் ஒருவர் தீர்பாயத்தின் தலைவராக செயற்படுவார்.

(வ)

## கலப்பு...

இவ்வாறு முன்னாள் அரச தலைவரும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலணியின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித் தார்.

போர்க் குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படுவது தொடர்பில் சாதகமான கருத்தை, கொழும்பு அரசியலில் முக்கியமான தலைவர் ஒருவர் பகிரங்கமாக வெளியிட்டுள்ளமை இதுவே முதல் முறையாகும். ஆட்சியாளர்களான அரச தலைவரும், தலைமை அமைச்சரும், போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமேயில்லை என்று தொடர்ச்சியாக இடித்துரைத்து வரும் நிலையில், அதற்கு மாறுதலான நேர் எதிரான கருத்து வெளிவந்துள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனைச் செயலணி தனது அறிக்கையில் வெளிநாட்டு நீதிபதிகளுடன் கூடிய பொறிமுறையாலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியானதும், நியாயப்பூர்வமானதுமான தீர்வை வழங்க முடியும் என்பதை வலியுறுத்தியிருந்தது. இந்தச் செயலணி சுயாதீனமாகச் செயற்பட்டதால் மக்களின் கருத்தை நேரடியாகத் தெரிவித்திருந்தது. அரசின் ஆலோசனையைப் பெற்றுச் செயலணி எவ்வித கருத்தையும் முன்வைத்திருக்கவில்லை.

அரசு இன்னமும் இந்தச் செயலணியின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே நல்லிணக்கத்துக்கான செயற்பாட்டின் முக்கியமான அம்சம்.

காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

வெளிநாட்டு நீதிபதிகள் என்ற விடயத்தை முன்நிறுத்தி முன்னாள் அரசில் இருந்தவர்கள் தம் மீதுள்ள குற்றச்சாட்டை மறைப்பதற்காக இதனைத் திசை திருப்புகின்றனர்.

போரில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் நீதி கிடைக்க வேண்டியது கட்டாயமாகும். மின்சாரக் கதிரைக்கு அனுப்புவதாகவும், நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும் கதைகளைக் கூறி வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வருவதைத் தடுக்கின்றனர். வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறை தெளிவானதும் நம்பகத்தன்மை பொருந்தியதுமாக அமையும். இது அரசின் கருத்தல்ல. எனது தனிப்பட்ட கருத்தாகும்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதா? அல்லது வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் அரசே தீர்மானிக்கவேண்டும். புலம்பெயர் தமிழ் மக்களின் கூச்சல்களைக் கண்டுகொள்ள போவதில்லை. பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் கோரிக்கைகளையே நாம் கருத்திற் கொள்ளவேண்டும்.

முன்னாள் அரசின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டதால் பன்னாட்டு மட்டத்தில் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் நிலவிவந்தன.

அதனால் தான் இலங்கையின் உள்ளகப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை இணைத்துக் கொள்ளவேண்டுமென்ற யோசனையை நல்லிணக்கச் செயலணி வலியுறுத்தியிருந்தது. ஆனால், அரசு தமிழ் மக்களுக்குச் சார்பாகச் செயற்படுவதாகவும், விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவதாகவும் எதிர்தரப்பு பல்வேறு கருத்துகளை முன்வைத்து வருகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் சில சமயங்களில் சரியான இலக்கை நோக்கிப் படிப்படியாக முன்னேறுமா? என்பது எமக்குத் தெரியாது. இந்த விடயம் தொடர்பில் மக்களுக்கு சரியான புரிதலை மக்கள் பிரதிநிதிகள் வழங்கவேண்டும் என்றார்.

இதேவேளை, நல்லிணக்கப் பொறிமுறைக்கான மக்கள் கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி வெளியான பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த முன்னாள் அரச தலைவர் சந்திரிகா, இந்தச் செயலணி மக்கள் கருத்தை முன்வைக்கச் சொன்னால் தமது பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்கள். அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## குடிதண்ணீர்...

கோரிக்கைக்கு மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் நீதிமன்றில் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். இதனால் இது குறித்த கட்டளை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. சுன்னாகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் மற்றும் கிறீஸ் கலந்துள்ளதாகக் கூறப்பட்டது. அவை பற்றிய எழுமாற்றான ஆய்வுகளில் அது உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சுன்னாகம் தொடக்கம்வலி.வடக்குவரையான பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த தவணை இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். அதில், "சுன்னாகம் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தைச் சுற்றியுள்ள சுமார் 1.3 கிலோமீற்றர்களுக்கு மாத்திரம் நிலநீரில் ஒயில் மற்றும் கிறீஸ் கலந்துள்ளன. அதனால் குறித்த பகுதி நில நீர் மனித பாவனைக்கு உகந்ததல்ல. எனவே நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 1.5 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்களுக்கு மாத்திரம் தாம் தண்ணீர் வழங்குவதற்கு அனுமதி வழங்குங்கள்" என்று கோரியிருந்தனர்.

அது தொடர்பான ஆட்சேபனைக்காக இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச தலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான குழுவினர் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் சமர்ப்பித்திருக்கும் குறித்த ஆய்வு அறிக்கையானது, நொதேர்ன் பவர் நிலையத்திலிருந்து வரையறை செய்யப்பட்ட எல்லை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஒயில் மற்றும் கிறீஸ் பாதிக்கப்பட்ட இடங்கள் என்று அறிவிக்கப்பட்டுத் தண்ணீர் வழங்கப்பட்டுவரும் இடங்களில் உரிய ஆய்வு செய்யாது அந்த இடங்களுக்குத் தண்ணீர் விநியோகத்தை நிறுத்துவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுத் தற்போது தண்ணீர் வழங்கப்பட்டுவரும் இடங்களில் உரிய ஆய்வு செய்யும்வரை தண்ணீர் வழங்கப்படவேண்டும்.

குறித்த ஆய்வு அறிக்கை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் மாத்திரம் செயற்படுத்தியதே. இந்த விடயத்தில் சுகாதார அமைச்சின் ஆலோசனையும் கட்டாயம் பெற்றுக் கொள்ளப்படவேண்டும். ஆகவே 1.5 கிலோமீற்றர்களுக்கு மாத்திரம் தண்ணீர் வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனைய பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும் என்று சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றில் வலியுறுத்தினர்.

இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களும் இடம் பெற்றன. இதனையடுத்து இது குறித்த கட்டளைக்காக இந்த வழக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(த-4)

## பலாலி...

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இந்தப் பொது முக்கியத்து வம் வாய்ந்த பிரேரணையை நேற்றைய அமர்வில் முன்மொழிந்தார்.

அவர் பிரேரணையில் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் 6ஆவது அமர்வின்போது நிறைவேற்றப்பட்ட 71ஆவது தீர்மானத்தின்படி பலாலி வானூர்தித் தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றைச் சீரமைக்கவேண்டும் எனக் கோரப்பட்டதற்கு அமைய பலாலி வானூர்தித் தளத்தை எந்தவிதக் காணி சுவீகரிப்போ அல்லது நில விரிவாக்கமோ இன்றி ஒரு பிராந்திய சிவில் வானூர்தித் தளமாக மேம்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காங்கேசன்துறை துறைமுகத்தைத் துரிதமாக விரிவாக்கிச் சீரமைக்க வேண்டும் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரி மற்றும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் ஊடாக இந்திய அரசையும் இலங்கை அரசையும் இந்தச் சபை கோருகின்றது என தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்தப் பிரேரணை சபையில் இருந்த அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

**பின்னணி**

கடந்த 2013 ஆம் வடக்கு மாகாண சபையின் 6ஆவது அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பலாலி வானூர்தித் தளத்தை விரிவாக்கும்போது காணிகள் எவையும் சுவிகரிக்கப்படக்கூடாது. வானூர்தித் தளத்தில் பாவனையில் உள்ள ஓடுபாதையின் அளவு போதுமானதாகவே காணப்படுகின்றது. ஆகவே முன்னைய காலங்களில் பலாலியிலிருந்து திருச்சி நோக்கி வழங்கப்பட்டு வந்த வானூர்திச் சேவையை மீள ஆரம்பிக்க முடியும். அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்தைப் சீரமைத்துக் காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் கப்பல் சேவையை நடத்த வேண்டும் என வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-8)

## வேலை...

பரிந்துரை செய்யும் அதிகாரம் கொண்ட எங்களால் வேலைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது. வேலை பெற்றவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் போகும் கொழும்பு அரசே அதைச் செய்யவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பில் அவர் விடுத்துள்ள சிறப்பு ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சபை முன்பாக வேலை தேடும் பட்டதாரிகள் எனக் கூறப்பட்ட பல இளையோர் நின்றிருந்தனர். வடக்கு மாகாண சபையின் பக்கமாகச் செல்லும் பாதையிலும் வாயிற் கதவடைத்து கூட்டம் நின்றது. அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தேன். அவர்களுடன் நான் பேசிய விடயங்கள் தான் அவை.

முதலமைச்சர் மாநாட்டின்போது அரச தலைவர், வடக்குகிழக்கு மாகாண முதலமைச்சர்களுக்குக் கொள்கை ரீதியாக அளித்த வாக்குறுதியை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். கிழக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்துக்கும் மேலான பட்டதாரிகளுக்கு வேலை கொடுத்துவிட்டார் எமக்குக் கிடைக்கவில்லை என்ற ரீதியில் குறைபட்டுக் கொண்டார்கள். அவர்களின் புரியாமையை எடுத்து விளக்கினேன்.

வடக்கு கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் விரைவில் வேலை வாய்ப்பைக் கொடுப்பதாகக் கூறியதைத் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தமக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதே இடத்தில் வைத்து வாக்குறுதி அளித்ததை நினைவுபடுத்தி ஏன் இதுவரை அந்த வாக்குறுதி செயற்படுத்தப்படவில்லை என்று கேட்டார்கள்.

வடக்கில் ஆயிரத்து 500 பேர்களுக்கு உடனேயே வேலை வாய்ப்பைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதை அவர்களுக்கு விளக்கினேன். மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு அவர்களை இணைப்பது பற்றியும் பேசப்பட்டது என்று அறிவித்தேன். விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடங்கள் பல இருப்பதை அரச தலைவருக்கு எடுத்துக் காட்டியபோது அந்த வெற்றிடங்களை உடனே நிரப்ப நடவடிக்கைகள் எடுப்பதாக விவசாய அமைச்சர் வாக்குறுதி அளித்தார்.

இவற்றை எல்லாம் இளையோருக்கு எடுத்துச் சொல்லியும் தமக்கு வேலைகள் கிடைப்பது சம்பந்தமாக எமது உத்தரவாதத்தைப் பெறவே அவர்கள் முயன்றனர். உத்தரவாதத்தை நாம் தரமுடியாதென்றும் கொழும்பு அரசே அவற்றைத் தரமுடியும் என்றபோது சில இளையோர் அதட்டலாக எம்மை அவ்வாறான உத்தரவாதத்தைத் தருமாறும் இல்லையேல் அவ்விடத்தில் இருந்து அசையமாட்டோம் என்றும் கூறினார்கள்.

என்னால் கூறக் கூடியதை நான் கூறிவிட்டேன். மிகுதியை அரச தலைவருடன் அடுத்த வாரம் பேசியபின் கூற முடியும், என்று கூறிவிட்டு உள்ளே செல்ல எத்தனிக்கையில் வாயிற் கதவுகளுக்கு அவர்களே சங்கிலி போட்டுப் பூட்டும் இட்டுத் திறப்பை அவர்கள் வைத்திருக்கின்றார்கள் என்று தெரியவந்தது. திறக்குமாறு கேட்டபோது எவரும் முன்வரவில்லை. எனது பாதுகாப்புப் பொலிஸார் பூட்டை உடைத்து உள்ளே செல்ல நடவடிக்கை எடுக்கலாமா என்று கேட்டார்கள். பொது அலுவலரை தனது கடமைக்குச் செல்லாமல் தடுப்பது குற்றம் என்றும் அது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்க பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவா என்றும் கேட்டார்கள். நான் அவர்களைக் கட்டுப்படுத்தி வேலை தேடும் பட்டதாரிகள் இரண்டு மாத காலமாக வேலை வேண்டும் என்று போராடிவரும் அவர்களின் விடாமுயற்சிக்கும் உண்மையான பிரச்சினைக்கும் மதிப்பளித்து அங்கிருந்து அகன்றுவிட்டேன்.

அண்மையில் முதலமைச்சர்கள் மாநாட்டின் போது எம் பலதரப்பட்ட மக்கள் செய்து வரும் தொடர் போராட்டங்கள் பற்றி பிற மாகாண முதலமைச்சர்கள் முற்றிலும் அறியாமல் இருந்தமை எந்தளவுக்கு நாங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதை உணரவைத்தது. விரைவில் இளையோர் பிரச்சினைகள் தீர இறைவன் வழிசமைக்க வேண்டும் என்றுள்ளது.

(த-5)

## அமைச்சரவையை...

தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலருமான மகிந்த அமரவீர கருத்துத் தெரிவிக்கையில், தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்ன கூட்டு அரசில் இருந்து கொண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றார் என்ற குற்றச்சாட்டை, அமைச்சரவை இணைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன முன்வைத்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் இருவருக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த விடயம் பேசு பொருளாக இருந்தது. அரசதலைவர் மைத்திரியும் இதற்குக் கவலை வெளியிட்டிருந்தார். இருவருக்கும் இடையிலான கருத்து மோதல் தீர்த்து வைக்கப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளக் கூட்டு அரசின் இரு கட்சிகளும் உறுதி பூணவேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிந்து இணை அமைச்சரவைப் பேச்சாளர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

இவ்வாறு நியமிக்கப்படுவதால் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் ஏற்படும் சில கருத்து முரண்பாடுகள் தவிர்க்கப்படும்.

விரைவில் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இணங்கியுள்ளனர். அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் ஆட்சி அமையப் பெற்று ஒரு வருடத்தில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதேபோல் 1994 ஆம் ஆண்டு சந்திரிகாவின் அரசு அமையப்பெற்று மூன்று மாதங்களில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது.

இதேவேளை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கான பாதுகாப்பு, புலனாய்வுப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்க அமைவாகவே குறைக்கப்பட்டது என்றும் மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

(த-5)

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 4 | | | | | |
| 4 | | | | 7 | 9 | 2 | | |
| 7 | 5 | | | 1 | | 4 | | |
| 2 | | 3 | | | | | | |
| | | | 8 | | 5 | | | |
| | | | | | | 7 | | 3 |
| | | 1 | | 4 | | | 8 | 5 |
| | | 5 | 6 | 9 | | | | 7 |
| | | | | | 3 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 8 | 2 | 4 | 7 | 9 | 1 |
| 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 4 | 6 | 3 |
| 7 | 4 | 1 | 6 | 9 | 3 | 2 | 8 | 5 |
| 8 | 1 | 5 | 2 | 3 | 9 | 6 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 6 | 8 | 1 | 9 |
| 6 | 9 | 7 | 4 | 1 | 8 | 5 | 3 | 2 |
| 1 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 | 7 | 6 |
| 9 | 7 | 6 | 1 | 8 | 5 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 5 | 8 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விக்ரமுடன் இணையும் கீர்த்தி சுரேஷ்



விக்ரம்தற்போதுகௌதம்மேனன்இயக்கத் தில் 'துருவ நட்சத்திரம்' படத்திலும், விஜய் சந்தர் இயக்கத்தில் `ஸ்கெட்ச்' படத்திலும் நடித்து வருகிறார். இந்தப் படங்களைத் தொடர்ந்து ஹரி இயக்கத்தில் 'சாமி2' படத் தில் நடிக்கவிருக்கிறார். இப்படத்துக்கான கதாநாயகி மற்றும் பிற நடிகர், நடிகையர் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் 'சாமி' படத்தில் நடித்த த்ரிஷாவையே `சாமி2, படத்திலும் நடிக்க வைப்பதற்குப் படக்குழு ஒப்பந்தம் செய்துள்ளதாக முன்ன தாகப்பார்த்திருந்தோம். மேலும்'சாமி'முதல் பாகத்தில் நடித்த நடிகர்கள் பலரும் அதன் இரண்டாவதுபாகத்திலும்நடிக்க உள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

புதுவரவாக, `சாமி2, படக்குழுவுடன்கீர்த்தி சுரேஷும் இணையவுள்ளாராம். ஒரு முக் கிய கதாபாத்திரத்தில் அவரை நடிக்க வைக்கப் படக்குழு முடிவு செய்துள்ளதாகக் கூறப் படுகிறது. ஹரிமுன்னதாக `சிங்கம்2, `சிங் கம்3, படங்களில் இரு நடிகைகளை ஒப்பந் தம்செய்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. அதே போல்` சாமி2, படத்திலும்இருநடிகைகளை நடிக்க வைப்பதற்கு முடிவு செய்திருக்கிறா ராம்.

கீர்த்தி சுரேஷ் தற்போது, சூர்யாவுடன் இணைந்து `தானாசேர்ந்தகூட்டம்'படத்தில் நடித்து வருகிறார். அதைத் தொடர்ந்து தெலுங்கில் பவன் கல்யாண் உடன் இணைந்து புதிய படம் ஒன்றிலும், தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் உருவாக உள்ள சாவித்ரியின் வாழ்க்கை வரலாறு படத்திலும்கீர்த்திசுரேஷ்நடிக்கஇருக்கிறார். இன்னும் மூன்று மாதங்களில் `சாமி2 , படத்திற்கானபடப்பிடிப்புதொடங்கவுள்ளது. அதற்கான ஆரம்பகட்டப் பணிகளில் ஹரி ஈடுபட்டுள்ளார்.

♥ ரேமியோ ♥ @Killer_Chubbly

முஸ்லிமாக இரு
இந்துவாக இரு
பௌத்தனாக இரு
கிறிஸ்தவனாக இரு
இது அனைத்துக்கும்
முதல் மனிதனாக இரு

20 320 231

மாமா நீ என்னைக் கட்டி வச்சாலும் உன் பொன்ன சைட் அடிப்பேன்...



இதுவே என் கட்டளை... இதுவே என் சாசனம்...

இந்த வெயிட் பாக்கிற மிஷின பஸ் நிலையத்தில வைக்கிறதுக்குப் பதிலா...




ரேஷன் கடைக்கு முன்னாடி வச்சா... வச்சவங்களுக்கும் வருமானம்... மக்களுக்கும் பிரயோசனம்...

அடுத்தவன் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டால்...



அன்றே நீ வாழ்வில் தோற்று விட்டாய்...!



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உறவினர் செயலால் பிரச்சினை ஏற்ப டலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பணி யாளர்கள்பணிச்சுமைக்குஆளாவர். தெய்வ வழிபாடு அமைதிக்கு வழிவகுக்கும்.

**இடபம்:** நண்பருக்காகவிட்டுக்கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பொறுப்பு உண்டாகும். பணவரவுக்குக் குறைவி ருக்காது. பெண்கள் ஆடம்பரச் செலவில் ஈடுபடுவர். நற்பெயர் உண்டாகும்.

**மிதுனம்:** அன்றாடப் பணியில் ஆர்வம் கூடும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். உறவினருடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரவளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். மாமன், மைத்துனருக்குஉதவுவீர்கள். மாணவர்கள், நண்பர்களுடன் பொழுது போக்குவர்.

**சிங்கம்:** விட்டுக் கொடுத்துச் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். எதிர்பார்த்தநல்ல செய்தி வரத் தாமதம் உண்டாகும்.

**கன்னி:** சிலர் உதவுவது போல ஏமாற்றலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள்செலவில்சிக்கனத்தைக் கடைபிடிப்பர். உடல் நலனில் அக்கறை தேவை.

**துலாம்:** மனம், செயலில் புத்துணர்வு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் உபயோகப்பொருள்வாங்குவர். எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** சிலர் உங்களைப் புகழ்ந்துபேசி ஆதாயம் காண்பர். தொழில், வியாபாரம் உழைப்புக்கேற்ப வளர்ச்சி உண்டாகும். உறவினர்வருகையால்செலவுஅதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் நல்லது.

**தனுசு:** உறவினர் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிர்ஷ்டவசமாக வருமானம் உயரும். பெண்களின் தேவை குறைவின்றி நிறை வேறும்.

**மகரம்:** நிதர்ப்பொறுப்பால், அவசரப்பணிக்கு ஆளாகலாம். நல்லவர் ஆலோசனை தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியா பாரத்தில் சீரான லாபம் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** மற்றவர் பாராட்டும் விதத்தில் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால்தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில்முயற்சிக்கேற்பமுன்னேற்றம் உண்டாகும். லாபம்உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

## மென்பந்துத் துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 10
வடக்கு மகாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடர் இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை இடம்பெறவுள்ளது. ஆண்களுக்கான ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானங்களிலும், பெண்களுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானங்களிலும் இடம் பெறவுள்ளன. (ம-23)

## தடகளம்

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் இன்றும் (புதன் கிழமை) நாளையும் (வியாழக்கிழமை) யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே.விஜிதரன் தெரிவித்தார். (ம-23-108)

## பளுதூக்கல்

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாண மாவட்ட பளுதூக்கல் சங்கத்தினால் நடத்தப்படும் இருபாலாருக்குமான திறந்த மட்ட பளுதூக்கல் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் உள்ள பளுதூக்கல் பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)



# தனபாலன் கிண்ணத்தை வென்றது சென்.ஜோன்ஸ்

## இறுதியில் பற்றிக்ஸை வீழ்த்தி



யாழ்ப்பாணம், மே 10
சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் தனபாலன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியே கிண்ணம் வென்றது.
19 வயதுப் பிரிவினருக்கு இடையில் நடத்தப்பட்ட இந்தத் தொடர் 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக அமைந்தது.
சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக வியற்றிக் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், அனோசன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் கபிலன், செரோபன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.
51 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 3.3 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து வெற்றிபெற்றது.
கபில்ராஜ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றார். அவர் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ம-23)

## ஆவரங்கால் மத்தி, இந்து அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 10
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றன.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது முதலிரு செற்களையும் முறையே 25:13, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.
தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:14, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம். (ம-23)

## ஜோசவாஸ் ஐக்கிய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 10
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மன்னார் ஜோசவாஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி.
குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் ஜோசவாஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. யங்ஹென்றிஸ் அணியின் தனேஸ் ஆட்டத்தின் 5 ஆவது மற்றும் 9 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யங்ஹென்றிஸ்.
இரண்டாம் பாதியில் ஜோசவாஸ் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 35ஆவது நிமிடத்தில் டெசில், ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் அஜித், ஆட்டத்தின் 47ஆவது நிமிடத்தில் டன்சஸ் ஆகியோர் ஜோசவாஸ் அணியின் கோல்களைப் பதிவு செய்தனர். முடிவில் அந்த அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# றோயல் இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், மே 10
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.
குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் றோயலின் சார்பாக கோபன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 15 ஆவது நிமிடத்தில் விண்மீன் சார்பாக நிசாந்தன் பதிலடி கொடுத்தார்.
இரண்டாம் பாதியின் 31 ஆவது நிமிடத்தில் நிதர்சன், 35 ஆவது நிமிடத்தில் கோபன் றோயலின் சார்பாக கோல்களைப் பதிவுசெய்தனர். 38 ஆவது நிமிடத்தில் அருள்தாசன், 40 ஆவது நிமிடத்தில் யூட்கெனடி இருவரும் விண்மீனின் சார்பாக கோல்களைப் பதிவுசெய்தனர். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 3 கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது. (ம-108-23)



## ஞானவைரவர் சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 10
அல்வாய் விளையாட்டு விழாவின் கரப்பந்து வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது வெள்ளுருவை ஞானவைரவர் விளையாட்டுக் கழகம்.
அல்வாய் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான மின்னொளியிலான கரப்பந்தாட்ட தொடரின் இறுதி ஆட்டம், பெரியார் பகுதி அறிவருள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. நாவலடி கலைமகள் அணியை எதிர்த்து வெள்ளுருவை ஞானவைரவர் அணி மோதியது. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 12:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் நாவலடி கலைமகள் அணியை வீழ்த்தி அல்வாய் கிழக்கு வெள்ளுருவை ஞானவைரவர் அணி சம்பியனானது. (ம-108)

# சொல்லியடித்தார் யூஜனி பவுச்சர்ட்

## செரபோவா மீண்டும் 'அவுட்'



மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்னின் தொடர்) நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் கனடிய வீராங்கனை பவுச்சர்ட்டிடம் படுதோல்வியடைந்தார் செரபோவா. தான் ஏற்கனவே தெரிவித்ததைப் போன்று செரபோவாவை வீழ்த்தியுள்ளார் பவுச்சர்ட்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை கடும் போராட்டத்தின் பின்னர் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பவுச்சர்ட். இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் செரபோவா. முதலிரு செற்களின் முடிவில் இருவரும் தலா ஓர் வெற்றியுடன் இருந்தனர்.

மூன்றாவது செற்றைக் கைப்பற்றுபவரே அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறுவார் என்ற நிலையில் அந்த செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதிபெற்றார் பவுச்சர்ட்.

**நேரெதிர் வார்த்தை மோதல்**

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின்போது செரபோபாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிச் சோதனையில் தடைசெய்யப்பட்ட மெல்டோனியம் என்ற மருந்து இருந்தமை கண்டறியப்பட்டது. இதனால் செரபோவா 2 வருடங்களுக்குத் தடைபெற்றார். முன்னதாக முடிவடைந்த ஜேர்மனித் தொடரிலேயே அவர் மீண்டும் களமிறங்கினார். "செரபோவா ஓர் மோசடியாளர். அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கியிருக்கக்கூடாது. அவரை எதிர்கொள்ள வேண்டிவந்தால் நிச்சயம் வீழ்த்துவேன்" என்று பவுச்சர்ட் முழங்கியிருந்தார். தற்போது அவர், தான் சொன்னதைச் சாதித்துள்ளார். செரபோவாவை வீழ்த்திய பின்னர் பவுச்சர்ட் மிகுந்த ஆக்ரோசத்துடன் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனித் தொடரிலும் செரபோவா சாதிக்கத் தவறியிருந்தார். தற்போது அவர் மட்ரிட் தொடரில் இருந்தும் வெளியேறினார். (ம)



# ஈரானின் மெஸ்ஸி

ஈரான் மாணவர் ரேஸா பாராஸ்டேஸ் என்பவர் ஆர்ஜென்ரீனாவின் கால்பந்து நட்சத்திரம் லயனல் மெஸ்ஸி போலவே இருப்பதால் ஈரானில் சாலையில் அவருடன் செல்பி எடுத்துக் கொள்ள போட்டா போட்டி ஏற்பட்டு வருகிறதாம்.

சில வேளைகளில் பொலிஸார் போக்குவரத்தில் இவரால் ஏற்படும் தொந்தரவுகளுக்காக இவரை எச்சரிக்கவும் செய்கின்றனர்.

மெஸ்ஸிக்கும் ரேஸாவுக்கும் ஆச்சரியப்படத்தக்க வகையிலான ஒற்றுமைகள் இருப்பதால் பிரிட்டன் யூரோஸ்போர்ட் ஒரு முறை மெஸ்ஸி குறித்த செய்தியில் இவரது ஒளிப்படத்தைத் தவறுதலாக பயன்படுத்த நேரிட்டது.

சில மாதங்களுக்கு முன்பாக ரேஸாவின் தந்தை ரேஸாவை பார்சிலோனா சீருடையில் ஒளிப்படம் எடுத்து இணையத்தளங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். இதன்பின்னரேயே ரேஸா பிரபலமா னார். மெஸ்ஸி போன்று இருப்பதால் வெளியே போகும் போது பார்சிலோனா சீருடையில் (மெஸ்ஸி விளையாடிவரும் கழகம் பார்சிலோனா) செல்லத் தவறுவதில்லையாம்.

"என்னைத் தற்போது ஈரானிய மெஸ்ஸி' என்றே அழைக்கின்றனர். மெஸ்ஸி செய்யும் அனைத்தையும் என்னைச் செய்யச் சொல்லி வலியுறுத்துகின்றனர். சில வேளைகளில் நான் புதிய இடங்களுக்குச் செல்லும் போது மக்கள் என்னைப் பார்த்து அதிர்ச்சியடைவதும் உண்டு. என்னைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பது எனக்கு புதிய ஆற்றலை அளிக்கிறது" என்கிறார் ரேஸா. (ம)




## மீண்டும் வேண்டும் கௌதம் கம்பீர்

# சமூக வலைத்தளங்களில் பேராதரவு

இந்திய அணிக்கு கம்பீர் மீண்டும் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்று சமூக வலைத்தளங்களில் தற்போது காரசாரப் பதிவுகள் அவரது ரசிகர்களால் பதிவிடப்பட்டு வருகின்றன.

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட காரணத்தால் கம்பீர் அணியில் இணைத்துக் கொள்ளப்படுவார் என்ற கருத்துக்கணிப்புகள் இருந்தன. ஆனால் அவர் புறக்கணிக்கப்பட்டார். இதையடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தெரிவுக்குழுவை விமர்சித்து கம்பீரின் ஆதரவாளர்கள் சமூகவலைத்தளங்களில் தொடர்ந்து தமது கருத்துக்களைப் பதிவுசெய்து வருகின்றனர்.

'கம்பீர் புறக்கணிக்கப்பட்ட முடிவு ஒருதலைப்பட்டமானது', 'கம்பீருக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையில் ஏதோ பிணக்கு உள்ளது', சிறப்பாக விளையாடும் ஒருவரை புறக்கணித்து தவானைத் தெரிவுசெய்தது எந்த 'அடிப்படையில்' என்றவாறாக அவர்களது பதிவுகள் அமைந்துள்ளன. (ம)



# சன்டீப் சர்மாவுக்குத் தண்டம்



நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பஞ்சாப் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சன்டீப் சர்மாவுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

பஞ்சாப் அணி களத்தடுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஓர் பந்துப்பரிமாற்றத்தில் சன்டீப் சர்மா, நடுவரிடம் சொல்லாமல் பந்துவீசிக்கொண்டிருந்த பக்கத்தை மாற்றி வீசினார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதியின் படி இது முறையற்ற பந்து. எனவே நடுவர் அதற்கு முறையற்ற பந்துக்கான அழைப்பை விடுத்தார். இதை ஏற்கமறுத்த சன்டீப் நீண்டநேரமாக நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் அந்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் 50 சதவீதம் சன்டீப்புக்கு தண்டமாக விதிக்கப்பட்டது. (ம)

# சங்காவுக்குப் போட்டியாக மகேல




இங்கிலாந்துக் கழகங்களில் ஒன்றான லங்கா ஷைருக்காக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல ஒப்பந்தமாகியுள்ளார். இங்கிலாந்துக் கழகமான சர்ரேக்காக சங்கா ஏற்கனவே ஒப்பந்தமாகியுள்ளார். சர்ரேயும் லங்கா ஷைரும் எதிர்த்து விளையாட நேர்ந்தால் சங்காவுக்குப்போட்டியாக மகேல அமைவார். ரி-20 தொடரொன்று அங்கு விரைவில் நடைபெறவுள்ளது. ரி-20 ஆட்டங்களின் அனுபவம் மகேலவுக்கு தாராளமாக உள்ளது. உலகக்கிண்ணம் வென்ற இலங்கை அணியில் இடம்பிடித்திருந்தார். பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் கராச்சி கிங்ஸ் அணிக்காகவும், நியூசிலாந்து கழகங்களுக்கு இடையிலான தொடரில் சென்றல் ஸ்டேக்ஸ் அணிக்காகவும், ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப், டில்லி, கொச்சி ஆகிய அணிகளுக்காகவும் களமிறங்கியுள்ளார். தற்போது நடைபெறவரும் ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியின் தலைமைப் பயிற்சியாளராகவும் உள்ளார். இந்த நிலையில் அவரை லங்கா ஷைரும் ஒப்பந்தம் செய்தது. (ம)

Bcs, BA, B.com
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்குரிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பதிவுகள் முடிவுதிகதி: 15.05.2017
- மேற்குறிப்பிட்ட பட்ட நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு: MA,MCom, MSc, MBA இவற்றுக்குரிய பதிவுகளும் நடைபெறுகின்றன.
கவனிக்குக: விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்
(aja 1983)
விவரங்கட்கு: யாழ். இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம்
021 2228148
021 568 9477
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கஸ்பார் மரியறோஸ் தங்கராசா



வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் நவிண்டில் நாவலர் மடத்தடி நெல்லியடியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கஸ்பார் மரியறோஸ் தங்கராசா நேற்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கஸ்பார் மற்றும் மரியசெபமாலை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - ஜேற்றூட் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மரியமலரின் அன்புக் கணவரும் டிலோஜின் (பிரான்ஸ்): மரியடினேஸ்(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, சாவகச்சேரி), டினோசன் (டோகா), டிக்சித், சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் குலச்சந்திரன் (பிரான்ஸ்), டயானா, றஜனி ஆகியோரின் அன்பு மாமனும் செலினா, செறினா, அப்சலோன், அஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஐஸ்வரியம், லீவிமலர் பொன்ராசா, சறோ, காலஞ்சென்ற வின்சன் பெனடிற் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (11.05.2017) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. 3.00 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0771342561,
0773798543

தகவல்:
குடும்பத்தினர்.

# கொல்கத்தாவை மடக்கியது பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தியது பஞ்சாப்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்து கொல்கத்தா. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், 6 இலக்குகள் இழப்புக்கு 167 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மக்ஸ்வெல் 44 ஓட்டங்களையும் சகா 38 ஓட்டங்களையும், வோக்ரா 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வோக்ஸ், குல்தீப் இருவரும் தலா 2 இலக்குகளையும், உமேஸ் யாதவ், கிரான்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா, 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 153 ஓட்டங்களை மட்டுமே பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. லின் அதிகபட்சமாக 84 ஓட்டங்களைக் குவித்தார். (ம).



தேவை
Mobiles Apps Creator
உடன் தேவை.
தொடர்பு - 077 277 2431

வானொலி விளம்பர குரல்கள் தேவை
தமிழ், ஆங்கில மொழியில் வானொலி விளம்பரம் செய்வதற்கான குரல்கள் தேவை.
தொடர்பு -077 277 2431

சிட்டிழுப்பு வாரம்: 563
சீட்டிழுப்பு திகதி: 09.05.2017
வெற்றி இலக்கங்கள்
46 56 60 64 W
ரூ. 26,972,587/-

சீட்டிழுப்பு வாரம்: 134
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 09.05.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 85,877,840/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
N 02 05 47 72

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 09.05.2017
வெற்றிவாரம் 2130
வர்ணம் நீலம்
கும்பம்
15 18 28 51
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3, 887, 008/=
2017.05.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

Mobile Phone
Technician Course



Smart & All Mobile Phones
Hardware , Software and unlocking
12th batch starts on
13.05.2017
✔ செயல்முறையுடன் கூடிய வகுப்புக்கள்.
✔ மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்.
✔ குறைந்த செலவு.... நிறைந்த பயன்.....
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

SURVEY OF FERTILITY CLINICS
THE TIMES OF INDIA
NO. 1 FERTILITY CENTRE IN CHENNAI
NO. 6 @ NATIONAL LEVEL IN INDIA
PFRC
பிரசாந்த்
குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்
முன்பதிவிற்கு: Sri Lanka Cell No.:
075 400 0012
075 492 7575
IVF Centre of International Excellence by IMTC
→ பல ஆண்டுகளாக இலங்கை மக்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரசாந்த் மருத்துவமனையில் இதுவரை ஆயிரக்கணக்கான யாழ் தம்பதியினருக்கு குழந்தை கிடைத்து மகிழ்ச்சியாக இருக்கின்றனர்...!
→ உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு!
→ புதிய அணுகுமுறைகளில் நவீன சிகிச்சைகள்!
→ உங்கள் குழந்தை பிறப்பை உறுதிபடுத்திக் கொள்ள வாங்க சந்திக்கலாம்.. யாழ்ப்பாணத்தில்...!
சிறப்புச் சலுகைகள்!
பதிவு செய்யும் முதல் 250 பேருக்கு...
ஐ.வி.எஃப் சிகிச்சைக் கட்டணம் 7,00,000 LKR! சிறப்பு சலுகையாக இதில் தேர்வு செய்யப்படும் 3-பேருக்கு ஐ.வி.எஃப் முற்றிலும் இலவசம்!
தம்பதியினருக்கான இருவழி விமானச் சீட்டுகள் இலவசம்!
முதற்கட்ட சிகிச்சைக்கான 5 நாட்கள் தங்குமிடம் இலவசம்!
விமான நிலையம் ⟷ மருத்துவமனை போக்குவரத்து இலவசம்!



MedExPo Jaffna 2017
International Healthcare and Medical Exhibition
May 19, 20, 21 - 2017
Stall No. 1, 2, 3, 4, 5, 6
at Vembadi Girls High School, Jaffna, Sri Lanka
குழந்தை கிடைத்த தம்பதிகளும் Dr. கீதா ஹரிப்பரியா அவர்களை யாழ்ப்பாணத்தில் நேரில் சந்திக்கலாம்.
அவர் வழங்கவிருக்கும் குழந்தைகளுக்கான சிறப்பு பரிசை பெற்றுக் கொள்ளலாம்.



DR. GEETHA HARIPRIYA AND
PRASHANTH FERTILITY RESEARCH CENTRE (PFRC)
FOR BEING AWARDED THE INDIA'S FASTEST GROWING
HEALTHCARE BRANDS & LEADERS 2016
At the Asioone Healthcare Awards, Singapore on 24 January 2017
NO. 77, HARRINGTON ROAD, CHETPET,
CHENNAI-31, TAMIL NADU, INDIA.
0091-98410-30388 | 0091-44-422-77777
PFRCIVF.COM HARIPRIYAGEETHA@GMAIL.COM

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.